# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2018

## ஓய்வூதியத் திணைக்களம்


| | | |
|---|---|---|
| தொலைபேசி | : | 011-2209800 |
| தொலைநகல் | : | 011-2342078 |
| மின்னஞ்சல் | : | info@pensions.gov.lk |
| இணையதளம் | : | www.pensions.gov.lk |

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 01. | ஓய்வூதியத் திணைக்களம் | **1- 5** |
| 01. 1. | அறிமுகம் | 1 |
| 01. 2. | தொலை நோக்கு மற்றும் பணி | 2 |
| 01. 3. | நிறுவன கட்டமைப்பு | 3 |
| 01. 4. | அனுமதியளிக்கப்பட்ட பதவியணி | 4 - 5 |
| 02. | திணைக்களச் செயற்பாடுகள் | **6 - 11** |
| 02. 1. | பதவி செய்தல் | 6 - 7 |
| 02. 2. | கொடுப்பனவு ஒழுங்குபடுத்தல் | 7 - 8 |
| 02. 3. | கிடைப்பனவு ஒழுங்குபடுத்தல் | 8 - 9 |
| 02. 4. | அபிவிருத்தி முன்னெடுப்பு | 9 - 10 |
| 02. 5. | தொடர் நடவடிக்கை | 10 - 11 |
| 03. | வருடாந்த நிகழ்ச்சிகள் | **12 - 18** |
| 03. 1. | தேசிய ஓய்வூதியகாரர் தினக் கொண்டாட்டம் | 12 |
| 03. 2. | தொழில்நுட்ப அமர்வு | 13- 14 |
| 03. 3. | உள்ளகப் பயிற்சி வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்பு முகாமை | 14 - 16 |
| 03. 4. | அறிவு முகாமை | 16 |
| 03. 5. | வெளிவாரியான செயற்பாடுகள் | 16 - 18 |
| 04. | புதிய அறிமுகங்கள் | **19 - 21** |
| 04. 1. | பௌதிக மேம்படுத்தல்கள் | 19 - 20 |
| 04. 2. | விடய அறிவை மேம்படுத்தல் | 20 - 21 |

05. அடைவுகள் **22 - 23**

06. ஓய்வூதியக் கொடுப்பனவுகள் **24 - 33**

06. 1. வருடாந்த ஓய்வூதியகாரர்களின் எண்ணிக்கை 24 - 28

06. 2. பணிக்கொடைக் கொடுப்பனவுகள் 28 - 29

06. 3. நிலுவைச் சம்பளங்கள் செலுத்துதல் 30

06. 4. அரச சேவை சேமலாப நிதியக் கிடைப்பனவுகள் மற்றும் கொண்டுப்பனவுகள் 31 - 32

06. 5. கட்டட வாடகை கிடைப்பனவுகள் மற்றும் விடுமுறை பங்களாக்களின் வருமானம் 33

07. நிதிக் கூற்றுக்கள் **34- 51**

07. 1. நிதிச் செயலாற்றுகைக் கூற்று 35

07. 2. நிகழ்ச்சிகளின் அடிப்படையில் செலவுச் சுருக்கம் 36

07. 3. நிகழ்ச்சித்திட்டங்களின அடிப்படையில் செலவுக் கூற்று 37-39

07. 4. நிகழ்ச்சிகளின் அடிப்படையில் செலவு நிதியீட்டச் சுருக்கம் 40

07. 5. உள்ளூராட்சிச் சேவைக் கணக்குகள் 41-45

07. 6. சமூகப்பாதுகாப்புபங்களிப்புத்தொகை (மாகாணசபைகள்மற்றும்மத்தியஅரசு) 46-47

07. 7. ஆசிரியர் விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நிதியக் கணக்குகள் 48-49

07. 8. அரச சேவை சேமலாப நிதியக் இறுதிக் கணக்குகள் 50-51

08. கணக்காய்வு அறிக்கை **52 - 93**

# 01. ஓய்வூதியத் திணைக்களம்

## 01.1.அறிமுகம்

இலங்கை அரச ஊழியர்களுக்கு மத்தியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அளப்பரிய சமூகப் பாதுகாப்பு வேலைத் திட்டமாக விளங்கும் அரச சேவையில் ஓய்வூதிய முறைமையானது 1900 ஆம் ஆண்டுகளில் பிரித்தானிய கலனித்துவ ஆட்சியின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அது பழமையானதாகவும் காணப்படுகின்றது. என்றாலும் அரச ஊழியரின் மறைவிற்குப் பின்னர் பொருளாதார மற்றும் சமூக ரீதியாக அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கும் விதவைகள் மற்றும் அநாதைகளுக்கான சமூகப் பாதுகாப்பு முறைமையொன்றாக அதற்கு முன்னரே நிலவியதாக அதாவது 1898, இலக்கம் 01 இனையுடைய விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்ட நிதிய கட்டளைச் சட்டம் இதற்கு சாட்சியமளிக்கின்றது. இச் சட்டம் மற்றும் 1934 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஸ்தாபிக்கப்பட்ட ஓய்வூதிய பிரமாணக் குறிப்பானது சட்டரீதியான ஆவணங்களினால் அமுல்நடாத்தப்படும் வகையில் அரச சேவையில் ஓய்வூதிய நடைமுறையை இலங்கை அரசு சட்டமொன்றாக சட்டரீதியாக பிரகடனப்படுத்தியது.

ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பு 1934 ஆண்டு தொடக்கம் பல்வேறு சந்தர்ப்பங்களில் திருத்தங்கள் இடம்பெற்றதோடு 1972 மே மாதம் 05 ஆந் திகதியன்று மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கும் கட்டுப்பட்டு ஓய்வூதியம் செலுத்தும் முறை நடைமுறைப்படுத்தப் படுகின்றது.

அத்தோடு 1898 இலக்கம் 01 இனையுடைய விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதி கட்டளைச் சட்டம் மற்றும் 1983, இலக்கம் 24 இனையுடைய தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய நிதிச் சட்டம் மற்றும் 1981, இலக்கம் 44 இனையுடைய விதவைகள், அநாதைகள் நிதிய திருத்தச் சட்டத்தின் கீழ் அங்கவீனர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தினையும் சேர்த்து நலன்பெறுவதற்கான வாய்ப்புக்கள் விஸ்தரிக்கப்பட்டு விதவைகள், அநாதைகள் ஓய்வூதியம் செலுத்தும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இத் திருத்தங்களுக்கு கட்டுப்பட்டு 2010, இலக்கம் 08 மற்றும் 09 இனையுடைய சட்டத் திருத்தங்களை தொடர்ந்தும் விதவைகள், அநாதைகள் மற்றும் அங்கவீனர் ஓய்வூதியத் திட்ட நலன்களை விரிவுபடுத்தியுள்ளதோடு தற்போது அச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டும் வருகின்றது.

அவ்வாறே 1942, இலக்கம் 18 இனையுடைய பொதுச் சேவைகள் ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் பிரகாரம் செயற்படுத்தப்படும் பொதுச் சேவைகள் ஊழியர் சேமலாப நிதியமும் அதற்கு இணையாக அரச சேவையின் மற்றொரு சாராரின் சமூகப் பாதுகாப்பு முறையும் வலுப்படுத்தப்படுகின்றது.

இம் மூன்று விடயங்களையும் சட்ட ரீதியாக நடைமுறைப்படுத்தும் பொருட்டு 1970 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ஆந் திகதியன்று பொது நிருவாக அமைச்சின் கீழ் A தரத்துடைய திணைக்களமாக ஓய்வூதியத் திணைக்களம் இஸ்தாபிக்கப்பட்டது.

## நோக்கு

**பொருளாதார மற்றும் சமூக ரீதியில் திருப்தி மிக்கதோர் ஓய்வூதியர் சமுதாயம்**

## செயற்பணி

**அரச சேவை ஓய்வூதியகாரர்கள் மற்றும் அவர்களின் பயனாளிகளுக்கு தகவல் தொழில்நுட்பம் மற்றும் நிலைபேறான முகாமைத்துவ முறைமைகளைப் பயன்படுத்தியும், அரச மற்றும் தனியார் கூட்டுச் செயற்பாட்டின் மூலம் உயர் சேவைபெறுநர் மற்றும் சேவை வழங்குநர் திருப்தியை உறுதிப்படுத்தி சட்டரீதியான பயன்களை வழங்குதல்.**

## நிறுவன கட்டமைப்பு விளக்கப்படம்



## ஓய்வூதியத் திணைக்களம் - அனுமதியளிக்கப்பட்ட பதவியணி 2018.12.31

| பதவியின் தன்மை | பதவி | தொடர்புடைய சேவை | சம்பளத் திட்டம் | அனுமதியளிக்கப்பட்ட மொத்தப் பதவிகளின் எண்ணிக்கை | சேவையிலுள்ளோரின் எண்ணிக்கை | வெற்றிடமாகவுள்ள பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் | இ.நி.சே (விசேட) | SL-3-2016 | 1 | 1 | 0 |
| | மேலதிக ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் | இ.நி.சே (விசேட) | SL-3-2016 | 1 | 0 | 1 |
| | மருத்துவ உத்தியோகத்தர் | ஆரம்ப நிலை | SL-2-2016 | 1 | 0 | 1 |
| | ஓய்வூதியப் பணிப்பாளர் | இ.நி.சே (வகுப்பு I) | SL-1-2016 | 4 | 3 | 1 |
| | பிரதான கணக்காளர் | இ.கண.சே (வகுப்பு I) | SL-1-2016 | 1 | 1 | 0 |
| | பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் | இ.கண.சே (வகுப்பு I) | SL-1-2016 | 1 | 1 | 0 |
| | பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் | இ.நி.சேவை (வகுப்பு II அல்லது III) | SL-1-2016 | 10 | 9 | 1 |
| | கணக்காளர் | இ.கண.சே (வகுப்பு I) | SL-1-2016 | 1 | 1 | 0 |
| | கணக்காளர் | இ.கண.சேவை (வகுப்பு II அல்லது III) | SL-1-2016 | 9 | 6 | 3 |
| | பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் | இ.த.தொ.சேவை (வகுப்பு II அல்லது III) | SL-1-2016 | 1 | 0 | 1 |
| | சட்ட உத்தியேகாத்தர் | திணக்களத்திற்குரிது | SL-1-2016 | 1 | 0 | 1 |
| | மென்பொருள் உருவாக்குநர் | திணக்களத்திற்குரிது | ஒப்பந்த அடிப்படையில் | 3 | 2 | 1 |
| | | | | **34** | **24** | **10** |
| மூன்றாம் நிலை | நிர்வாக உத்தியோகத்தர் | இ.மு.உ.சே (அதிவிசேட) | MN-7-2016 | 4 | 1 | 3 |
| | மொழிபெயர்ப்பாளர் சிங்களம்-ஆங்கிலம் 01 சிங்களம் –தமிழ் 01 | மொழிபெயர்ப்பாளர் சேவை | MN-6-2016 | 2 | 2* | 0 |
| | தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் | இ.த.தொ.தொ.சே | MN-6-2016 | 5 | 2 | 3 |
| | | | | **11** | **5** | **6** |
| இடைநிலை | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | இ.தொ.சே | MN-3-2016 | 1 | 0 | 1 |
| | வரவுசெலவுத்திட்ட உதவியாளர் | RS | MN-4-2016 | 1 | 1 | 0 |
| | ஓய்வூதிய உத்தியோகத்தர் | திணக்களத்திற்குரியது | MN-4-2016 | 340 | 244 | 96 |
| | அபிவிருத்தி உத்தியோகத்தர் | அ.உ.சே | MN-4-2016 | 398 | 395 | 3 |
| | அரச முகாமைத்துவ உதவியாளர் | அ.மு.உ.சே | MN-2-2016 | 190 | 178 | 12 |
| | தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் | இ.த.தொ.தொ.சே | MT-1-2016 | 5 | 2 | 3 |
| | ஆவண உதவியாளர் | திணக்களத்திற்குரிது | MN-1-2016 | 141 | 123 | 18 |
| | உதவி அலுவலக தொழிற்பாட்டாளர் | திணக்களத்திற்குரிது | ஒப்பந்த அடிப்படை | 2 | 0 | 2 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | யில் | | | |
| | | | | **1078** | **943** | **135** |
| ஆரம்ப நிலை | பங்களாப் பொறுப்பாளர் | திணைக்களத்திற்குரிது | PL-1-2016 | 2 | 1 | 1 |
| | சமையல்காரர்/ பூங்கா தொழிலாளர் | திணைக்களத்திற்குரிது | PL-1-2016 | 4 | 3 | 1 |
| | சாரதிகள் | சா.சே | PL-3-2016 | 12 | 10 | 2 |
| | மின்சாரத் தொழில்நுட்பவியலாளர் | திணைக்களத்திற்குரிது | PL-3-2016 | 1 | 0 | 1 |
| | அலுவலக உதவியாளர் | அ.உ.சே | PL-1-2016 | 56 | 43 | 13 |
| | | | | **75** | **57** | **18** |
| மொத்தம் | | | | **1198** | **1029** | **169** |

மொழிபெயர்ப்பாளர் - சேவையிலுள்ளோரின் எண்ணிக்கை :- சிங்களம்-ஆங்கிலம் - 01
ஆங்கிலம் – தமிழ் - 01

## 02. திணைக்களத்தின் செயற்பாடுகள்

ஓய்வூதியத் திணைக்களத்தினால் நிறைவேற்றப்படும் ஒட்டுமொத்த பணிகளாக பதிவு செய்தல், கொடுப்பனவு ஒழுங்குமுறைகள், பெறுகை ஒழுங்குமுறைகள் மற்றும் அபிவிருத்தி அணுகுமுறைகள் போன்ற செயற்பாடுகள் நான்கினையும் குறிப்பிட முடியும். இச் செயற்பாடுகள் அனைத்தையும் நடாத்திச் செல்வதனை இலகுபடுத்தும் வகையில் பல்வேறு பிரிவுகளின் மூலம் நிர்வாக நடவடிக்கைகளும் இடம்பெறுகின்றது.

### 02. 1. பதிவு செய்தல்

ஓய்வூதியத் திணைக்களத்தினால் வழங்கப்படும் நலன்களை உரித்துடையதாக்கிக் கொள்ளும் சகல பயனாளிகளையும் பதிவு செய்து அவர்களின் ஆளடையாளங்களை உறுதிப்படுத்தும் வகையில் முறைசார்ந்த ரீதியாக கொடுப்பனவுகள் மற்றும் அறவிடல்களை மேற்கொள்வதற்காக குறித்த தகவல்களை தரவுத் தளத்தில் சேர்த்தல் மற்றும் ஓய்வூதிய இலக்கமொன்றினை வழங்குதல் உள்ளிட்ட சகல அடிப்படை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவது பதிவு செய்தல் செயற்பாட்டின் மூலமாகும்.

நாடு முழுவது காணப்படும் சகல அரச ஊழியர்கள் மற்றும் ஆயுதப் படைச் சேவையில் கடமையாற்றும் அலுவலர்களின் சேவைக் காலம் நிறைவு பெற்று ஓய்வு பெறச் செய்வதனால் அவர்களை பதிவு செய்வதனைப் போன்றே திருத்தியமைக்கப்பட்ட ஓய்வூதியம், விசேட இழப்பீடுகள் மற்றும் இழப்பீட்டு ஓய்வூதியத்திற்கான பதிவுகளை மேற்கொள்ளும் செயற்பாட்டினையும் இயங்கலையில் பதிவுப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

ஆயுதப் படை ஊழியர்கள் கடமையிலீடுபட்டுக் கொண்டிருக்கும் போது மரணித்து விட்டால் அவரின் வாரிசுகளுக்கு மரணப் பணிக்கொடை நலன்களைப் பெறுவதற்காக பதிவினை மேற்கொள்ளும் விடயமும் பதிவுப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

அதே போன்று பிரிவெனா ஆசிரியர்கள், தனியார் பாடசாலை ஆசிரியர்கள், 2006.01.02 ஆந் திகதிக்கு முன்னர் ஓய்வு பெற்றவர்கள், வினைத்திறனின்மை காரணமாக ஓய்வு பெறச் செய்யப்பட்டவர்கள், ஒழுக்காற்று நடவடிக்கையின் காரணமாக ஓய்வு பெறச் செய்யப்பட்டவர்கள் போன்ற பன்முகப்படுத்தப்படாத வகுதியினரின் ஓய்வூதியத்தினைச் செலுத்தும் செயற்பாட்டிற்காக பதிவு செய்தல் விண்ணப்பங்களைப் பரீட்சித்துப் பார்த்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்களை ஆய்வு செய்தல் இப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

அவ்வாறே சகல அரச ஊழியர்களும் அரச சேவையினுள் உள்ளீர்க்கப்பட்டதன் பின்னர் விதவைகள் மற்றும் அநாதைகள்ஓய்வூதியத் திட்டத்தில் பதிவு செய்யப்படுவது கட்டாயமானதாகும். இங்கலைப்படுத்தப்பட்ட தரவுத் தளமொன்றின் ஊடாக ஓய்வூதிய முகாமைத்துவத் தரவுத் தளத்தினுள் பிரவேசித்து விதவைகள் மற்றும் அநாதைகள் இலக்கத்தினைப் தம் அலுவலகத்திலிருந்தே பெற்றுக் கொள்வதற்கு தேவையான வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறே அரச ஊழியரொருவரின் அல்லது ஓய்வூதியம் பெறுநர் ஒருவரின் மரணத்திற்குப் பின்னர் விதவைகள் அல்லது தபுதாரர் அல்லது அநாதைகளுக்கான ஓய்வூதியம் செலுத்துவதற்காக பதிவு செய்யும் செயற்பாடும், அரச சேவையில் பணியாற்றிக் கொண்டிருக்கும் போது மரணிக்குமிடத்து இறந்து போன அரச ஊழியர்கள் மற்றும் பயங்கரவாதத் தாக்குதலினால் இறந்து போன அரச ஊழியர்கள் போன்றோருக்குமான மரணப் பணிக்கொடை இலக்கத்தினை வழங்கும் செயற்பாடும் இடம்பெறுவது விதவைகள், அநாதைகள் பிரிவின் மூலமாகும்.

1942 ஆம் ஆண்டு 18 ஆம் இலக்கத்துடைய ஊழியர் சேமலாப நிதியக் கட்டளைச் சட்டத்தினுள் உள்ளடக்கப்படும் அரச சேவையில் ஓய்வூதியமற்ற நியமனங்களைப் பெற்றவர்களுக்கு சேவை இறுதியில் கிடைக்கப்பெறும் நலன்களை உறுதிப்படுத்துவதற்காக பொதுச் சேவைகள் ஊழியர் சேமலாப நிதியத்தில் பதிவு செய்வதானது பொதுச் சேவைகள் ஊழியர் சேமலாப நிதியப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

**02. 2. கொடுப்பனவு ஒழுங்குமுறை.**

ஓய்வூதியம் மற்றும் விதவைகள், தபுதாரர்கள், அநாதைகள் மற்றும் அங்கவீனர்களுக்கான ஓய்வூதியம் ஆகிய கொடுப்பனவுகள் மாதாந்தம் மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகளாக காணப்படுவதோடு, அரச சேவை ஊழியர் சேமலாப நிதியத்தின் நலன் கொடுப்பனவுகள், விதவைகள் மற்றும் அநாதைகள் நிதியத்தை மிளக் கொடுப்பனவுகள், ஓய்வூதியப் பணிக்கொடை கொடுப்பனவுகள், இறப்பிற்கான மரணப் பணிக்கொடை கொடுப்பனவுகள் என்பன ஒரே தடவையில் செலுத்தப்படுகின்றன. அவை சரியானதாகவும் துல்லியத் தன்மையுடனும் கணக்கிடப்பட்டு ஒழுங்குமுறையில் செலுத்தப்படுதல் கொடுப்பனவு ஒழுங்குமுறையின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

ஓய்வூதியரது ஓய்வூதிய உரித்தைச் சான்றுப் படுத்துவதற்காக செயற்பாடு "சத்கார பியச" நேர்முகப் பரீட்சையின் மூலம் இடம்பெறுவதோடு பதிவு செய்யும் பிரிவின் மேற்பார்வையின் கீழ் மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவும் ஆரம்பிக்கப்படுகின்றது. ஓய்வூதியம் பெறுநர் வதியும் கிராம அலுவலர் பிரிவிற்குரிய பிரதேச செயலகத்தினால் ஓய்வூதியம் பெறுநருக்கான ஓய்வூதிய கொடைப் பத்திரம் குறித்த நிறுவனத்தால் வழங்கப்படுவதோடு, ஓய்வூதியத் திணைக்களத்தின் தரவுத் தளத்தினுள் அதனை உள்ளடக்கி உறுதிப்படுத்தும் நிகழ்வும் நடைபெறுகின்றது. அவ்வாறு உறுதிப்படுத்தப்படாத சந்தர்ப்பங்களில் அதாவது, பிரதேச செயலகங்களின் மூலம் குறித்த ஓய்வூதியம் பெறுநரின் தகவல்கள் நிரூபிக்கப்படாத போது ஓய்வூதியத் திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வுப் பிரிவின் மூலம் தரவுத் தளம் பரீட்சிக்கப்பட்டு அவ் ஓய்வூதியக் கொடுப்பனவினை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

விதவைகள் மற்றும் அநாதைகளுக்கான ஓய்வூதயைக் கொடுப்பனவும் மேற்படி கொடுப்பனவு செயன்முறைக்கு ஏற்ப நடைபெறுவதோடு, மாதாந்தக் கொடுப்பனவுப் பிரிவினால் குறித்த கொடுப்பனவுகளும் மாதாந்தம் இடம்பெறுகின்றது.

அதேபோன்று வெளிநாடுகளில் உள்ள ஓய்வூதியப் பெறுநர்களின் அல்லது ஓய்வூதியக் கணிப்பிடலானது வெளிநாட்டு ஓய்வூதியப் பிரிவினால் மேற்கொள்ளப்படுவதோடு மாதாந்தக் கொடுப்பனவுப் பிரிவினால் குறித்த கொடுப்பனவுகள் ஒழுங்குமுறைப் படுத்தவும் படுகின்றது. இவ்வாறான சகல கொடுப்பனவுகளும் ஓய்வூதியப் பெறுநர்களின் தனிப்பட்ட கணக்கிற்கு நேரடியாக வரவு வைக்கப்படுகின்றன.

ஒரே தடவையில் மாத்திரம் செலுத்தப்படும் கொடுப்பனவுகளுக்கிடையில் ஓய்வூதியப் பணிக்கொடைக் கொடுப்பனவு பணிக்கொடைக் கொடுப்பனவுப் பிரிவினால் மேற்கொள்ளப்படுவதோடு ஓய்வூதியம் பெறுநரிடமிருந்து அரசினால் அறவிடப்பட வேண்டிய அறவிடல்கள் காணப்படின் அவ் அறவிடல்களை மேற்கொண்டு எஞ்சிய தொகையை ஓய்வூதியப் பெறுநரின் கணக்கில் வரவு வைக்கப்படும். அவ்வாறே மரணப் பணிக்கொடையை செலுத்துவதற்கான பணிகள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

ஓய்வூதிய உரித்துடமையைப் பெறாமல் சேவையிலிருந்து விலகும் ஆயுதப் படையினருக்கான சேவைப் பணிக்கொடை மற்றும் சிவில் சேவைப் பணிக்கொடையை தயார்படுத்தும் பணியும் பதிவு செய்தல் பிரிவினாலும் கணிப்பீடு செய்யும் பிரிவினாலும் மேற்கொள்ளப்படுகின்றது. விசேட இழப்பீட்டுக் கொடுப்பனவிற்கான கணிப்பீடும் பதிவுப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. இவ் அனைத்து கணப்பீடுகளுக்கும் உரித்தான கொடுப்பனவுகளை செலுத்துவதற்குரிய மேற்பார்வை மற்றும் முகாமைத்துவத்தின் கீழ் வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்வதனை கணக்குப் பிரிவு தனது பிரதான பணியாகக் கொண்டுள்ளது.

விதவைகள், அநாதைகள் நிதியத்துக்கு மீளச் செலுத்தும் நடவடிக்கையை விதவைகள், அநாதைகள் நிதிய மீளச் செலுத்தும் பிரிவு மற்றும் அரச சேவை ஊழியர் சேமலாப நிதியக் கொடுப்பனவுகள் அரச சேவை ஊழியர் சேமலாப நிதியப் பிரிவினாலும் மேற்கொள்ளப்படுவதோடு வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்படும் நிதி ஏற்பாடுகளைத் திணைக்களத்தின் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்துவது தொடர்பிலான கணக்குகளை பேணிச் செல்லல் கணக்குப் பிரிவின் முக்கிய பணியாகக் காணப்படுகின்றது.

### 02. 3. பெறுகை ஒழுங்குமுறை

ஓய்வூதியத் திணைக்களத்தின் பிரதான தொழிற்பாடுகளினுள் பெறுகை ஒழுங்குமுறை முக்கிய இடத்தை வகிக்கின்றதோடு, அப் பணியானது விதவைகள், அநாதைகள் நிதியத்தின் பெறுகை ஒழுங்குமுறை, அரச சேவை ஊழியர் சேமலாப நிதிய பெறுகை ஒழுங்குமுறை மற்றும் கட்டிட வாடகை மற்றும் விடுமுறை விடுதிகளினால் கிடைக்கப்பெறும் வருவாய் ஒழுங்குமுறை என மூன்று வகுதிகளின் கீழ் அவற்றினை விபரிப்பதற்கு முடியும்.

விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதிச் சட்டம், தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய நிதிச் சட்டம் மற்றும் விதவைகள், அநாதைகள் மற்றும் ஆயுதப் படையினர் நிதிச் சட்டத்தின் என்ற சட்டங்களின் பிரகாரம் குறித்த பங்களிப்பாளர்களிடமிருந்து பங்களிப்புத் தொகை அறவிட வேண்டியுள்ளது. அதன் ஆரம்ப மட்டம் மற்றும் இரண்டாம் நிலை மட்டங்களையுடைய உத்தியோகத்தர்கள் அவர்களின் சம்பளத்தில் 6% யும், மூன்றாம் நிலை மட்டம் மற்றும் சிரேஷ்ட மட்டத்துடைய உத்தியோகத்தர்களிடமிருந்து 7% வீதமும் விதவைகள், அநாதைகள் பங்களிப்புத் தொகையில் வரவு வைத்தல் வேண்டும். மத்திய அரசின் நிறுவன பற்றுக் குறிப்புக்களின் மூலம் நேரடியாக பொதுத் திறைசேரியின் ஒன்றிணைந்த நிதியத்துக்குரிய நிதியில் வரவு வைக்கப்படுவதோடு, உள்ளூராட்சி சபை மற்றும் மாகாண சபை நிறுவனங்களினால் காசோலை மூலம் குறித்த நிதி செலுத்தப்படுகின்றது. விதவைகள், அநாதைகள் நிதியத்தை மீளச் செலுத்துவதற்காக இந் நிதி பயன்படுத்தப்படுவதோடு விதவைகள், அநாதைகள் பிரிவினால் குறித்த பெறுகை ஒழுங்குமுறை மேற்கொள்ளப்படுகின்றது.

அரச சேவை ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் படி அரச சேவை ஊழியர் சேமலாப நிதியத்தில் அங்கத்துவம் வகிக்கும் உத்தியோகத்தர்களின் சம்பளத்திலிருந்து அறவிடப்படும் 8% வீதம் கொண்ட பங்களிப்புத் தொகையும், அங்கத்தவர் சேவையாற்றும் சேவை நிலையத்தினால் செலுத்தப்படும் 12% வீத பங்களிப்புத் தொகையும் அரச சேவை ஊழியர் சேமலாப நிதியத்தில் வரவு வைக்கப்படும். நிதியினை மீளச் செலுத்துவதற்காக அவசியப்படும் பணம் தவிர்ந்த ஏனைய சகல தொகைகளும் பொதுத் திறைசேரி உண்டியல், திறைசேரி பிணைமுறிகள் மற்றும் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்படுவதோடு அவற்றினால் கிடைக்கப்பெறும் வட்டி விகிதங்களும் அங்கத்தவர்களுக்கு நலன்களாக

வழங்கப்படுகின்றது. இங்கு அரச சேவை ஊழியர் சேமலாப நிதியத்தின் பெறுகை ஒழுங்குமுறைகள் இடம்பெறுவது அரச சேவை ஊழியர் சேமலாப நிதியப் பிரிவினாலாகும்.

ஓய்வூதியத் திணைக்களத்தின் பெறுகைகளில் மூன்றாம் வகுதியாக அமைவது கட்டிடங்களினால் கிடைக்கப்பெறும் வாடகை மற்றும் விடுமுறை விடுதிகளில் இருந்து கிடைக்கப்பெறும் வருவாய்களாகும். ஓய்வூதியத் திணைக்களம் அமைந்துள்ள கட்டிடத்தில் திணைக்களம் பயன்படுத்தாத இட அளவினை வேறொரு நிறுவனத்திற்கு வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதோடு, அதன் மூலம் மாதாந்த வருமானமும் அறவிடப்பட்டு வருகின்றது.

அவ்வாறே ஓய்வூதியத் திணைக்களத்தினால் ஓய்வூதியச் சமூகம் உள்ளிட்ட ஒட்டுமொத்த மக்களினதும் பயன்பாட்டிற்குமாக நடாத்தப்பட்டுச் செல்லும் விடுமுறை விடுதிகளிலிருந்தும் மாதாந்தம் வருமானங்கள் கிடைக்கப்பெற்றுக் கொண்டிருக்கின்றன. களணி வெதமுள்ள விடுமுறை விடுதியானது 3.0575 ஹெக்டேயர் பரப்பளவினைக் கொண்டமைந்துள்ளதோடு அதில் விடுதிகள், அறை வசதிகள், விரிவுரை அரங்குகள் போன்ற வசதிகளுடன் உணவு விடுதியும் சலுகை விலை அடிப்படையின் கீழ் வழங்கப்படுகின்றது. அதேபோன்று 0.1427 ஹெக்டேயர் பரப்பளவில் அமைந்துள்ள ரம்பொடை விடுமுறை விடுதியும் ஓய்வூதியச் சமூகத்தைப் போன்றே உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கும் தங்குமிட வசதிகள் வழங்கப்படுவதோடு அதன் மூலமும் ஓய்வூதியத் திணைக்களத்துக்கு வருமானம் கிடைக்கப்பெறுகின்றது. அவ்வாறான கட்டிடங்கள் மற்றும் விடுமுறை விடுதிகளிலிருந்து கிடைக்கப் பெறும் வருமானத்தை ஒழுங்கு முறைப்படுத்துவது திணைக்களத்தின் கட்டுப்பாட்டுப் பிரிவினாலாகும்.

## 02. 4. அபிவிருத்திப் அணுகுமுறைகள்

ஓய்வூதியத் திணைக்களத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகள் பிரதானமாக மனித வள அபிவிருத்தி, தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தி, விடயம் சார் அபிவிருத்தி மற்றும் பௌதீக வள அபிவிருத்தி போன்ற நான்கு முக்கிய பரிமாணங்களின் ஊடாக விபரிக்க முடிகின்றது.

திணைக்களத்தின் முக்கிய வளமாக விளங்கும் மனித வள அபிவிருத்தியை மேம்படுத்துவதற்காக நிர்வாக மற்றும் நலன்புரிப் பிரிவினால் பயிற்சித் திட்டங்களை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. அதில் திணைக்கள உத்தியோகத்தர்களின் விடய அறிவை விருத்தி செய்தல் மற்றும் புதிய போக்குகள் தொடர்பான இற்றைப்படுத்தப்பட்ட விடயங்ளை ஆரம்ப நிகழ்ச்சித் திட்டங்களிலும், மனப்பாங்கு மற்றும் திறன் விருத்தித் திட்டங்கள் உள்ளகப் பயிற்சி மற்றும் வெளிவாரிப் பயிற்சித் திட்டங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதன் போது பல்வகையான வளவாளர்கள் மற்றும் நிறுவனங்களை தொடர்புபடுத்தி இப் பயிற்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அவ்வாறே திணைக்களத்தின் மனித வளத்தை, வளவாளர்களாக பயன்படுத்தி ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக ஏனைய நிறுவனங்களுக்கு தெளிவுபடுத்தும் பயிற்சித் திட்டங்களையும் ஏற்பாடு செய்வது இப்பிரிவின் விடயப் பரப்பின் கீழ் நடைபெறுகின்றது.

தகவல் தொழில்நுட்ப ரீதியாக உலகில் பல்வேறு துறைகளில் துரித வேகத்துடன் முன்னோக்கிப் பயணித்து சென்று அவற்றிற்கு இணையாக இற்றைப்படுத்தப்பட்ட ஓய்வூதியத் திட்ட செயன்முறையை உலக தகவல் தொழில்நுட்பத்தின் புதிய போக்குடன் இற்றைப்படுத்தி புதிய பிரயோகங்களைக் கையாண்டு நவீன மூலோபாயங்களை அறிமுகப்படுத்தி வைப்பது திணைக்களத்தின் தகவல் தொழில்நுட்பப் பிரிவின் மூலம்

மேற்கொள்ளப்படுகின்றது.
நிகழ்நிலைப்படுத்தப்பட்ட தரவுத் தளத்தினை அறிமுகஞ் செய்து வைப்பதனைப் போன்றே அவற்றினை இற்றைப்படுத்துவதும், உத்தியோகபூர்வ இணையத்தளத்தை இற்றைப்படுத்தி பேணிச் செல்வதும் தகவல் தொழில்நுட்ப பிரிவின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் நடைபெறுகின்றது.

தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தியுடன் தகவல் தொடர்பாடல் நடவடிக்கைகளும் நவீன தொழில்நுட்ப உபாயங்களின் ஊடாக மேற்கொள்வதனை திணைக்களத்தின் ஊடக அலகின் மூலம் இடம்பெறுகின்றது. அதில் உத்தியோகபூர்வ இணையத்தளம், உத்தியோகபூர்வ Facebook பக்கம், உத்தியோகபூர்வ youtube காணொளி, இணையத்தள சஞ்சிகை மற்றும் ஓய்வூதிய வானொலி போன்ற ஊடகங்களின் மூலம் தகவல்களை இற்றைப்படுத்துவதும் வெளிவாரி ஊடக நிறுவனங்களுக்க தகவல்களை வழங்குவதும் ஊடகப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

ஓய்வூதியத் திட்ட விடயம், நிலவுகின்ற சமூக ரீதியான நிலைமைகளின் கீழ் இற்றைப்படுத்தல்கள் மற்றும் விடயம் சார்ந்த அடிப்படை பிரச்சினைகளை தீர்த்தல் என்பன இடம்பெறுவது கொள்கை மற்றும் சட்டப் பிரிவினாலாகும். அதன் போது ஓய்வூதியத் திட்டம் தொடர்பான கொள்கை ரீதியான தீர்மானங்களை எடுத்தல், புதிய சுற்றறிக்கைகளை வெளியிடுதல் மற்றும் கொள்கை ரீதியான பிணக்குகளை தீர்த்தல், ஓய்வூதியம் தொடர்பான சட்டரீதியான நடவடிக்கைகளுக்காக செயற்படுதல் போன்ற விடயம் சார்ந்த அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொள்ளலும் கொள்கை மற்றும் சட்டப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

அத்தோடு திணைக்களத்தின் ஆளணியினரைப் போன்றே சேவைப் பெறுநர் ஓய்வூதியச் சமூகத்துக்கான வசதி வாய்ப்புக்களை வழங்குதல் போன்ற நானாவித பௌதீக அபிவிருத்திகளை செயற்படுத்துதல் கட்டுப்பாட்டு மற்றும் நலன்புரிப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. அதன் போது திணைக்களத்தின் உள்ளக மற்றும் வெளிவாரியான சூழல் போன்ற இரு பிரிவுகளையும் விருத்தி செய்தல் மற்றும் உரிய வகையில் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படுகின்றது.

## 02.5.தொடர் நடவடிக்கைகள்

மீளாய்வு ஆண்டினுள் திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வுக்கு மேலதிகமாக 13 பிரதேச செயலகங்களின் சிவில், விதவைகள் மற்றும் இராணுவத்தினருக்கான ஓய்வூதியத்தை செலுத்துவது தொடர்பாக உள்ளக கணக்காய்வுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றது. அதனால் 2018 ஆண்டுக்கு முன்னர் இருந்து செலுத்தப்பட்டு வந்த வாழ்வாதாரக் கொடுப்பனவு, இடைக்காலக் கொடுப்பனவு, அடிப்படைச் சம்பளம் மற்றும் சம்பள மாற்றங்களை மேற்கொள்ளும் போது பல்வேறு தரப்பினர்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட கொள்கை ரீதியான தீர்மானத்தின் அடிப்படையில் மீள கணக்கிடும் போது ஓய்வூதியம் பெறுநர்களுக்கு மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள 48 மில்லியன் ரூபாத் தொகை என அறிந்து கொள்வதற்கு முடியுமாக உள்ளது. அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட அதிகூடிய கொடுப்பனவை சரி செய்வதற்கும் அதனை மீள அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அரச நிதி தொடர்பாக திணைக்களத்தின் பொறுப்பை உரிய வகையில் நிறைவேற்றுவதற்கும் முடியுமாக உள்ளது.

மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள கொடுப்பனவு கண்டுபிடிக்கப்பட்டதன் பின்னர், சரி செய்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையின் மூலம், வருடாந்தம் இடம்பெறும் கூடுதலாக செலுத்தப்பட்ட ஓய்வூதிய அளவினை குறைத்துக் கொள்வதற்கும் முடியுமாக உள்ளது. இதற்கு மேலதிகமாக ஓய்வூதிக் கொடுப்பனவு

சம்பந்தமாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் மற்றும் மனுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசேட கணக்காய்வு பரிசோதனைகளின் மூலம் தகவல்களை உரிய வகையில் முன்வைக்காமை மற்றும் மூடிமறைப்பதன் காரணமாக இடம்பெற்ற கூடுதல் மற்றும் தகுதியற்ற கொடுப்பனவுகழள தடுத்துக் கொள்வதற்கும், அத் தொகையை அறவிட்டுக் கொள்வதற்கும் இயலுமை காணப்படுகின்றது.

மீளாய்வு வருடத்தினுள் ஓய்வூதியம் வழங்குதல் மற்றும் திணைக்களத்தின் ஏனைய நடவடிக்கைகள் தொடர்பாக கணக்காய்வு தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனைகளில் 44 கணக்காய்வு வினவல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந் 44 கணக்காய்வு வினவல்களில் 37 கணக்காய்வு வினவல்களுக்கு பதில் வழங்கப்பட்டுள்ளதுடன் மேலும் 7 கணக்காய்வு வினவல்களுக்கு பதில்கள் தயாரிக்கப்பட்டு முன்வைக்கப்படவுள்ளது.

## 03. வருடாந்த திட்டங்கள்

### 03.1. தேசிய ஓய்வூதியத் தினக் கொண்டாட்டம்.

இலங்கை ஓய்வூதியச் சமூகம் அரச சேவைக்காக மேற்கொள்ளும் அதிவிசேட அர்ப்பணிப்புகளை பெருமையுடன் நினைவு படுத்தி ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதம் 08 ஆந் திகதிக்கு பிரகடனப்படுத்தப்பட்டுள்ள “தேசிய ஓய்வூதியர் தினம்” 2018 ஆம் ஆண்டிலும் வெகு விமர்சையாக கொண்டாடுவதற்கு அவசியப்படும் நடவடிக்கைகளை ஓய்வூதியத் திணைக்களத்தின் மூலம் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. நாட்டில் உள்ள சகல ஓய்வூதியச் சமூகத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஒன்பது மாகாணங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி களுத்துறை, கண்டி, அம்பாறை, இரத்தினபுரி, யாழ்ப்பாணம், பொலன்னறுவை, புத்தளம், மாத்தறை மற்றும் பதுள்ளை போன்ற மாவட்டச் செயலகங்களை ஒருங்கிணைத்து குறித்த கொண்டாட்ட விழாவினை ஏற்பாடு செய்துள்ளது.



ஓய்வூதியச் சமூகத்துக்கு மாதாந்தம் ஓய்வூதியம் செலுத்தும் செயற்பாட்டினையும் விஞ்சி சமூக, பொருளாதார பாதுகாப்பிற்காக தேசிய மட்டத்திலான உரையாடலினை உருவாக்கும் நோக்குடன் இம்முறை தேசிய ஓய்வூதியர் தினம் ஏற்பாடு செய்யப்பட்டது “ வாழ்வுக்கு புதியதோர் பொழிவு” எனும் விசேட தலைப்பினாலாகும்.

அவ்வந்த மாகாணங்களுக்கு அமையும் வகையில் அறிவாளர்களின் சொற்பொழிவுகள், பயிலரங்குகள், மருத்துவ முகாம்கள் போன்ற நலன்புரிச் சேவைகள் பல ஓய்வூதியம் பெறுநர்களுக்கு ஏற்பாடு செய்து வழங்கப்பட்டுள்ளதுடன் ஓய்வூதியர் தின விழாவுக்கு பங்குபற்றுவதற்கு முடியாமற் போன உடலியல் ரீதியாக பாதிக்கப்பட்டுள்ள சிரேஷ்ட ஓய்வூதியப் பிரசைகளை கௌரவிக்கும் முகமாக அவர்களின் வீடுகளுக்குச் சென்று வாழ்த்துத் தெரிவித்தல் நிகழ்வு பிரதேச மட்டத்திலும் ஒரு சில மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டதானது இம்முறை நடைபெற்ற விழாவின் விசேட தன்மையாக விளங்கியது.

ஆக்கபூர்வமான கலைத் திறன்களை வெளிக்கொணரும் வகையில் ஓய்வூதியர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பொழுதுபோக்கு நிகழ்ச்சித் திட்டங்களினால் கலைகட்டிய கொண்டாட்ட விழா நிகழ்ச்சிக்காக மாவட்டச் செயலாளர் உட்பட மாவட்டச் செயலகங்களின் அலுவலர்களினது பங்களிப்பும் மெச்சத்தக்கது. அதேபோன்று அரச மற்றும் தனியார்த் துறை சார்ந்த பல்வேறு நிறுவனங்களின் நிதியியல் அனுசரணையுடன் பரிசில்கள் மற்றும் நலன்களைப் பகிர்ந்தளித்து தேசிய ஓய்வூதியர் தினத்தை மறக்க முடியாத தினமாக மாற்றுவதற்கு தாராளமாக பங்களிப்பு வழங்கப்பட்டது.



### 03.2.தொழில்நுட்ப அமர்வு

ஓய்வூதியத் திணைக்களத்தின் மூலம் தேசிய ஓய்வூதியர் தினத்துக்கு இணையாக இரண்டாம் தடவையாகவும் மிகவும் வெற்றிகரமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த “தொழில்நுட்ப அமர்வு –2018” எனும் தலைப்பில் 2018.10.26 ஆந் திகதியன்று பத்தரமுல்லை வோட்டர்ஸ் ஏஜ்ஹீ வெகு விமர்சையாக நடைபெற்றது.

அரச சேவையின் சகல அரச நிறுவனங்களுடனும் தொடர்பினை ஏற்படுத்திக் கொண்ட முன்னனிவகிக்கும் திணைக்களமாக திகழும் ஓய்வூதியத் திணைக்களம், அதன் கொடுப்பனவு செயற்பாடு மற்றும் கட்டமைக்கப்பட்ட தரவுத் தளம் சார்ந்து மேற்கொள்ளப்படும் நவீன மாற்றங்கள் மற்றும் இற்றைப்படுத்தல்கள் தொடர்பான ஏனைய அரச நிறுவனங்களின் உயர் நிர்வாகிகளை விழிப்பூட்டும் நோக்கத்துடன் தொழில்நுட்ப அமர்வு – 2018 ஏற்பாடு செய்யப்பட்டது.




ஓய்வூதியக் கொடுப்பனவு முறையுடன் தொடர்புடையதாக மேற்கொள்ளப்பட வேண்டிய இற்றைப்படுத்தல்கள் மற்றும் மேம்படுத்தல்கள் தொடர்பாக அரசின் உயர் மட்ட அலுவலர்களின் அபிப்ராயங்கள் மற்றும் கருத்துக்களைப் பெறுவதற்காக அறிஞர்களின் கலந்துரையாடலொன்றாக தொழில்நுட்ப அமர்வு – 2018 ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அது “Sustainable Digitization of Pension Services” எனும் தலைப்பில் அமையப்பெற்றிருந்தது. இந் நிகழ்வில் பேராசிரியர் திரு. எச்.டீ. கருணாரத்ன அவர்கள் சிறப்புறையாற்றினார். அத்தோடு யப்பானை அடிப்படையாகக் கொண்டு அரச சேவையிலிருந்து ஓய்வு பெறச் செய்யப்படுகின்றவர்களின் ஓய்வூதியக் கொடுப்பனவு முறையின்சர்வதேசப் போக்குகள் தொடர்பாகவும் சர்வதேச தரத்துடன் கூடிய இலங்கை ஓய்வூதியத திட்டச் செயன்முறையில் ஏற்பட வேண்டிய புதிய போக்குகள் குறித்தும் அலசப்பட்டது. கணக்காய்வு ஆணைக்குழுத் தலைவர் மற்றும் கணக்காய்வு அதிபர் திரு. எச்.எம். காமிணி விஜேசிங்க அவர்கள் ஓய்வூதியத் திணைக்களத்தின் தொழில்நுட்ப அமர்வில் விசேட சொற்பொழிவாற்றி ஓய்வூதியக் கொடுப்பனவு செயன்முறை தொடர்பாக திணைக்களத் தலைவரின் பொறுப்புக் கூறல் தொடர்பாகவும் தெளிவுபடுத்தப்பட்டது. ஓய்வூதியத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தை இணையத்தில் வெளியிடுதல், வெளிநாட்டு ஓய்வூதியத் திட்டத்தை நிகழ்நிலைப்படுத்தல், பொது 55 மாதிரிப் படிவத்தை நிகழ்நிலைப்படுத்தல், அடையாள அட்டைப் பிரதியிடும் புதிய அச்சிடும் இயந்திரத்தை அறிமுகப்படுத்தல் போன்றன ஓய்வூதியத் திணைக்களத்தின் மூலம் ஓய்வூதியச் சமூகத்துக்கு கிடைக்கப்பெறுகின்ற புதிய சேவைகளாக தொழில்நுட்ப அமர்வுக்கு இணையாக நடைபெற்றது.

இந் நிகழ்வுக்கு கௌரவ. அமைச்சர் ரஞ்சித் மந்தும பண்டார அவர்கள், அமைச்சின் செயலாளர் பத்மசிரி ஜயமான்ன அவர்கள் உள்ளிட்ட அமைச்சுக்களின் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் போன்ற அரசின் உயர்மட்ட அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியத் திணைக்களம் மற்றும் அதனுடன் எப்போதும் தொடர்புபட்டு செயற்படும் தனியார்த் துறையின் தொழில் முனைவோரும் கலந்துகொண்டார்கள்.




**03. 3. உள்நாட்டுப் பயிற்சிகள் மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்களை முகாமை செய்தல்.**

நாடு பூராகவும் வாழுகின்ற ஆறு இலட்சத்துக்கும் மேலான ஓய்வூதியர்களின் மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவு செயற்பாட்டினை துல்லியமாகவும் தரம் வாய்ந்ததாகவும் வினைத்திறன் மிக்க சேவையொன்றாக பேணிச் செல்வதற்கு முனைப்புடனான பணியில் திணைக்களத்தின் உயர் மட்டத்திலிருந்து கீழ் நோக்கி உள்ளவர்கள் அவர்களது பதவிக்குரிய பணியைக் கச்சிதமாக நிறைவேற்றுகின்றார்கள். அதனால் மனித வள நிறுவனத்துக்குரிய பெறுமதி வாய்ந்த வளமாக கருதப்படும் ஓய்வூதியத் திணைக்களம் பல்வேறு பயிற்சித் திட்டங்களை முகாமைத்துவம் செய்து தனது அலுவலர்களுக்கு அறிவு மற்றும் திறன்களை விருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றார்கள். அதன் அடிப்படையில் 2018 ஆண்டில் அநேகமான அலுவலர்கள் பல்வேறு பயிற்சித்திட்டங்களில் ஈடுபடுத்தப்பட்டது அதன் விளைவுகளில் ஒன்றாகும்.

2018 ஆம் ஆண்டில் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட திணைக்களத்தின் புதிய அலுவலர்கள் 53 பேருக்கு 2018.05.15 ஆந் திகதி முதல் 2018.07.22 ஆந் திகதி வரை இரு வார காலத்துக்கு சேவைத் துவக்கப் பயிற்சியினை வழங்குவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதேபோன்று 2018.07.07 ஆந் திகதி முதல் 2018.07.22 ஆந் திகதி வரை வார இறுதி நாட்களில் ஆரம்ப தரத்துடைய அலுவலர்களுக்கான தமிழ் மொழிக்கான பயிற்சியும் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைக்கு நியமனம் பெற்ற ஓய்வூதியத் திணைக்களத்துக்கு இணைக்கப்பட்டுள்ள இரண்டாம் குழுவின் 18 அலுவலர்களுக்கும் 2018.10.19 ஆந் திகதி முதல் 2018.11.02 ஆந் திகதி வரை இரு வாரத்துக்குரிய சேவை துவக்கப் பயிற்சியையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அலுவலக முறைமை தாபன விதிக்கோவை மற்றும் மக்கள் தொடர்பாடல் தொடர்பாகவும் திணைக்களத்தில் இரண்டாம் நிலை மட்டத்துடைய அலுவலர்களின் அறிவு மற்றும் மனப்பாங்கு விருத்தி செய்யும் நோக்குடன் பயிலரங்கொன்று 2018.12.08 /09 ஆகிய இரு தினங்களில் களனிய வெதமுள்ள ஓய்வூதிய விடுமுறை விடுதியில் நடாத்தப்பட்டது. அதற்காக திணைக்களத்தின் 93 அலுவலர்கள் கலந்து கொண்டார்கள். அத்தோடு 2018.12.14/15 ஆகிய இரு தினங்களில் வெளியே அமைந்த பயிற்சித் திட்டங்களை (Outbound Training) ஒழுங்குபடுத்தும் அலுவலர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சி மற்றும் ஆளுமை விருத்திக்கான விசேட செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பங்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதில் 89 அலுவலர்களைக் கொண்ட ஓர் குழுவாக அந் நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கெடுத்தார்கள்.



சொத்து / உபகரணங்களுடன் தொடர்புடைய நிலையான சொத்துக்களைபேணிச் செல்வது தொடர்பாக திறன்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் மூலம் 2018.07.17 ஆந் திகதி நடாத்தப்பட்ட பயிற்சித் திட்டத்திற்காக திணைக்களத்தின் ஒரு குழுவினர் கலந்துகொண்டார்கள். தேசிய தொழில் கற்கைகள் நிறுவனத்தின் மூலம் பிணக்குகள் முகாமைத்துவம் மற்றும்குறை தீர்ப்புகள் தொடர்பாக அரச அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புக்களுக்காக திணைக்களத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி பதவிநிலை அலுவலர் ஒருவர் கலந்து கொள்ளச் செய்யப்பட்டார். தேசிய தொழில் கற்கைகள் நிறுவனத்தினால் அரச அலுவலர்களின் சம்பளங்களைத் தயாரித்தல், சாரதிகளின் திறன் விருத்தி மற்றும் அலுவலக உதவியாளர்களின் பெறுகை நடவடிக்கை போன்ற தலைப்புக்களின் கீழ் நடாத்தப்பட்ட பயிற்சித் திட்டங்களிற்காக திணைக்கள அலுவலர்களையும் பங்குபற்றச் செய்தார்கள். Academy of Financial Studies என்ற நிறுவனத்தின் மூலம் நடாத்தப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பான பயிற்சித் திட்டம் போன்ற ஏராளமான பயிற்சிகளுக்கு திணைக்களத்தினால் அலுவலர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள். அத்தோடு புதிய அனுபவங்களின் ஊடாக அலுவலர்களின் மனப்பாங்கு மற்றும் திறன்களை விருத்தி செய்வதற்கு 2018 ஆம் ஆண்டில் திணைக்களத்தினால் அதிகபட்ச பங்களிப்பினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



அரச நிறுவனங்களுக்கிடையில் உயர் தரத்துடன் கூடிய சேவையை வழங்கும் அரச நிறுவனமாக திகழும் ஓய்வூதியத் திணைக்களம் ஓய்வூதியக் கொடுப்பனவுச் செயற்பாட்டினை சர்வதேச தரத்துடன் பேணிச் செல்வதற்காக சர்வதேச ரீதியிலான சமூகப்பாதுகாப்பு செயற்பாடு தொடர்பாக நித்தமும் அவதானங்களைச் செலுத்துகின்றது. திணைக்களத்துக்கு வழங்கப்படும் வருடாந்த வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்கள் அதன் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக முகாமை செய்து 2018 ஆம் ஆண்டில் வெளிநாட்டுப் பயிற்சிக்கான சந்தர்ப்பங்களை அலுவலர்களுக்கு வழங்கியுள்ளார்கள். 2018.03.25 ஆந் திகதி முதல் 2018.04.02 ஆந் திகதி வரை தாய்லாந்தில் நடைபெற்ற முகாமைத்துவம் தொடர்பான PMI சர்வதேச நிகழ்ச்சிக்காக ஓய்வூதியத் திணைக்களத்தின் அலுவலர் ஒருவர் கலந்து கொள்ளச் செய்யப்பட்டதோடு 2018.04.25-26 ஆம் இரு தினங்களிலும் யப்பானில் நடைபெற்ற காப்புறுதி மற்றும் ஆசியாவின் ஓய்வூதியச் சேமிப்பு தொடர்பாக ADBI-JFSA-OECD என்ற சந்திப்பிற்காக திணைக்களத்தின் அலுவலர் ஒருவர் கலந்து கொள்ளச்செய்யப்பட்டார். நிலைபேறான அபிவிருத்தி எனும் இலக்கினை அடைந்து கொள்வதற்காக நிதிச் சமூகப் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்காக என்ற தலைப்பில் 2018.05.15 ஆந் திகதியிலிருந்து யப்பானில் நடைபெற்ற மாநாட்டில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பு கிடைக்கப்பெற்றமையானது திணைக்களம் அடைந்த விசேட வெளிநாட்டு பயிற்சிகளில் ஒன்றாக கருதமுடிகின்றது. இந்திய அரச துறை தொடர்பாக ஆராய்வதற்காக 2018.07.30 ஆந் திகதி முதல் 2018.08.03 ஆந் திகதி வரை நடைபெற்ற சுற்றுலாவிற்கும் திணைக்களத்தை பிரதிநிதித்துவப்படுத்தியதோடு 2018.08.22 ஆந் திகதியன்று யப்பானில் நடைபெற்ற பட்டப்பின் பட்டம் மற்றும் பேராசிரியர் பட்டத்திற்கான பயிற்சி திட்டத்திற்காக திணைக்களம் சார்பாக பிரதிநிதித்துவம் செய்தார்கள். 2018.10.22 ஆந் திகதி முதல் 2018.10.26 ஆந் திகதி வரை

இந்தியாவில் நடைபெற்ற அரச நிர்வாக மற்று அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காகவும் அதே தலைப்பில் 2018.11.26 ஆந் திகதி முதல் 2018.11.30 ஆந் திகதி வரை இந்தியாவில் நடைபெற்ற பயிற்சித் திட்டத்திற்காகவும் திணைக்களம் சார்பாக அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

### 03.4. அறிவு முகாமைத்துவம்

ஓய்வூதியப் பதிவானது நிகழ்நிலைப்படுத்துவது தொடர்பாகவும் விதவைகள், அநாதைகளை மீள பதிவு செய்தல் தொடர்பாகவும் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய விண்ணப்பங்கள் நிகழ்நிலைப்படுத்தப்பட்ட வகையில் அனுப்ப வேண்டும் என அரச அலுவலர்களை விழிப்பூட்டுவதற்காக ஓய்வூதிய முகாமைத்துவ அமைப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் 3000 க்கும் மேற்பட்ட அரச அலுவலர்களை விழிப்பூட்டல், பயிற்சியளிப்பதற்காக வளவாளர்களின் பங்களிப்பைப் பெற்று அவர்களை வினைத்திறன் மிக்க தகவல் தொகுதியினுள் தொடர்புபடுத்தப்படுவார்கள்.

முழு வருடத்திலும் மத்திய அரசைப் போன்றே மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் அலுவலர்களுக்கும் பயிற்சியளிக்கும் 19 பயிற்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளது.

அவ்வாறே ஓய்வூதியச் செயற்பாட்டில் நவீனமயப்படுத்தல்களை அறிமுகப்படுத்துவதற்காக நாடு பூராகவும் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் கணக்காளர்களுக்கு பயிற்சியிளிப்பதற்காக 2018 ஆம் ஆண்டினுள் 03 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளது. அவ்வாறே இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம், இலங்கை மன்றம் போன்ற அரச ஊழியர்களை பயிற்சியளிக்கும் நிறுவனத்திற்காக ஓய்வூதியச் செயற்பாடு தொடர்பாக பயிற்சியளிப்பதற்கு அவ்வப்போது வளவாளர்களை வழங்கும் நிகழ்வு நடைபெற்றுள்ளது.

பயிற்சி பயிலரங்குகள் நடாத்தப்படுவதற்கு மேலதிகமாக திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் ஊடாக வழிகாட்டிக் குறிப்புகளைக் காட்சிப்படுத்துவதன் மூலமும் நிகழ்நிலைப்படுத்தப்பட்ட நிலையில் பதிவுகளை மேற்கொள்ளல் தொடர்பாக அரச ஊழியர்களுக்கு உடனடித் தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் ஓய்வூதிய திணைக்களம் தகவல் தொழில்நுட்பத்தின் மீது உருவாக்கப்பட்டுள்ள நவீன அறிமுகப்படுத்தல்கள் தொடர்பாக ஏனைய அரச நிறுவனங்களையும் விழிப்பூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 03. 5.வெளிவாரியான செயற்பாடுகள்

இயந்திரமாக நாள்தோரும் கடமையாற்றும் அலுவலர் குழாத்துக்கு கலை, இலக்கியம் மற்றும் விடயப் பரப்பிற்கு வெளிவாரியான அறிவு உணர்திறன் கொண்ட அலுவலர்களை உருவாக்குவதன் மூலம் பயனுறுதித்தன்மை வாய்ந்த அரச அலுவலர்களை தோற்றுவிக்க முடியும் என்ற நோக்குடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஓய்வூதியத் திணைக்களத்தின் உயர் மட்ட முகாமைத்துவத்தினால் அலுவலர்களின் கலை சார்ந்த பொழுதுபோக்குகளை விருத்தி செய்வதற்காக ‘Friday Forum’ என்ற எண்ணக்கரு தோற்றுவிக்கப்பட்டது.



பல வருடங்களாக நடைபெற்று வரும் 'Friday Forum' என்ற எண்ணக்கருவை உயர் கலைப் பொழுதுபோக்குடன் கூடிய உணர்திறன் கொண்ட அலுவலர்க் குழாத்தினை ஓய்வூதியத் திணைக்களத்தினுள் உருவாக்குவதனைப் போன்றே பல்வேறு துறைகளிலும் நிபுணத்துவம் மிக்கவர்களின் தாக்கத்தினைப் பெற்றுக் கொடுப்பதற்கு முடியுமான வகையில் வெற்றிகரமான எண்ணக்கருவினை அறிமுகப்படுத்தியுள்ளது. திணைக்களத்தின் சகல துறைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மாதத்திற்கு ஒருமுறை அதிகபட்ச அர்ப்பணிப்புடன் ஏற்பாடு செய்யப்படுகின்ற 'Friday Forum' நிகழ்ச்சித்திட்டம் 2018 ஆம் ஆண்டில் பெரும்பாலும் வெற்றிகரமாக நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2018.01.26 ஆந் திகதியன்று திணைக்களத்தின் அலுவலர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட வருடத்தின் முதலாவது 'Friday Forum' த்தின் அனுபவமான "கீ மல் வில" இசை நிகழ்ச்சித்திட்டம் திணைக்களத்தில் பாடும் திறமையுள்ள அலுவலர்கள் பலரின் திறமைகளை வெளிக் கொணருவதற்கான சந்தர்ப்பமாக அமைந்தது. உடலியல் மற்றும் உளவியல் ரீதியில் ஆரோக்கியமான வாழ்வுக்கு நம் நாட்டு வைத்திய துறையின் வழிகாட்டலுடன் அலுவலர்களை விழிப்பூட்டும் வகையில் "ஆரோக்கியமான வாழ்வுக்கான பாதை" எனும் தலைப்பின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த "Friday Forum" நிகழ்ச்சித்திட்டத்தில்ஆயுர்வேத நிபுணத்துவ மருத்துவரான திரு.டீ.எம். தென்னகோன் அவர்களால் நடாத்தி வைக்கப்பட்டது. 2018.04.20 ஆந் திகதிய 'Friday Forum' நிகழ்ச்சித்திட்டத்தில் திரு.சிரேஷ்ட ரங்கதர சதிஸ்சந்திர எதிரிசிங்க அவர்கள் மேம்படுத்தப்பட்ட வகையில் மனதை எவ்வாறு பேணிக் கொள்வது தொடர்பாக வளமான எண்ணங்களை ஏற்படுத்திக் கொள்வதன் முக்கியத்துவம் தொடர்பாக சிறப்பான சொற்பொழிவொன்றினை நிகழ்த்தினார். 2018.06.22 ஆந் திகதியன்று பொலிஸ் பரிசோதகரான மனோஜ் சமரநாயக அவர்களால் "இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக தற்போதைய நிலைமை" எனும் தலைப்பிலும் 2018.10.12 ஆந் திகதியன்று பாரம்பரிய வைத்தியரான திருமதி. ஷர்மா பிரனாந்து அவர்களினால் " பாரம்பரிய மூலிகையால் ஆரோக்கியமான வாழ்வு" எனும் தலைப்பிலும் 'Friday Forum' ஒன்று நடாத்தப்பட்டது. ரசனையுடன் ஊடகப் பாவனை மற்றும் வாழ்க்கை தொடர்பாக 2018.11.09 ஆந் திகதியன்று இடம்பெற்ற 'Friday Forum' த்தில் விவாதத்திற்குரிய தொனிப்பொருளாக அமைந்ததுடன் அதனை கலாநிதி ஹஸந்த ஹெட்டியாரச்சி அவர்களால் வழிநடாத்தப்பட்டது. 2018.12.07 ஆந் திகதி அதாவது வருட இறுதியில் நடைபெற்ற 'Friday Forum' இன் நிகழ்ச்சியாக நாட்டுப் புற பாடல்கள் இசையுடன் கூடியதாகவும் கவர்ச்சிகரமான அனுபவத்தினையும் கொண்டு வந்து சேர்த்துள்ளது. "நாட்டுப் புற பாடலும் அதனுடன் இணைந்த எமது வாழ்வும்" என்ற தொனிப்பொருளின் கீழ் விசேட 'Friday Forum' நிகழ்ச்சித்திட்டத்தை வழிநடாத்தியவர் பிரபல கலைஞர் சஹன் ரன்வல அவர்கள் உள்ளிட்ட ரன்வல மன்றத்தின் கலைஞர்களின் தலைமையிலாகும்.



ஒன்றுக்கொன்று வேறுபட்ட தலைப்புக்களில் ஏற்பாடு செய்யப்பட்ட 'Friday Forum' நிகழ்ச்சித்திட்டங்கள் அனைத்தும் திணைக்களத்தின் அலுவலர்களிடமிருந்து பாரிய வரவேற்பு கிடைக்கப்பெற்றதோடு அதன் மூலம் கடமை வாழ்க்கையை நடாத்திச் செல்வதற்காக பாரிய ஆர்வமும் கிடைக்கப்பெற்றுள்ளது.

## 04. புதிய அறிமுகப்படுத்தல்கள்

ஓய்வூதியத் திணைக்களத்தினுள் நிலவுகின்ற முறைமையையும் காணப்படுகின்ற நிலைமையையும் மேம்படுத்தி ஓய்வூதியச் செயற்பாட்டினை மென்மேலும் விருத்தி செய்யும் நடவடிக்கை 2018 ஆம் ஆண்டினுள் இடம்பெற்றது.

### 04. 1. பௌதீக ரீதியான மேம்படுத்தல்கள்.

புதிதாக சேவையிலிருந்து இளைப்பாறும் சகல அலுவலர்களும் நேர்முகப் பரீட்சையொன்றுக்கு உட்படுத்தப்பட்டு பராமரிப்புப் பியச (சத்கார பியச) வின் ஊடாக ஓய்வூதியர்களின் நடவடிக்கைகள் மிகவும் இலகுவாக நிறைவேற்றுவதற்கு முடியுமான வகையில் நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது.

அதில் வரவேற்பு சாரளங்களுக்கான புதிய மடிக் கணனிகள் 03 உம் பெற்றுக்கொடுப்பதும் சத்கார பியசவிற்கான மேசை கதிரைகளை வழங்குதல் மற்றும் கடித ஆவணங்களை பேணிச் செல்வதற்கான கபட் ஒன்றும் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

அலுவலரினதும் ஓய்வூதியம் பெறுநரினதும் பணிகளை இலகு படுத்துவதற்காக திணைக்களத்தினுள் மக்கள் வங்கி ATM இயந்திரமொன்றினை நிறுவுவதற்கு இக்காலப்பிரிவினுள் மேற்கொள்ளப்பட்ட பிரதான பணியாகும்.

அலுவலரிடமிருந்து மிகவும் பயனுறுதி மிக்க சேவையொன்றினை எதிர்பார்த்து அவர்களின் கடமைச் சூழலை நவீனமயப்படுத்துவதும் அரசின் கணக்காய்வுப் பிரிவு, ஒழுங்கின்மைப் பிரிவு மற்றும் பங்களிப்புத் தொகைப் பிரிவு திணைக்களத்தின் மூன்றாம் மாடியிலே நவீனமயப்படுத்தப்பட்ட மற்றொரு இடத்தில் நிறுவும் நடவடிக்கையும் இடம்பெற்றுள்ளது. தகவல் தொழில்நுட்பப் பிரிவு மற்றும் நிறுவன அபிவிருத்திப் பிரிவு என்பவற்றையும் நவீனமயப்படுத்தி அதன் கீழ் மாடியைப் பயன்படுத்தி கூட்டங்களை நடாத்துவதற்கான அறையொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளதோடு, உள்ளக கணக்காய்வுப் பிரிவினை நவீனமயப்படுத்தி திணைக்களத்தினுள் மாடிகள் பலவற்றில் பல பிரிவுகளாக இடம்பெற்று வந்த விதவைகள், அநாதைகள் மற்றும் சிவில் ஆவணக் காப்பகம் ஐந்தாம் மாடியில் ஒழுங்குமுறையில் நிறுவுவதற்கும் முடியுமாகக் காணப்பட்டது.



அவ்வாறே ஓய்வூதியச் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கு ஓய்வூதியத் திணைக்களத்துடன் நேரடியாக தொடர்புகளை பேணிச் செல்வதற்காகவும் அவர்களின் நடவடிக்கைகளை இலகுவாக நிறைவேற்றிக் கொடுப்பதற்குமாக ஓய்வூதியச் சங்கத்தின் ஒருங்கிணைப்பு அலகும் முதல் மாடியில் நிறுவப்பட்டுள்ளது.

தகவல் தொழில்நுட்பம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள சகல புதிய அறிமுகப்படுத்தல்களுக்கும் ஏற்றாற் வகையில் புதிய சேர்வர் எந்திரமொன்றினை கொள்வனவு செய்வதற்கும் ஏற்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டினுள் களனிய வெதமுள்ள விடுமுறை விடுதியின் பாதுகாப்பு வேலி மற்றும் மூடப்படாத பகுதியை பாதுகாப்பு வலையினால் மூடுவதற்கும் முன்னுரிமை வழங்கப்பட்டு மேற்கொள்ளப்படும் பணியாக அமைந்துள்ளது.

திணைக்களத்தின் அலுவலர்கள் மற்றும் திணைக்களத்துக்கு வருகை தரும் சேவைப் பெறுநர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக பாதுகாப்பு கெமரா தொகுதியை நவீனமயப்படுத்துதல் மற்றும் தீயணைப்பு பாதுகாப்பு தொகுதியினையும் இற்றைப்படுத்துவதற்கு ஏற்பட்டுள்ளது.

அலுவலகத்தினுள் சந்தோசமான சூழலை ஏற்படுத்துதல் மற்றும் இடம் சார்ந்த வசதிகளை மேம்படுத்துவதற்காக திணைக்களத்தில் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத பொருட்களை முறைசார்ந்த வகையில் அகற்றும் நடவடிக்கையும் இடம்பெறுகின்றது. மேலும் திணைக்களத்துக்கு வருகை தரும் நபர்களின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக Visitors Pass வழங்கப்படும் செயற்பாடும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.



அவ்வாறே ஆளணியினரின் விடுமுறைகளை முகாமை செய்வதற்காக அவசியப்படும் தேவைகளுக்கு ஏற்ப தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியுமான வகையில் கணனி மென்பொருளொன்றினை உருவாக்கி விடுமுறை முகாமைத்துவ அமைப்பொன்றினை புதிதாக பெற்றுக்கொள்ள முடியுமாக உள்ளது. அதேபோன்று தினந்தோரும் திணைக்களத்துக்கு வெளியிலிருந்து வருகை தரும் நபர்களை ஆளடையாளம் கண்டு கொள்வதற்காக அவர்களுக்கென முன்னரங்கு விசாரணை சாரளத்தில் இருந்து அனுமதிப் பத்திரமொன்றினையும் வழங்க ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## 04.2. விடயத்தை அடிப்படையாகக் கொண்ட மேம்படுத்தல்கள்

ஓய்வூதிய திணைக்களத்தின் முக்கிய பணியாகக் காணப்படும் ஓய்வூதியம் வழங்கும் செயற்பாட்டினை மிகவும் வினைத்திறனுடனும் பயனுறுதி வாய்ந்ததாகவும் மாற்றுவதற்கு பல்வேறு விடயங்களை அடிப்படையாகக் கொண்ட மேம்படுத்தல்கள் தொடர்பாக கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பன்முகப்படுத்தப்பட்ட சகல கொடுப்பனவுகளும் நிகழ்நிலைப்படுத்தப்பட்ட முறையில் மாற்றம் செய்வதன் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட அதி உயர் வினைத்திறன் பன்முகப்படுத்தப்படாத கொடுப்பனவுகள் தொடர்பாகவும் பெற்றுக்கொள்வதற்கான அபிலாசையுடன் பன்முகப்படுத்தப்படாத ஓய்வூதிய விண்ணப்பங்களை நிகழ்நிலைப்படுத்தப்பட வகையில் பெற்றுக்கொள்வதற்காக அவசியப்படும் ஆரம்ப நடவடிக்கைகள் இவ் வருடத்திலே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியச் சுற்றறிக்கை இலக்கம் 09/2015 இற்கு ஏற்ப நிகழ்ந்த மரணப் பணிக்கொடை கொடுப்பனவுச் செயற்பாடு 2018.06.01 ஆந் திகதி முதல் ஓய்வூதியச் சுற்றறிக்கை இலக்கம் 09/2015 இற்கு (திருத்தப்பட்ட III) ஏற்ப நிகழ்நிலைச் செயற்பாடாக மாற்றப்பட்டதன் காரணமாக இவ்வருடத்தில் மரணப் பணிக்கொடை செலுத்தும் செயற்பாட்டில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

மாதாந்தம் ஓய்வூதியம் செலுத்தும் போது ஓய்வூதியர்கள் வங்கிகளிலிருந்து கடன் வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் போது நிகழும் மோசடிகளை குறைத்துக் கொள்வதற்கு முடியுமான வகையில் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கும், வினைத்திறன் மிக்கதாக

மாதாந்த ஓய்வூதியத்தை செலுத்துவதற்கும் அவசியப்படும் தொழில்நுட்பச் சாதனங்களை இற்றைப்படுத்துவதற்கும், கணக்குகளில் நிலவுகின்ற குறைபாடுடைய தரவுகளை சேர்க்கும் போது ஏற்படும் தவறுகள் காரணமாக வங்களிகளினால் திருப்பி அனுப்பப்படும் மாதாந்த ஓய்வூதியத்தின் அளவினை குறைத்துக் கொள்வதற்குமான நடவடிக்கைளை எடுப்பதற்கும் 2018 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்றுள்ளது.

அவ்வாறே ஆயுதப் படைச் சேவைப் பிரிவின் மூலம் சேவைகளை பெறும் ஓய்வூதியர் சமூகத்துக்கு வினைத்திறன் கொண்ட சேவையை நிறைவேற்றுவதற்காக தொழிற்பகுப்பின் மூலம் வேலைத் திட்டங்கள் பலதை நிறைவேற்றிச் செல்வதற்கு முடியுமான தொழிற் படையணியொன்று பலமாக உருவாக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே முப்படையினரின் ஓய்வூதியத்திற்காக Forces 01 எனும் மாதிரிப் படிவம் அறிமுகப்பட்டு, ஒரு ஓய்வூதியம் பெறுநர் பல ஓய்வூதியங்களைப் பெறுகின்றாரா என்பது பற்றி ஆராய்வதற்கும் அதன் மூலம் ஒரே வகையைச் சேர்ந்த ஓய்வூதியங்கள் பலதை பெறும் வாய்ப்பினை தடுத்துக் கொள்வதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. அதனால் நிகழ முடியுமான முறைகேடுகளை மேலும் குறைத்துக்கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. தகவல் தொழில்நுட்பப் பிரிவுக்கு ஒப்பந்த அடிப்படையில் அலுவலர்கள் இருவரை இணைத்துக் கொள்ளல், இணையத்தளத்தை நவீனமயப்படுத்தல், பொது 55 மற்றும் பணிக்கொடையை மீளச் செலுத்துவதற்காக புதிய அமைப்பொன்றினையும் அறிமுகப்படுத்தி வைத்துள்ளது.

ஓய்வூதியச் சமூகத்தின் ஓய்வூதிய முரண்பாடுகளை நீக்கி கொடுப்பனவுகளை செலுத்தும் போது ஏற்படும் தாமதங்களை தவிர்த்துக் கொள்வதற்காக ஒழுங்கின்மைப் பிரிவின் கடமைகளின் பொருட்டு பிரதேச செயலகங்களில் சேவையாற்றும் ஓய்வூதிய அலுவலர்களை வரவழைத்து அந் நடவடிக்கைகளை துரிதப்படுத்தி நிறைவேற்றும் வகையில் செயற்பட்டுள்ளது.

## 05. அடைவுகள்

ஓய்வூதியத் திணைக்களம் 2018 ஆம் ஆண்டினுள் மேற்கொண்ட புதிய அறிமுகப்படுத்தல்கள் மற்றும் மேம்பாடுகள் காரணமாக திணைக்களத்தினுள் சிறப்பு வாய்ந்த அடைவுகள் பலதை எட்டுவதற்கு முடியுமாக அமைந்துள்ளது. அதற்கிணங்க ஓய்வூதியச் சுற்றறிக்கை 9/2015 (திருத்தப்பட்ட III) இன் பிரகாரம் இறப்புப் பணிக்கொடை செலுத்தும் செயற்பாட்டை நிகழ்நிலைப்படுத்துவதற்கு முடியுமாகையால் விண்ணப்பங்களை நிகழ்நிலைப்படுத்தப்பட்ட முறையின் மூலம் அனுப்பி வைக்கப்படுவதன் மூலம் விரைவாக விண்ணப்பங்கள் வழங்கி குறைபாடுகள் நிலவுகின்றதாயின் அவற்றை துரிதமாக பூர்த்தி செய்து வினைத்திறன் மிக்கதாக கொடுப்பனவுகளை வெலுத்த முடியுமாக உள்ளது. இறப்புப் பணிக்கொடை செலுத்தும் செயன்முறையை விரைவு படுத்தப்படுவதுடன் அதன் பின்னராக மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகளையும் விதவைகள் மற்றும் அநாதைகளுக்கு செலுத்தும் நடவடிக்கையும் துரிதப்படுத்தப்படுகின்றது.

அவ்வாறே ஓய்வூதியக் கொடுப்பனவை ஆரம்பிப்பதற்கு முன்னரே பராமரிப்புப் பியசவின் மூலம் ( சத்கார பியச) ஓய்வூதியம் பெறுநருடன் நடாத்தப்படும் நேர்முகப் கலந்துரையாடல் செயற்பாட்டை துரிதப்படுத்துவதன் காரணமாக புதிய ஓய்வூதியர் சமூகத்துக்கு விரைவாக ஓய்வூதிய நலன்களை வழங்குவதற்கு முடியுமாக உள்ளது. அதற்கிணங்க 2018 ஆம் ஆண்டில் 27856 ஆன தொகையினரைக் கொண்ட ஓய்வூதியர்களின் ஓய்வூதியத்தை செயற்படுத்துவதற்கான நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டார்கள் என்பதுடன் 27856 ஓய்வூதியர்களுக்கு அடையாள அட்டைகளும் வழங்கப்பட்டுள்ளது.

ஓய்வூதிய முரண்பாடுகளை நீக்கும் செயற்பாட்டில் ஓய்வூதிய திருத்த நிலுவைக் கொடுப்பனவு 13000 க்கும்மேற்பட்டுக் காணப்பட்டதோடு 2018 ஆம் ஆண்டினுள் அவ் அனைத்து நிலுவைகளும் செலுத்தப்பட்டு நிறைவு செய்வதற்கான இயலுமை காணப்படுகின்றது. மேலும் பிரதேச செயலகங்களில் இருந்து அனுப்பப்படும் நிலுவைக் கொடுப்பனவுகள் அவ்வந்த மாதங்களுக்கே செலுத்தி முடிப்பதற்கு 2018ஆம் ஆண்டினுள் செயற்பட்டுள்ளார்கள்.

பல வருடங்களாக திணைக்கள வளாகத்தினுள் வாடகையின் அடிப்படையில் நடாத்தப்பட்டுச் செல்லும் நிறுவனங்களிடமிருந்து அறவிடக் கூடிய நிலுவைத் தொகை கட்டிடங்களின் வாடகையில் அறவிட்டுக் கொள்வதற்கு 2018 ஆம் ஆண்டினுள் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அதன் பெரும் பகுதி அறவிடப்பட்டும் உள்ளது.

மனித வள அபிவிருத்திச் செயன்முறையில் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் சேவைக் காலம் மற்றும் வினைத்திறன் காண் தடை தாண்டலை முழுமைப்படுத்தியிருப்பினும் பதவியில் நிரந்தரப் படுத்துவதற்கு தடையாக உள்ள பிரத்தியேகக் கோவைகள் அதிக எண்ணிக்கையில் காணப்படுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்து இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் குறித்த அலுவலர்களின் சேவை உறுதிப்படுத்தலை பரிந்துரை செய்து அனுப்புதல் மற்றும் சகல அபிவிருத்தி உத்தியோகத்தர்களினதும் பிரத்தியேகக் கோவைகள் உரிய வகையில் இற்றைப்படுத்துதல் மற்றும் ஆவண



உதவியாளர்களின் சேவைத் தேவைக்கு ஏற்ப வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சையை நடாத்தியும் நிறைவு செய்யப்பட்டுள்ளது

## 06. ஓய்வூதியத் திணைக்களம்

### 06. 1. வருடாந்த ஓய்வூதியகாரர்களின் எண்ணிக்கை

| ஆண்டு | ஓய்வூதியகாரர்களின்எண்ணிக்கை |
|---|---|
| **2014** | 546,379 |
| **2015** | 560,462 |
| **2016** | 579,508 |
| **2017** | 600,867 |
| **2018** | 621,905 |




மூலம்: கணக்குப் பிரிவு

- **மாகாணங்களின் அடிப்படையில் ஓய்வூதியகாரர்களின் பரம்பல் -2018**

| மாகாணம் | ஓய்வூதியகாரர்களின் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|
| ஊவா மாகாணம் | 33,180 | 815,920,749 |
| கிழக்கு மாகாணம் | 25,200 | 637,839,893 |
| சப்ரகமுவ மாகாணம் | 50,168 | 1,289,057,093 |
| வடமேல் மாகாணம் | 71,393 | 1,850,421,693 |
| மத்திய மாகாணம் | 80,417 | 2,089,194,514 |
| வட மத்திய மாகாணம் | 40,007 | 1,013,575,194 |
| வட மாகாணம் | 20,705 | 524,790,005 |
| மேல் மாகாணம் | 216,635 | 5,617,829,247 |
| தென் மாகாணம் | 75,175 | 1,919,917,640 |
| வெளிநாட்டு ஓய்வூதியம் | 9,025 | 255,090,300 |
| மொத்தம் | **621,905** | **16,013,636,328** |






மூலம்: கணக்குப் பிரிவு

- **மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவுகளின் சுருக்கம்**

| மாதம் | ஒட்டுமொத்த செயலூக்கமுள்ள ஓய்வூதியகாரர்களின்எண்ணிக்கை | | |
|---|---|---|---|
| | சிவில் மற்றும் இராணுவம் | விதவைகள் அநாதைகள் | மொத்தம் |
| ஜனவரி | 411,334 | 189,929 | 601,263 |
| பெப்ரவரி | 412,072 | 190,098 | 602,170 |
| மார்ச் | 413,603 | 190,306 | 603,909 |
| ஏப்ரல் | 415,761 | 190,566 | 606,327 |
| மே | 416,562 | 190,675 | 607,237 |
| ஜூன் | 417,831 | 190,852 | 608,683 |
| ஜூலை | 419,646 | 191,090 | 610,736 |
| ஆகஸ்ட் | 420,066 | 190,180 | 610,246 |
| செப்டம்பர் | 422,048 | 190,734 | 612,782 |
| ஒக்டோபர் | 423,370 | 190,917 | 614,287 |
| நவம்பர் | 425,913 | 191,473 | 617,386 |
| டிசம்பர் | 429,654 | 192,251 | 621,905 |

மூலம்: கணக்குப் பிரிவு

| மாதம் | புதிதாக இணைந்த ஓய்வூதியகாரர்களின் எண்ணிக்கை 2018 | | | |
|---|---|---|---|---|
| | சிவில் | *இராணுவம் | விதவைகள் அநாதைகள் | மொத்தம் |
| ஜனவரி | 1,547 | 103 | 343 | **1,993** |
| பெப்ரவரி | 1,416 | 270 | 845 | **2,531** |
| மார்ச் | 2,023 | 297 | 760 | **3,080** |
| ஏப்ரல் | 2,105 | 88 | 754 | **2,947** |
| மே | 1,556 | 152 | 694 | **2,402** |
| ஜூன் | 2,650 | 147 | 1,051 | **3,848** |
| ஜூலை | 2,367 | 239 | 812 | **3,418** |
| ஆகஸ்ட் | 2,598 | 41 | 949 | **3,588** |
| செப்டம்பர் | 2,256 | 117 | 832 | **3,205** |
| ஒக்டோபர் | 2,543 | 85 | 803 | **3,431** |
| நவம்பர் | 3,074 | 65 | 986 | **4,125** |
| டிசம்பர் | 4,251 | 49 | 1,167 | **5,467** |
| **மொத்தம்** | **28,386** | **1,653** | **9,996** | **40,035** |

மூலம்: கணக்குப் பிரிவு




மூலம்: கணக்குப் பிரிவு

- **மரணப் பணிக்கொடைக் கொடுப்பனவுகள் – 2018**

| மாதம் | செலுத்தப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை |
|---|---|
| ஜனவரி | 167 |
| பெப்ரவரி | 45 |
| மார்ச் | 84 |
| ஏப்ரல் | 96 |
| மே | 122 |
| ஜூன் | 38 |
| ஜூலை | 44 |
| ஆகஸ்ட் | 35 |
| செப்டம்பர் | 26 |
| ஒக்டோபர் | 8 |
| நவம்பர் | 4 |
| டிசம்பர் | 10 |
| மொத்தம் | **679** |
| இணையவழி முறை | 475 |
| இறுதிக் கூட்டுத்தொகை | **1154** |




- **மரணித்த மற்றும் பலவீனமடைந்த முப்படை மற்றும் பொலிஸ் சேவை அங்கத்தவர்களுக்கான சம்பளங்கள் மற்றும் படிகள் செலுத்துதல்**

| முப்படை மற்றும் பொலிஸ் கொடுப்பனவுகள் | 2018 டிசம்பர் வரையில் | |
|---|---|---|
| | எண்ணிக்கை | செலுத்திய தொகை ரூபா பில்லியன் |
| இராணுவம் | 36,460 | 26.96 |
| கடற்படை | 1,439 | 1.14 |
| வான்படை | 533 | 0.42 |
| பொலிஸ் | 2,337 | 1.83 |
| மொத்தம் | **40,769** | **30.35** |




மூலம்: கணக்குப் பிரிவு

- **முப்படை மற்றும் பொலிஸ் கொடுப்பனவுகள்**

| | 2014 | | 2015 | | 2016 | | 2017 | | 2018 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆட்களின் எண்ணிக் கை | செலவு (ரூபா மில்லியன்) | ஆட்களின் எண்ணிக் கை | செலவு (ரூபா) | ஆட்களின் எண்ணிக் கை | செலவு (ரூபா) | ஆட்களின் எண்ணிக் கை | செலவு (ரூபா) | ஆட்களின் எண்ணிக் கை | செலவு (ரூபா) |
| இலங்கை இராணுவம் | 29,846 | 15,883 | 30,986 | 20,516 | 34,756 | 23,682 | 35,599 | 24,717 | 36,460 | 26,959 |
| இலங்கை கடற்படை | 1,444 | 924 | 1,472 | 1,042 | 1,415 | 1,037 | 1,391 | 982 | 1,439 | 1,139 |
| இலங்கை வான்படை | 577 | 350 | 566 | 405 | 560 | 410 | 535 | 404 | 533 | 427 |
| இலங்கை பொலிஸ் திணைக்களம் | 2,611 | 1,087 | 2,590 | 1,470 | 2,503 | 1,551 | 2,471 | 1,704 | 2,337 | 1,834 |
| **மொத்தப் பெறுமதி** | **34,478** | **18,244** | **35,614** | **23,433** | **39,234** | **26,679** | **39,996** | **27,808** | **40,769** | **30,359** |

## 06.2. பணிக்கொடைகள் செலுத்துதல்

| பணிக்கொடை வகை | செலுத்திய எண்ணிக்கை | செலுத்திய தொகை (ரூபா) |
|---|---|---|
| **சிவில்** | 27,400 | 23,826,294,186 |
| **கணக்குப் பார்த்தல்** | 1,444 | 569,905,539 |
| **இராணுவம்** | 210 | 86,298,818 |
| **மரணங்கள்** | 1,232 | 641,158,406 |
| **ஏனையவை*** | 7,298 | 678,477,355 |
| **மொத்தம்** | **37,584** | **25,802,134,304** |




* சேவைப் பணிக்கொடை (09), திருத்தப் பணிக்கொடை விசேட நட்டஈடு (10 மற்றும் சிவில்) மரணங்கள் (17)



- **வங்கிகளின் அடிப்படையில் ஓய்வூதியக் கொடுப்பனவுகளின் பரம்பல் - 2018**

| மாதம் | மக்கள் வங்கி | | இலங்கை வங்கி | | சேமிப்பு வங்கி | |
|---|---|---|---|---|---|---|
| | ஓய்வூதியகாரர்களின் எண்ணிக்கை | பெறுமதி | ஓய்வூதியகாரர்களின் எண்ணிக்கை | பெறுமதி | ஓய்வூதியகாரர்களின் எண்ணிக்கை | பெறுமதி |
| ஜனவரி | 925 | 648,906,368 | 788 | 571,278,062 | 488 | 370,452,886 |
| பெப்ரவரி | 684 | 481,607,405 | 481 | 347,558,739 | 281 | 206,827,460 |
| மார்ச் | 1,320 | 970,612,013 | 960 | 729,280,662 | 613 | 468,726,965 |
| ஏப்ரல் | 619 | 486,429,103 | 675 | 523,548,339 | 424 | 337,782,172 |
| மே | 891 | 663,312,900 | 1,075 | 860,661,339 | 657 | 547,131,248 |
| ஜூன் | 900 | 730,012,746 | 866 | 698,932,609 | 531 | 455,401,327 |
| ஜூலை | 1,007 | 806,610,250 | 871 | 713,013,794 | 521 | 444,919,444 |
| ஆகஸ்ட் | 1,425 | 1,135,589,592 | 1,170 | 921,226,274 | 805 | 672,496,309 |
| செப்டம்பர் | 920 | 728,837,834 | 701 | 559,866,364 | 482 | 407,103,455 |
| ஒக்டோபர் | 1,071 | 813,244,627 | 818 | 660,927,309 | 557 | 459,502,891 |
| நவம்பர் | 1,027 | 841,145,621 | 904 | 775,243,048 | 617 | 558,712,237 |
| டிசம்பர் | 876 | 709,429,069 | 732 | 606,301,925 | 512 | 441,028,348 |
| மொத்தம் | **11,665** | **9,015,737,529** | **10,041** | **7,967,838,463** | **6,488** | **5,370,084,742** |

மூலம்: கணக்குப் பிரிவு

- **வங்கிகளின் அடிப்படையில் பணிக்கொடைக் கொடுப்பனவு**

| ஆண்டு | மக்கள் வங்கி | | இலங்கை வங்கி | | சேமிப்பு வங்கி | |
|---|---|---|---|---|---|---|
| | ஓய்வூதியகாரர்களின் எண்ணிக்கை | பெறுமதி | ஓய்வூதியகாரர்களின் எண்ணிக்கை | பெறுமதி | ஓய்வூதியகாரர்களின் எண்ணிக்கை | பெறுமதி |
| 2016 | 10,569 | 5,839,820,740 | 8,435 | 4,740,430,451 | 4,263 | 2,400,917,501 |
| 2017 | 12,581 | 8,055,213,108 | 9,307 | 6,115,014,815 | 5,005 | 3,420,559,676 |
| 2018 | 11,665 | 9,015,737,529 | 10,041 | 7,967,838,463 | 6,488 | 5,370,084,742 |
| மொத்தம் | **34,815** | **22,910,771,377** | **27,783** | **18,823,283,729** | **15,756** | **11,191,561,919** |

மூலம்: கணக்குப் பிரிவு

## 06.3. நிலுவைச் சம்பளங்கள் செலுத்துதல் 2018

ஓய்வூதியம் செலுத்த ஆரம்பிப்பது தாமதமடைதல், அறிவிக்காமல் வெளிநாடு செல்லுதல், சம்பள முரண்பாடுகளைச் செம்மையாக்க செய்தல் ஆகிய காரணங்களினால் ஓய்வூதிய நிலுவைகள் வழங்க வேண்டி ஏற்படுகின்றன. அதற்கிணங்க, 5 இலட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட மற்றும் 10 இலட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட கோவைகள் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு தருவிக்கப்பட்டு குழுவொன்றின் ஊடாகத் சோதனையிட்டு நிலுவை ஓய்வூதியங்கள் செலுத்தப்படுகின்றன. 5 இலட்சம் ரூபாவுக்குக் குறைந்த ஓய்வூதிய நிலுவைகள், கோவைகளை தருவிக்காது அத்தியவசியமான ஆவணங்கள் பிரதேச செயலாளரின் ஊடாக AR ஆக ஸ்கேன் செய்து ஓய்வூதியத் திணைக்களத்தினால் அந்த ஆவணங்களைச் சோதனையிட்டு நிலுவைச் சம்பளங்கள் செலுத்தப்படுகின்றன. அதற்கிணங்க, 2018 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட ஓய்வூதிய நிலுவைக் கொடுப்பனவுகள் பின்வருமாறு காணப்பட்டன

| மாதம் | எண்ணிக்கை | மாதாந்தச் செலவு |
|---|---|---|
| ஜனவரி | 759 | 43,710,628 |
| பெப்ரவரி | 2,414 | 139,830,201 |
| மார்ச் | 1,147 | 72,615,932 |
| ஏப்ரல் | 1,312 | 77,444,662 |
| மே | 892 | 51,642,627 |
| ஜூன் | 1,119 | 72,137,445 |
| ஜூலை | 1,044 | 71,849,750 |
| ஆகஸ்ட் | 668 | 51,821,400 |
| செப்டம்பர் | 1,251 | 78,381,271 |
| ஒக்டோபர் | 966 | 52,008,918 |
| நவம்பர் | 792 | 43,657,430 |
| டிசம்பர் | 1,252 | 65,761,563 |
| **மொத்தம்** | **13,616** | **820,861,827** |



### 06.4. அரச சேவை சேமலாப நிதியக் கிடைப்பனவுகள் மற்றும் கொண்டுப்பனவுகள் (8%+ 12%) 2018

2018 ஆம் ஆண்டிற்கான அரச சேவை சேமலாப நிதியத்திற்கான கட்டாயப் பங்களிப்புத் தொகை (8%) கிடைப்பனவு ரூபா. 296,797,239.00 ரூபா என்பவதுடன் அரசாங்கத்தின் அரசின் மிகைக் கொடுப்பனவு (12%) 439,403,601.00 ரூபா ஆகும். நிதியத்தின் மூலம் வருடத்திற்காகச் செய்யப்பட்ட கொடுப்பனவுகள் 354,979,756.00 ஆகும்.

| மாதம் | கிடைப்பனவு கள்(ரூபா) | கொடுப்பனவு கள்(ரூபா) |
|---|---|---|
| ஜனவரி | 59,499,451 | 33,766,397 |
| பெப்ரவரி | 49,327,311 | 39,038,292 |
| மார்ச் | 52,287,270 | 19,317,506 |
| ஏப்ரல் | 55,312,972 | 33,253,465 |
| மே | 56,910,617 | 21,414,708 |
| ஜூன் | 39,493,263 | 18,696,515 |
| ஜூலை | 51,515,599 | 17,647,927 |
| ஆகஸ்ட் | 56,034,460 | 35,021,301 |
| செப்டம்பர் | 85,410,435 | 8,608,894 |
| ஒக்டோபர் | 93,505,460 | 46,585,902 |
| நவம்பர் | 86,822,096 | 38,059,593 |
| டிசம்பர் | 50,081,961 | 43,569,255 |
| **மொத்தம்** | **736,200,895** | **354,979,756** |



- **2018 ஆம் ஆண்டில் புதிதாக இணைந்து கொண்ட அங்கத்தவர் எண்ணிக்கை (அரச சேவை சேமலாப நிதியம்)**

| மாதம் | விலகிச் சென்ற அங்கத்தவர் எண்ணிக்கை | இணைந்த அங்கத்தவர் எண்ணிக்கை |
|---|---|---|
| ஜனவரி | 509 | 109 |
| பெப்ரவரி | 500 | 153 |
| மார்ச் | 293 | 118 |
| ஏப்ரல் | 342 | 154 |
| மே | 322 | 202 |
| ஜூன் | 363 | 287 |
| ஜூலை | 301 | 478 |
| ஆகஸ்ட் | 453 | 654 |
| செப்டம்பர் | 103 | 514 |
| ஒக்டோபர் | 690 | 787 |
| நவம்பர் | 496 | 539 |
| டிசம்பர் | 584 | 563 |
| மொத்தம் | **4,956** | **4,558** |



## 06. 5. கட்டட வாடகை கிடைப்பனவுகள் மற்றும் விடுமுறை பங்களாக்களின் வருமானம்

- **கட்டட வாடகை கிடைப்பனவுகள் 2018**

| நிறுவனத்தின் பெயர் | கட்டட வாடகை கிடைப்பனவுகள் (ரூபா) |
|---|---|
| ஹைலண்ட் பால் விற்பனை நிலையம் | 126,000 |
| சம்பத் வங்கி AT M | 270,600 |
| ஹட்டன் நஷனல் வங்கி | 2,100,000 |
| ஹட்டன் நஷனல் வங்கி ATM | 264,000 |
| அரச சேவை ஓய்வூதியகாரர்களின் நம்பிக்கை நிதியம் | 120,000 |
| அரச சேவை ஓய்வூதியகாரர்கள் பகுதி II | 48,000 |
| பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் | 4,080,000 |
| லங்கா ஹொஸ்பிட்டல் (தனியார்) கம்பனி | 408,000 |
| நெசவுக் கைத்தொழில் திணைக்களம் | 1,560,000 |
| மாகாண மோட்டார் வாகன ஆணையாளர் அலுவலகம் | 8,400,000 |
| உணவகம் | 386,100 |
| மாகாண காணி ஆணையாளர் திணைக்களம் (மே.மா) | 3,165,000 |
| சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் (மே.மா) | 4,080,000 |
| பிரதேச சுகாதார சேவை | 3,600,000 |
| பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் பகுதி II | |
| அரச அச்சகக் கூட்டுத்தாபனம் | 240,000 |
| அஞ்சல் அலுவலகம் | 2,160,000 |
| மொத்தம் | **31,847,700** |

**கட்டட வாடகை கிடைப்பனவுகள் 2018**




- **விடுமுறை பங்களாக்களின் வருமானம்**

| விடுமுறை பங்களாவின் பெயர் | வருமானம் (ரூபா |
|---|---|
| ரம்பொடை விடுமுறை பங்களா | 353,100 |
| களனி வெதமுல்லை விடுமுறை பங்களா | 8,811,585 |
| **மொத்த வருமானம்** | **9,164,685** |

மூலம்: கணக்குப் பிரிவு, நிருவாகப் பிரிவு

# 07.

# நிதிக் கூற்றுக்கள்

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 11(1) இற்கு இணங்க டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் அதிபதி அனுப்பிய சுருக்க அறிக்கைக்கு (கணக்காய்வு அறிக்கை) இணங்க பின்வரும் கணக்கீட்டு அறிக்கைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

    - அரச சேவை சேமலாப நிதியம்
    - உள்ளூராட்சிச் சேவை விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியம்
    - உள்ளூராட்சிச் சேவை தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதிய நிதியம்
    - உள்ளூராட்சிச் சேவை ஓய்வூதிய நிதியம்

## 2018.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

ஏசீஏ-எவ்

ரூபா

| வரவுசெலவு 2018 | | உள்ளபடியானது 2018 | 2017 |
|---|---|---|---|
| | **வருமான வரவு** | | |
| - | வருமான வரி | - | - |
| - | உள்நாட்டு பொருட்கள், சேவை வரி | - | - |
| - | சர்வதேச வியாபார வரி | - | - |
| 26,000,000,000.00 | வரியல்லாத வருமானம் மற்றும் ஏனையவை | 25,213,646,618 | - |
| 26,000,000,000.00 | **மொத்த வருமான வரவு** | 25,213,646,618 | - |
| - | **வருமானம் அல்லாத கிடைப்பனவுகள்** | | |
| | திறைசேரி முற்பணம் | 182,967,680,000 | - |
| | திறைசேரிக்கு திருப்பி அனுப்பியவை | (1,700,000,000) | |
| | திறைசேரி முற்பணம் (தேறிய) | 181,267,680,000 | |
| | வைப்புக்கள் | 17,467,659 | |
| - | முற்பணக் கணக்கு | 48,947,134 | |
| | ஏனைய கிடைப்பனவுகள் | 27,819,626,215 | |
| | **மொத்த வருமானம் அல்லாத கிடைப்பனவுகள்** | **209,153,721,008** | |
| - | **மொத்த வருமானக் கிடைப்பனவுகள் மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவுகள்** | **234,367,367,626** | |
| | **கழி:- செலவுகள்** | | |
| - | **மீளெழும் செலவுகள்** | | |
| 465,019,631.00 | சம்பளங்கள், ஊதியங்கள் மற்றும் ஏனைய ஊழியர் பயன்கள் | 464,669,718 | |
| 73,375,000.00 | ஏனைய பொருட்கள மற்றும் சேவைகள் | 72,390,290 | |
| 228,639,505,369.00 | நிவாரணங்கள், நன்கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 224,866,916,448 | |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | - | |
| | வேறு மீளெழும் செலவுகள் | - | |
| 229,177,900,000.00 | **மொத்த மீளெழும் செலவுகள்** | **225,403,976,456** | |
| | **மூலதனச் செலவுகள்** | | |
| 22,850,000.00 | மூலதனச் சொத்துக்களின் புனர்வாழ்வு மற்றும் மேம்படுத்தல் | 22,547,715 | |
| 8,917,500.00 | மூலதனச் சொத்துக்களின் கொள்ளல் | 8,682,085 | |
| - | மூலதன மாற்றல்கள் | - | |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்ளல் | - | |
| 1,762,500.00 | திறன் விருத்தி | 1,686,952 | |
| 31,000,000.00 | ஏனைய மூலதனச் செலவுகள் | 30,993,314 | |
| 64,530,000.00 | **மொத்த மூலதனச் செலவு** | **63,910,066** | |
| | **பிரதான ஏட்டுச் செலவுகள்** | **26,900,461,785** | |
| | **வைப்புக் கணக்குகள்** | 14,447,230 | |
| | **முற்பணக் கொடுப்பனவுகள்** | 61,968,169 | |
| | **ஏனைய கொடுப்பனவுகள்** | 26,824,046,386 | |
| 229,242,430,000.00 | **மொத்தச் செலவு** | **252,368,348,307** | |
| | **2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறான முற்பண மீதி** | **(18,000,980,681)** | |

## 2018 டிசம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த வருடத்திற்கான நிகழ்ச்சிகளின் அடிப்படையிலான செலவினச் சுருக்கம்

**செலவினத் தலைப்பு இலக்கம்: 253** **திணைக்களத்தின் பெயர்: ஓய்வூதியத் திணைக்களம்**

| வருடாந்த மதிப்பீட்டல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிகழ்ச்சி இலக்கம் | செலவினத்தின் பெயர் | வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டு ஒதுக்கீடுகள் (1) | குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடுகள் (2) | நி.பி. 66/69 மாற்றல்கள் (3) | மொத்த தேறிய ஒதுக்கீடு (4)=(1)+(2)+(3) | மொத்தச் செலவு (5) | தேறிய பெறுபேற மிதி/(விஞ்சிய வைகள்) (6)=(4)-(5) |
|---|---|---|---|---|---|---|---|
| நிகழ்ச்சி (1) | (1) மீளெழும் | 229,181,180,000 | 0 | -3,280,000 | 229,177,900,000 | 225,403,976,456 | 3,773,923,544 |
| | (2) மூலதனம் | 61,250,000 | 0 | 3,280,000 | 64,530,000 | 63,910,066 | 619,934 |
| | **உப மொத்தம்** | 229,242,430,000 | 0 | 0 | 229,242,430,000 | 225,467,886,522 | 3,774,543,478 |
| | **இறுதிக் கூட்டுத்தொகை** | **229,242,430,000** | **0** | **0** | **229,242,430,000** | **225,467,886,522** | **3,774,543,478** |

## நிகழ்ச்சித்திட்டங்களின அடிப்படையில் செலவுக் கூற்று

**செலவினத் தலைப்பு இலக்கம்: 253** | **திணைக்களத்தின் பெயர்: - ஓய்வூதியத் திணைக்களம்**

| செலவுத் தலைப்பு | நிகழ்ச்சி (1) | | | | | மொத்தச் செலவு |
|---|---|---|---|---|---|---|
| | ஒதுக்கீடு | | | | செலவு | |
| | வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டு ஒதுக்கீடுகள் | குறை நிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடுகள் | நி.பி. 66/69 மாற்றல்கள் | மொத்த தேறிய ஒதுக்கீடு | | |
| **மீளெழும் செலவுகள்** | | | | | | |
| **தனிப்பட்ட வேதனாதிகள்** | | | | | | |
| 1001 சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள் | 319,000,000 | | 9,200,000 | 328,200,000 | 328,092,205 | 328,092,205 |
| 1002 மேலதிக நேரம் மற்றும் விடுமுறை நாள் சம்பளங்கள் | 60,00,000 | | 722,000 | 6,722,000 | 6,712,862 | 6,712,862 |
| 1003 ஏனைய கொடுப்பனவுகள் | 125,000,000 | | 5,097,631 | 130,097,631 | 129,864,650 | 129,864,650 |
| **பிரயாணச் செலவுகள்** | | | | | | |
| 1101 உள்நாட்டு | 2,300,000 | | 248,000 | 2,548,000 | 2,467,461 | 2,467,461 |
| 1102 வெளிநாட்டு | 2,000,000 | | -1,159,000 | 841,000 | 840,450 | 840,450 |
| **வழங்கல்கள்** | | | | | | |
| 1201 எழுதுபொருட்கள் மற்றும் அலுவலகத் தேவைகள் | 8,400,000 | | -2,150,000 | 6,250,000 | 6,228,661 | 6,228,661 |
| 1202 எரிபொருள் | 4,500,000 | | -852,000 | 3,648,000 | 3,636,901 | 3,636,901 |
| 1203 உணவு, பானங்கள் மற்றும் சீருடைகள் | 250,000 | | 0 | 250,000 | 245,335 | 245,335 |

| செலவுத் தலைப்பு | நிகழ்ச்சி (1) | | | | | மொத்தச் செலவு |
|---|---|---|---|---|---|---|
| | ஏற்பாடு | | | | செலவு | |
| | வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டு ஒதுக்கீடுகள் | குறை நிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடுகள் | நி.பி. 66/69 மாற்றல்கள் | மொத்த தேறிய ஒதுக்கீடு | | |
| **பராமரிப்புச் செலவு** | | | | | | |
| 1301 வாகனங்கள் | 2,900,000 | | | 2,900,000 | 2,689,545 | 2,689,545 |
| 1302 இயந்திரங்கள் மற்றும் பொறிகள் | 2,000,000 | | 846,000 | 2,846,000 | 2,845,237 | 2,845,237 |
| 1303 கட்டடங்கள் மற்றும் நிர்மாணங்கள் | 1,000,000 | | 1,582,000 | 2,582,000 | 2,569,134 | 2,569,134 |
| **சேவை** | | | | | | |
| 1401 போக்குவரத்து | 30,000 | | 1,000,000 | 1,030,000 | 861,065 | 861,065 |
| 1402 தபால் மற்றும் தொடர்பாடல் | 7,600,000 | | 5,000,000 | 12,600,000 | 12,565,771 | 12,565,771 |
| 1403 மின்சாரம் மற்றும் நீர் வழங்கல் | 14,000,000 | | 900,000 | 14,900,000 | 14,497,912 | 14,497,912 |
| 1404 குத்தகை மற்றும் உள்ளூராட்சி நிறுவன வரிகள் | 2,300,000 | | 2,080,000 | 4,380,000 | 4,378,968 | 4,378,968 |
| 1409 ஏனையவை | 13,000,000 | | 5,600,000 | 18,600,000 | 18,563,852 | 18,563,852 |
| **மாற்றல்கள்** | | | | | | |
| 1501 நலனோம்பல் நிகழ்ச்சிகள் | 30,000,000,000 | | 358,720,000 | 30,358,720,000 | 30,358,716,301 | 30,358,716,301 |
| 1502 ஓய்வூதியப் பயன்கள் | 198,659,000,000 | | -391,800,631 | 198,267,199,369 | 194,494,729,522 | 194,494,729,522 |
| 1506 அரச ஊழியர்களுக்கான ஆதனக் கடன் வட்டி | 10,400,000 | | -764,000 | 9,636,000 | 9,556,641 | 9,556,641 |
| 1508 ஏனையவை | 1,500,000 | | 2,450,000 | 3,950,000 | 3,913,983 | 3,913,983 |
| **இறுதிக் கூட்டுத்தொகை** | **229,181,180,000** | **0** | **-3,280,000** | **229,177,900,000** | **225,403,976,456** | **225,403,976,456** |

| செலவுத் தலைப்பு | நிகழ்ச்சி (1) | | | | | மொத்தச் செலவு |
| --- | --- | --- | --- | --- | --- | --- |
| | ஏற்பாடு | | | | செலவு | |
| | வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டு ஒதுக்கீடுகள் | குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடுகள் | **நி.பி. 66/69** மாற்றல்கள் | மொத்த தேறிய ஒதுக்கீடு | | |
| **மூலதனச் செலவுகள்** | | | | | | |
| **மூலதனச் சொத்துக்களின் புனர்வாழ்வு மற்றும் மேம்படுத்தல்** | | | | | | |
| 2001 கட்டடங்கள் மற்றும் நிர்மாணங்கள் | 10,000,000 | | 11,100,000 | 21,100,000 | 21,095,862 | 21,095,862 |
| 2002 இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 750,000 | | | 750,000 | 736,932 | 736,932 |
| 2003 வாகனங்கள் | 1,000,000 | | | 1,000,000 | 714,921 | 714,921 |
| **மூலதனச் சொத்துக்களின் கொள்ளல்** | | | | | | |
| 2102 தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 3,000,000 | | 865,000 | 3,865,000 | 3,673,394 | 3,673,394 |
| 2103 இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 3,000,000 | | 2,052,500 | 5,052,500 | 5,008,691 | 5,008,691 |
| **திறன் விருத்தி** | | | | | | |
| 2401 ஊழியர்களுக்கான பயிற்சி | 2,500,000 | | -737,500 | 1,762,500 | 1,686,953 | 1,686,953 |
| **ஏனைய மூலதனச் செலவுகள்** | | | | | | |
| 2509 ஏனையவை | 41,000,000 | | -10,000,000 | 31,000,000 | 30,993,314 | 30,993,314 |
| **இறுதிக் கூட்டுத்தொகை** | **61,250,000** | **0** | **3,280,000** | **64,530,000** | **63,910,066** | **63,910,066** |
| **மீளெழும் மற்றும் மூலதனச் செலவுகளின் கூட்டுத்தொகை** | **229,242,430,000** | **0** | **0** | **229,242,430,000** | **225,467,886,522** | **225,467,886,522** |

## நிகழ்ச்சிகளின் அடிப்படையில் செலவு நிதியீட்டச் சுருக்கம்



**திணைக்களத்தின் பெயர் : ஓய்வூதியத் திணைக்களம்**

**செலவினத் தலைப்பு இலக்கம் : 253**

| | நிதியீட்டம் | நிகழ்ச்சி 01 | | இறுதிக் கூட்டுத்தொகை | | |
|---|---|---|---|---|---|---|
| குறியீடு | குறியீட்டு விபரம் | தேறிய ஏற்பாடு | உள்ளபடியான செலவு | தேறிய ஏற்பாடு | உள்ளபடியான செலவு | செலவின் சதவீதம் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | % |
| 11 | உள்நாட்டு நிதி | 181,003,430,000 | 179,566,850,678 | 181,003,430,000 | 179,566,850,678 | 99 |
| 12 | வெளிநாட்டுக் கடன் | | | | | |
| 13 | வெளிநாட்டு நன்கொடைகள் | | | | | |
| 14 | மீளளிப்புச் செய்யப்படும் வெளிநாட்டுக் கடன் | | | | | |
| 15 | மீளளிப்புச் செய்யப்படும் வெளிநாட்டு நன்கொடைகள் | | | | | |
| 16 | சமஎதிர்தரப்பு நிதியம் | | | | | |
| 17 | வெளிநாட்டு நிதியீட்டத்துடன் தொடர்புடைய உள்நாட்டுச் செலவு | | | | | |
| 18 | வெளிநாட்டு நிதியீட்டத்துடன் தொடர்புடைய உள்நாட்டு சம நிதியீட்டம் | | | | | |
| 21 | விசேட சட்டச் சேவைகள் | 48,239,000,000 | 45,901,035,844 | 48,239,000,000 | 45,901,035,844 | 95 |
| | **மொத்தம்** | 229,242,430,000 | 225,467,886,522 | 229,242,430,000 | 225,467,886,522 | 98 |

## உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய நிதியம்
## 2018.12.31 இல் முடிவடைந்த வருடத்தற்கா வருமானம் மற்றும் செலவு

| செலவு | தொகை (ரூபா) | | வருமானம் | தொகை (ரூபா) | |
|---|---|---|---|---|---|
| | 2017 | 2018 | | 2017 | 2018 |
| ஓய்வூதியப் பங்களிப்பு | 150,445,495.06 | 109,844,278.93 | நிறுவனப் பங்களிப்புப் பணக் கணக்கு | 85,459,868.95 | 80,121,870.42 |
| பற்றாக்குறைத் திரட்டை நிதியத்திற்கு மாற்றுதல் | (64,985,626.11) | (29,722,408.51) | | | |
| | 85,459,868.95 | 80,121,870.42 | | 85,459,868.95 | 80,121,870.42 |

## உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய நிதியம்
## 2018.12.31 இல் உள்ளவாறான மீதி

| பொறுப்புக்கள் | தொகை (ரூபா) | | சொத்துக்கள் | தொகை (ரூபா) | |
|---|---|---|---|---|---|
| | 2017 | 2018 | | 2017 | 2018 |
| திரட்டிய நிதியம் | 1,382,039,108.52 | 1,314,632,550.60 | கிடைக்க வேண்டிய பங்களிப்புப் பணம் | 1,317,604,315.77 | 1,285,727,817.89 |
| சேர்க்கவும் மேலதிகம்/ பற்றாக்குறை | (64,985,626.11) | (29,722,408.51) | | | |
| | 1,317,053,482.41 | 1,284,910,142.09 | | 1,317,604,315.77 | 1,285,727,817.89 |
| முன்னர் கிடைத்த பங்களிப்புப் பணம் | 550,833.36 | 817,675.80 | | | |
| | 1,317,604,315.77 | 1,285,727,817.89 | | 1,317,604,315.77 | 1,285,727,817.89 |

## உள்ளூராட்சி சேவை தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதிய நிதியம்
## 2018.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான
## வருமான மற்றும் செலவுக் கணக்கு

| செலவு | தொகை (ரூபா) | | வருமானம் | தொகை (ரூபா) | |
|---|---|---|---|---|---|
| | **2017** | **2018** | | **2017** | **2018** |
| | | | வட்டி கிடைப்பனவுகள் :- | | |
| ஓய்வூதியப் பங்களிப்பு | 11,504,404 | 140,943,078.69 | திறைசேரிப் பிணையங்கள் | 11,489,535 | 2,848,775.12 |
| வங்கிக் கட்டணங்கள் | 200 | - | மூலதன இலாப நட்டக் கணக்கு | | 13,393,569.68 |
| | | | பற்றாக்குறை (திரட்டு நிதியத்திற்கான மாற்றல்கள்) | 15,069 | 124,700,733.89 |
| | **11,504,604** | **140,943,078.69** | | **11,504,604** | **140,943,078.69** |

## உள்ளூராட்சி சேவை தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதிய நிதியம்
## 2018-12-31 இல் உள்ளவாறான ஐந்தொகை

| பொறுப்புக்கள் | தொகை (ரூபா) | | சொத்துக்கள் | தொகை (ரூபா) | |
|---|---|---|---|---|---|
| | 2017 | 2018 | | 2017 | 2018 |
| திரட்டிய நிதியம் | 124,688,492.05 | 124,700,733.89 | முதலீட்டுக் கணக்கு - திறைசேரிப் பிணையங்கள் | 121,777,430.32 | - |
| கழி<br>பற்றாக்குறை | (15,069.35) | (124,700,733.89) | | | |
| | 124,673,422.70 | - | கிடைக்க வேண்டிய முதலீட்டு வட்டி - திறைசேரிப் பிணையங்கள் | 2,895,992.38 | - |
| | **124,673,422.70** | **-** | | **124,673,422.70** | |

## உள்ளூராட்சி சேவை விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியம்
## 2018.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான
## வருமான மற்றும் செலவுக் கணக்கு

| விபரம் | தொகை (ரூபா) | | விபரம் | தொகை (ரூபா) | |
|---|---|---|---|---|---|
| | 2017 | 2018 | | 2017 | 2018 |
| ஓய்வூதியப் பங்களிப்பு | 203,298.97 | 352,201.60 | பற்றாக்குறை | 203,298.97 | 352,201.60 |
| | **203,298.97** | **352,201.60** | | **203,298.97** | **352,201.60** |

## உள்ளூராட்சி சேவை விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியம்
## 2018.12.31 இல் உள்ளவாறன ஐந்தொகை

| விபரம் | தொகை (ரூபா) | | விபரம் | தொகை (ரூபா) | |
|---|---|---|---|---|---|
| | 2017 | 2018 | | 2017 | 2018 |
| திரட்டிய நிதியம் | 203,298.97 | 352,201.60 | முதலீடு | - | - |
| (-) பற்றாக்குறை | (203,298.97) | (352,201.60) | | | |
| | | | | **-** | **-** |

## 2018 டிசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வருமானக் கணக்கு

வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர்:- ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் செலவுத் தலைபிலக்கம் :- 253

| வருமானக் குறியீடு | வருமானக் குறியீட்டு விபரம் | 2018 அடிப்படை வருமான மதிப்பீடு | 2018 திருத்தப்பட்டவாறான வருமான மதிப்பீடு | 2018 சேகரிக்கப்பட்ட மொத்த தேறிய வருமானம் (மொத்த வருமானம்) | 2017 சேகரித்த மொத்த தேறிய வருமானம் (மொத்த வருமானம் - வருமான மீளளிப்பு) |
|---|---|---|---|---|---|
| | | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| 20.04.02.00 | சமூகப் பாதுகாப்பு பங்களிப்புத் தொகை<br>மாகாண<br>சபைகள் | 10,000,000,000 | 10,000,000,000 | 8,682,995,262 | 7,409,266,605 |
| | **மொத்தம்** | 10,00,00,00,000 | 10,000,000,000 | 8,682,995,262 | 7,409,266,605 |

## 2018 டிசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வருமானக் கணக்கு

**வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர்:- மேலதிக ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்** **செலவுத் தலைப்பு இலக்கம் :- 253**

| வருமானக் குறியீடு | வருமானக் குறியீட்டு விபரம் | 2018 அடிப்படை வருமான மதிப்பீடு | 2018 திருத்தப்பட்டவாறான வருமான மதிப்பீடு | 2018 சேகரிக்கப்பட்ட மொத்த தேறிய வருமானம் (மொத்த வருமானம் - வருமான மீளளிப்பு) | 2017 சேகரிக்கப்பட்ட மொத்த தேறிய வருமானம் (மொத்த வருமானம் - வருமான மீளளிப்பு) |
|---|---|---|---|---|---|
| | | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| 20.04.01.00 | சமூகப் பாதுகாப்பு பங்களிப்புத் தொகை மத்திய அரச | 16,000,000,000 | 16,000,000,000 | 16,530,651,357 | 15,531,146,912 |
| | **மொத்தம்** | 16,000,000,000 | 16,000,000,000 | 16,530,651,357 | 15,531,146,912 |

**ஆசிரியர் விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நிதியம்**
**2018-12-31 இல் முடிவடைந்த வருடத்திற்கான**
**வருமானச் செலவுக் கணக்கு**

| விபரம் | 2017 (ரூபா. ) | 2018 (ரூபா. ) | விபரம் | 2017 (ரூபா. ) | 2018 (ரூபா. ) |
|---|---|---|---|---|---|
| பங்களிப்புப் பணம் மீளச் செலுத்தல் | 5,500,946.66 | 5,993,250.78 | வருடத்திற்காக பங்களிப்புப் பணம் | 81,709,939.57 | 82,964,362.91 |
| வரிகள் | 4,847,683.51 | 3,764,880.42 | வட்டி வருமானம் | 60,596,043.67 | 75,164,692.14 |
| மேலதிகம் | 131,957,353.07 | 148,370,923.85 | | | |
| | **142,305,983.24** | **158,129,055.05** | | **142,305,983.24** | **158,129,055.05** |

## ஆசிரியர் விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நிதியம்

## 2018-12-31 இல் உள்ளவாறான ஐந்தொகை

| | 2017 (ரூபா. ) | 2018 (ரூபா. ) | | 2017 (ரூபா. ) | | 2018 (ரூபா. ) | |
|---|---|---|---|---|---|---|---|
| திரட்டிய நிதியம் | 1,350,530,396.46 | 1,484,488,651.75 | முதலீட்டுப் பெறுமதி | | 639,617,175.66 | | 724,045,883.12 |
| | | | **மாற்றப்பட்ட சொத்துக்கள்** | | | | |
| | | | கிடைக்க வேண்டிய வட்டி | 75,985,097.14 | | 61,977,153.52 | |
| | | | கிடைக்க வேண்டிய பணம் | 4,805,044.46 | | 3,753,885.58 | |
| | | | எல். டி இருப்பு பதிவு மீதி | 768,159,240.04 | 848,949,381.64 | 846,181,511.05 | 911,912,550.15 |
| **கூட்டுக** மேலதிகம் | 131,957,353.07 | 148,370,923.85 | | | | | |
| | 1,482,487,749.53 | 1,632,859,575.60 | | | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** செலுத்த வேண்டிய வரிகள் | 6,078,807.77 | 3,098,857.67 | | | | | |
| | **1,488,566,557.30** | **1,635,958,433.27** | | | **1,488,566,557.30** | | **1,635,958,433.27** |

**அரச சேவை சேமலாப நிதியம்**
**வருமான செலவுக் கணக்கு**
**2018.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான**

| | 2018 | | 2017 | |
|---|---|---|---|---|
| **வருமானம்** | | | | |
| வரிக்கு முன்னரான வட்டி வருமானம் | | 6,927,587,728 | | 5,737,834,950 |
| கழி- வரிகள் | | (135,367,581) | | (83,357,061) |
| வரிக்கு பின்னரான வட்டி வருமானம் | | **6,792,220,141** | | 5,654,477,889 |
| | | | | |
| கழி- செலவுகள் | | | | |
| மின்சாரம் | 486,638 | | 465,078 | |
| நீர் | 54,415 | | 12,136 | |
| சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள் | 10,349,476 | | 10,399,153 | |
| மேலதிக நேரக் கொடுப்பனவு. | 447,211 | | 461,583 | |
| கொடுப்பனவு | 57,500 | | 57,500 | |
| எழுது பொருட்கள் மற்றும் அலுவலகச் செலவுகள் | 223,193 | | 431,404 | |
| சுதந்திர புகையிரத அனுமதிப்பத்திரம் | 26,175 | | 23,520 | |
| போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் | 124,026 | | - | |
| பெறுமானத் தேய்வுகள் | 179,522 | | 25,188 | |
| வேறு மீளெழும் செலவுகள் | 16,268 | | 15,495 | |
| ஏனைய செலவுகள் | 142,464 | | - | |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | 172,500 | **12,279,387** | 172,500 | 12,063,558 |
| **மேலதிகம்** | | **6,779,940,754** | | 5,642,414,331 |
| | | | | |
| **கூட்டுக- பொது திரட்டிலிருந்து மாற்றல்கள்** | | **2,047,764** | | 2,769,293 |
| **பங்களிப்பாளர்களுக்கு ஒதுக்க முடியுமான வருமானம்** | | **6,781,988,518** | | 5,645,183,624 |
| | | | | |
| **வட்டி ஒதுக்கம்** | | | | |
| கட்டாயப் பங்களிப்பு | 2,708,052,846 | | 2,234,275,558 | |
| தன்னார்வப பங்களிப்பு | 4,211,102 | | 3,468,034 | |
| அரசாங்க பங்களிப்பு | 4,065,000,904 | **6,777,264,852** | 3,405,276,801 | 5,643,020,393 |
| **ஒதுக்கீடு மற்றும் பொது திரட்டிலிருந்து மாற்றியதன் பின்னரான மேலதிக வட்டி வருமானம்** | | **4,723,666** | | **2,163,231** |

**2018 டிசம்பர் 31 ஆந் திகதியில்**
**உள்ளவாறான ஐந்தொகை**

| | 2018 | | 2017 | |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | | |
| தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் | **-** | | 6,697 | |
| ஏனைய உபகரணங்கள் | **-** | | 92,628 | |
| கணனி துணைப் பாகங்கள் | **-** | **-** | 80,197 | 179,522 |
| முதலீட்டுக் கணக்கு - செலவுக்கு | | **25,190,659,288** | | 34,050,366,302 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | |
| முதலீட்டுச் செலவுக்கு | **33,468,586,147** | | 18,870,215,298 | |
| கிடைக்க வேண்டிய வட்டி | **3,677,771,439** | | 2,229,078,288 | |
| கிடைக்க வேண்டிய அரச பங்களிப்புப் பணம் | **23,196,271** | | 17,403,931 | |
| செம்மையாக்கல் கணக்கு | **29,448,892** | | 29,209,393 | |
| முற்பணக் கொடுப்பனவுகள் | **-** | | 141,721 | |
| கணக்கின் மீதி | **13,383,274** | **37,212,386,023** | 223,640,307 | 21,369,688,938 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **62,403,045,311** | | 55,420,234,762 |
| **மூலதன மற்றும் வைப்புக்கள்** | | | | |
| **திரட்டிய நிதியம்** | | | | |
| கட்டாயப் பங்களிப்புப் பணம் | **24,307,762,204** | | 21,479,409,368 | |
| தன்னார்வ பங்களிப்புப் பணம் | **37,786,900** | | 33,394,939 | |
| அரசாங்க பங்களிப்புப் பணம் | **37,726,385,705** | **62,071,934,809** | 33,418,512,038 | 54,931,316,345 |
| **திரட்டு** | | | | |
| மூலதன திரட்டு | **3,790** | | 3,790 | |
| பொதுத் திரட்டு | **4,723,666** | **4,727,456** | 2,163,231 | 2,167,021 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | |
| சேர வேண்டி கணக்காய்வுக் கட்டணங்கள் | **690,000** | | 517,500 | |
| செலுத்தப்பட்ட அரசாங்க மிகையூதியம் | **313,813,696** | | 474,425,527 | |
| சேவரவேண்டிய செலவுகள் | **11,879,350** | **326,383,046** | 11,808,369 | 486,751,396 |
| **மொத்த மூலதனச் செலவு மற்றும் வைப்புக்கள்** | | **62,403,045,311** | | 55,420,234,762 |

# 08.

# கணக்காய்வு அறிக்கை

**LEW/D/DOP/02/19/11**

ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம்,

ஓய்வூதியத் திணைக்களம்.

**உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய நிதியத்தின் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குவிதிகளின் தேவைப்பாடு தொடர்பாக 2018 ஆம் ஆண்டு இலக்கம் 19 இனையுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்க அறிக்கை.**

1. **நிதிக் கூற்று**

**1.1 தகுதியுடைய அபிப்பிராயம்**

உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய நிதியம் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு ஐந்தொகை மற்றும் அத்திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான வருமான மற்றும் செலவுக் கணக்குகள் மற்றும் அத்திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான பணப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுடன் தொடர்புடைய பதிவுகள், சாரம்சங்கள், முக்கிய கணக்கியல் கொள்கைகளையும் உள்ளடக்கியதாக 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன்நிறைவடையும் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (3) ஆம் ஏற்பாடுகளின் கீழ் இணைந்ததாக வாசிக்கப்படவேண்டிய2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்கத்துடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி எனது ஆணைக்கு கட்டுப்பட்டு கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. அரசியலமைப்புச் சட்டத்தின் 154 (6) ஆம் ஏற்பாடுகளின் படி எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் முன்னளிக்கப்படும்.

எனது கருத்துப் படி, எனது அறிக்கையின் தகுதியடைய அபிப்பிராயத்துக்கான அடிப்படை என்ற பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் விளைவுகள் தவிர்த்து இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் 2018 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கான நிதி நிலைமை மற்றும் அத்திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்காக அதன் நிதியியல் செயற்பாடுகள் மற்றும் பணப் பாய்ச்சல் இலங்கை அரச துறையின் கணக்கீட்டு தர நியமங்களுக்கு அமைய உண்மையாகவும் நியாயமானதுமாக பார்வையை வழங்குகின்றது.

**1.2 தகுதியுடைய அபிப்பிராயத்துக்கான அடிப்படை**

**(அ) கணக்கீட்டு தர நியமங்களுக்கு முரண்படுகின்றது.**

இலங்கை அரச துரைறயின் கணக்கீட்டு தர நியம இலக்கம் 01 இன் படி செயற்பட்டிருக்காமை, நிதியத்தின் வருமானம் இயல்பாகச் சேர்தல் அடிப்படையில் மற்றும் செலவுத் தொகை என்ற அடிப்படையில் பின்பற்றப்பட்டு நிதிக் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

**(ஆ) தெளிவுபடுத்தப்படாத வேறுபாடுகள்**

2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு நிதிநிலை அறிக்கைக்கு ஏற்ப பிரதேச சபைகள் மற்றும் நகர சபைகளுக்கு கிடைக்கப்பெற வேண்டிய பங்களிப்புத் தொகையின் நிலுவை மற்றும் நேரடியாக நிரூபிப்பத்தலுக்கமைய, நிதிக் கூற்றுக்களின் நிலுவையின் பெறுமதி 10 சபைகளின் ரூபா. 9,565,464 ஆக அதிகரித்தும், ஒரு (01) சபையின் நிலுவை ரூபா. 172,150 ஆன தொகையால் குறைவடைந்துள்ளதாகவும் காட்டப்பட்டுள்ளது.

இலங்கை கணக்கீட்டு தர நியமங்களுக்கு அமைவாக (இ.க.த. நி) இக் கணக்காய்வு நடாத்தப்பட்டுள்ளது. அத்தகைய தர நியமங்களின் கீழுள்ள எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் விபரிக்கப்பட்டுள்ளன. எனது தகுதியுடைய அபிப்பிராயத்துக்கான அடிப்படையை வழங்குவதற்கு நான் பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்றுகள் போதுமானதென்றும் பொருத்தமானதென்றும் நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிநிலைக் கூற்றுகள் தொடர்பான முகாமையினதும் நிர்வாகத்துக்கு பொறுப்பானவர்களது பொறுப்புக்கள்

இந் நிதிநிலை அறிக்கைகள் இலங்கை அரச துறையின் கணக்கீட்டு தர நியமங்களுக்கு ஏற்பதயாரிக்கப்பட்டுள்ளது எனவும் உண்மையாகவும், நியாயமாகவும் முன்னளிக்கப்படுதல் மற்றும் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்பட முடியுமான போதுமானளவு பிறழ் கூற்றேதும் இல்லாத நிதிநிலை அறிக்கையை தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அவசியப்படும் உள்ளக கட்டுப்பாட்டுத் தீர்மானங்களை எடுப்பது முகாமையின் பொறுப்பாகும்.

நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிக்கும் போது, நிதியினை தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்கு முடியுமான வகையில் தீர்மானங்களை எடுப்பது முகாமையின் பொறுப்பாகும் என்பதோடு, முகாமைத்துவத்தின் நிதியத்தை செலுத்தி தீர்த்து விடக் கருதுவதாயின் அல்லது பதிலீட்டு முறைமைகள் இல்லாதிருந்தாலும் அதன் செயற்பாடுகளை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாயின் தவிர தொடர்ச்சியான இருப்புக்குரிய காரணிகளை தெளிவுபடுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களை அறிக்கையிடும் செயற்பாடு தொடர்பான பொறுப்பினை ஆளுகைக்கு பொறுப்பான தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவிற்கேற்ப, நிதியத்தின் வருடாந்த மற்றும் பருவகால நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அதன் வருமானம், செலவு , சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை பேணிவர வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்த நிதிக் கூற்றிலும்,மோசடி அல்லது தவறினாலான முக்கிய பிறழ் கூற்றேதும் இல்லையென்ற நியாயமான உறுப்படுத்தலை பெற்றுக்கொள்வதும் எனது கருத்துரையை

உள்ளடக்கி கணக்காய்வாளர் அவ் அறிக்கையை சமர்ப்பிப்பதும் எனது குறிக்கோளாகும். நியாயமானஉறுதிப்படுத்தலானது உயர்மட்ட உறுதிப்படுத்தலாக இருந்தாலும் குறித்த கணக்காய்வு இலங்கை கணக்காய்வு தரநியமங்களுக்கமைவாக நடத்தப்பட்டதாக உத்தரவாதப் படுத்தப்படாது. அவ்வாறே, ஏதாவது பிறழ் கூற்றுகள் இருந்தால் அது தொடர்பாக கண்டறியப்படும். பிறழ் கூற்றுக்களில் மோசடி அல்லது தவறிலிருந்து ஏற்பட முடியுமென்பதுடன், தனிப்பட்ட ரீதியாகவோ அல்லது கூட்டாகவோ நிதிக் கூற்றுக்களின் அடிப்படையில் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தவதாயின் அவை முக்கியமானவை.

என்னால் தொழிற்துறைத் தீர்ப்பு மற்றும் தொழிற்துறை கட்டமைப்புடன் இலங்கை கணக்காய்வு தர நியமங்களுக்கு ஏற்ப கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது.மேலும்,

- மோசடி அல்லது தவறின் காரணத்தினால் நிதிக் கூற்றுக்களில் ஏற்பட முடியுமான பிறழ் கூற்றின் ஆபத்துக்களை இனங்கண்டு அவற்றை மதிப்பிட்டு, அத்தகைய ஆபத்துக்களுக்கு துலங்கல் காண்பிக்கும் விதத்தில் உசிதமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதனால் மோசடி மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும், எனது கருத்துரைக்கு போதியளவிலானதும் பொருத்தமானதானதும் கணக்காய்வு சான்றினை பெற்றுக்கொள்கிறேன். போதுமானளவு பிறழ் கூற்றுக்களினால் ஏற்பாடும் ஆபத்துக்களை விட மோசடியினால் ஏற்படும் ஆபத்துக்கள் பாரியதாக அமைவதோடு, கூட்டு நடவடிக்கை,போலியான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்றே தவிர்த்தல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை தவிர்ந்திருத்தல் என்பன மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றன.
- கால அவகாசங்களுக்கு ஏற்ப உசிதமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவினைப் பெற்றிருந்தாலும் , உள்ளக கட்டுப்பாட்டின் பயனுறுதித் தன்மை தொடர்பான கருத்துரையினைத் தெரிவிப்பதற்கு நாடுவதில்லை.
- பிரயோகத்தில் உள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படும் தொடர்புடையதான வெளிப்படுத்தல்களின் தகுதிகள் பாராட்டத்தக்கது.
- நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலைகள் காரணமாக நிறுவனத்தின் இருப்பு தொடர்பில் போதியளவு நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பது பற்றி பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பு தொடர்பான அடிப்படை இங்கு தீர்மானிக்கப்படுகின்றது.போதியளவு நிச்சயமற்றதன்மை காணப்படுவதாக நான் முடிவு செய்திருப்பதாயின் நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது அவதானம் செலுத்தப்பட வேண்டும் என்பதோடு, அவ்வெளிப்படுத்தல்கள் போதியதற்றதாக இருப்பின் எனது கருத்தை மாற்றியமைக்க வேண்டும்.எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகளின் மீது தொடர்ச்சியான இருப்பு நிறைவடைவதற்கும் முடியும்.

- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களை முன்வைத்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மதிப்பீட்டுக்கு உட்பட்டுள்ளதோடு, அதற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் உசிதமான மற்றும் நியாயமான வகையில் நிதிக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருப்பதானது பாராட்டத்தக்கது.

எனது கணக்காய்வினுள் அடையாளங் காணப்பட்ட முக்கிய கணக்காய்வுத் தேடல்கள், முக்கிய உள்ளக கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிர்வாகிக்கப்படும் தரப்பினர்களுக்கு தெளிவுபடுத்தப்படும்.

## 2. ஏனைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் அவசியப்பாடு தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தி ன் தேவைப்பாடு தொடர்பான விசேட நிதி ஒதுக்கீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்கத்து டைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (III) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு இணங்க நிதியத்தின் நிதிக் கூற்று கடந்த வருடத்துடன் ஒத்திசைவாக உள்ளது.

- 2018 ஆம் ஆண்டு இலக்கம் 19 இனைக் கொண்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (IV)ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ளவாறு தேவைப்பாட்டுக்கு ஏற்ப இவ் அறிக்கையின் 1.2 (அ), (இ), (ஈ) போன்ற பந்திகளில் காட்டப்பட்டுள்ள அவதானங்கள் தவிர்ந்த கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 3. செயற்பாடுகள் குறித்த மதிப்பாய்வு

### கிடைக்கப்பெற வேண்டிய கணக்குகள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானங்கள் பெறப்பட்டுள்ளது.

(அ) 2018 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிறைவடையும் உள்ளூராட்சி நிறுவனங்கள் 292 இற்காக கிடைக்கப் பெறவேண்டிய நிலுவை ரூபா. 1,285,727,817 ஆன தொகையாகும். இவற்றின் பெறுமதி ரூபா. 218,898,449 ஆன தொகை 126 உள்ளூராட்சி நிறுவனங்கள் ஐந்து (05) முதல் பத்து (10) வருடங்களுக்கிடையிலான காலப் பகுதியில், பெறுமதி ரூபா. 926,069,312 ஆன தொகையும் பத்து (10) வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து அறவிடப்படாத நிலுவையாக

காணப்படுவதுடன், அறவிட்டுக் கொள்வதற்கு அவசியப்படும் எந்தவிட நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டிருக்க வில்லை.

(ஆ) நிதிக் கூற்றுக்களுடன் முன்னளிப்புச் செய்யப்பட்டுள்ள ஓய்வூதியத்திற்கான பங்களிப்புத் தொகை உப அட்டவணைகளுக்கு ஏற்ப மீளாய்வாண்டில் உள்ளூராட்சி நிறுவனங்களின் எண்ணிக்கை 94 இல் இருந்து அறவிடப்பட முடியுமான பங்களிப்புத் தொகை ரூபா. 461,818,600 ஆன தொகை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.1 செயலாற்றுகை**

1974 ஆம் ஆண்டு இலக்கம் 16 இனையுடைய உள்ளூராட்சி சேவைகள் சட்டத்தின் 15 ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளூராட்சி சேவையின் ஓய்வூதியத்துடன் கூடிய உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடையை செலுத்தும் நோக்குடன் இந் நிதியம் நிறுவப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் 1993 ஆம் ஆண்டின் மாகாண அரச சேவை நிறுவப்பட்டதுடன் மாகாண அரச அலுவலர்களுக்கு அரச அலுவலர்களுக்கு உரித்தாக வெண்டிய ஓய்வூதியம் மற்றும் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நலன்கள் கிடைக்கப்பெறுவதன் காரணமாக 1993 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 03 ஆந் திகதி முதல் நிதியத்துக்கு புதிய அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளும் செயற்பாடு இடம்பெற்றிருக்கவில்லை. அவ்வாறான புதிய அங்கத்தவர்களிடமிருந்து பணம் சேகரிக்கப்படாமை மற்றும் ஏற்கனவே உள்ள அங்கத்தவர்களின் பங்களிப்பு ஓய்வூதியம் செலுத்துவதற்கு போதுமானதற்றது என்பதன் காரணமாக ஓய்வூதியத் திணைக்களத்தின் செலவுத் தலைப்பின் கீழ் வருடாந்த வரவுசெலவுத் திட்ட மதிப்பீட்டு நிதி ஒதுக்கீட்டின் மூலம் ஓய்வூதியச் செலவுகளை ஏற்கப்பட்டிருப்பதோடு நடப்பு வருடத்தில் அவ்வாறு ஏற்கப்பட்ட செலவு ரூபா. 1,085,161,850 ஆகக் காணப்பட்டது.இதன் காரணமாக நிதியத்தை நிறுவியதற்கான அடிப்படை நோக்கம் நிறைவேறி இருக்கவில்லை.

டப்ளியூ.பி.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

LEW/D/DOP/02/19/12

ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம்,

ஓய்வூதியத் திணைக்களம்.

**உள்ளூராட்சி சேவைகள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குவிதிகளின் தேவைப்பாடு தொடர்பாக 2018 ஆம் ஆண்டு இலக்கம் 19 இனையுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்க அறிக்கை.**

## 1. நிதிக் கூற்று

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

உள்ளூராட்சி சேவைகள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியம் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு ஐந்தொகை மற்றும் அத்திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான வருமான மற்றும் செலவுக் கணக்குகள் மற்றும் அத்திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான பணப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுடன் தொடர்புடைய பதிவுகள், சாரம்சங்கள், முக்கிய கணக்கியல் கொள்கைகளையும் உள்ளடக்கியதாக 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (3) ஆம் ஏற்பாடுகளின் கீழ் இணைந்ததாக வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்கத்துடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி எனது ஆணைக்கு கட்டுப்பட்டு கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. அரசியலமைப்புச் சட்டத்தின் 154 (6) ஆம் ஏற்பாடுகளின் படி எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் முன்னளிக்கப்படும்.

எனது அறிக்கையில் பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை என்ற பகுதியில் கலந்துரையாடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக நிதியத்தின் 2018 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிதி நிலைமைகள் மற்றும் அத் திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்காக அதன் நிதியியல் செயற்பாடுகள் மற்றும் பணப் பாய்ச்சல் இலங்கை அரச துறையின் கணக்கீட்டு தர நியமங்களுக்கு ஏற்ப உண்மையானதாகவும் நியாயமானதாகவும் எடுத்துக் காட்டப்படவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 பாதகமான அபிப்பிராயத்துக்கான அடிப்படை

**கணக்கீட்டுக் குறைபாடுகள்**

மீளாய்வாண்டில் கிடைக்கப்பெற்றுள்ள முன்னைய வருடங்களுக்கு உரித்தான ஓய்வூதிய பங்களிப்புத் தொகை ரூபா. 352,201 ஆன திரண்ட நிதியத்துடன் தகவமைவு செய்யப்பட்டுள்ளதோடு, அப் பணத் தொகை ஓய்வூதியத் திணைக்களத்துக்கு செலுத்துதல், வருமானம் மற்றும் செலவுக் கணக்குடன் தகவமைவு செய்யப்பட்டதன் காரணமாக நிதிக் கூற்றுக்களில் குறைபாடுகள் ஏற்பட்டிருந்தது.

இலங்கை கணக்கீட்டு தர நியமங்களுக்கு அமைவாக (இ.க.த. நி) இக் கணக்காய்வு நடாத்தப்பட்டுள்ளது. அத்தகைய தர நியமங்களின் கீழுள்ள எனது பொறுப்புக்கள் இவ் அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் விபரிக்கப்பட்டுள்ளன. எனது அபிப்பிராயத்துக்கான அடிப்படையை வழங்குவதற்கு நான் பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்றுகள் போதுமானதென்றும் பொருத்தமானதென்றும் நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிநிலைக் கூற்றுகள் தொடர்பாக முகாமையினதும் நிர்வாகத்துக்கு பொறுப்பானவர்களதும் பொறுப்புக்கள்

இந் நிதிநிலை அறிக்கைகள் இலங்கை அரச துறையின் கணக்கீட்டு தர நியமங்களுக்கு ஏற்பதயாரிக்கப்பட்டுள்ளது எனவும் உண்மையாகவும், நியாயமாகவும் முன்னளிக்கப்படுதல் மற்றும் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்பட முடியுமான போதுமானளவு பிறழ் கூற்றேதும் இல்லாத நிதிநிலை அறிக்கையை தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அவசியப்படும் உள்ளக கட்டுப்பாட்டுத் தீர்மானங்களை எடுப்பது முகாமையின் பொறுப்பாகும்.

நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிக்கும் போது, நிதியினை தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்கு முடியுமான வகையில் தீர்மானங்களை எடுப்பது முகாமையின் பொறுப்பாகும் என்பதோடு, முகாமைத்துவத்தின் நிதியத்தை செலுத்தி தீர்த்து விடக் கருதுவதாயின் அல்லது பதிலீட்டு முறைமைகள் இல்லாதிருந்தாலும் அதன் செயற்பாடுகளை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாயின் தவிர தொடர்ச்சியான இருப்புக்குரிய காரணிகளை தெ ளிவுபடுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களை அறிக்கையிடும் செயற்பாடு தொடர்பான பொறுப்பினை ஆளுகைக்கு பொறுப்பான தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவிற்கேற்ப, நிதியத்தின் வருடாந்த மற்றும் பருவகால நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அதன் வருமானம், செலவு , சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை பேணிவர வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்த நிதிக் கூற்றிலும்,மோசடி அல்லது தவறினாலான முக்கிய பிறழ் கூற்றேதும் இல்லையென்ற நியாயமான உறுப்படுத்தலை பெற்றுக்கொள்வதும் எனது கருத்துரையை உள்ளடக்கி கணக்காய்வாளர் அவ் அறிக்கையை சமர்ப்பிப்பதும் எனது குறிக்கோளாகும். நியாயமானஉறுதிப்படுத்தலானது உயர்மட்ட உறுதிப்படுத்தலாக இருந்தாலும் குறித்த கணக்காய்வு இலங்கை கணக்காய்வு தரநியமங்களுக்கமைவாக நடத்தப்பட்டதாக உத்தரவாதப் படுத்தப்படாது. அவ்வாறே, ஏதாவது பிறழ் கூற்றுகள் இருந்தால் அது தொடர்பாக கண்டறியப்படும். பிறழ் கூற்றுக்களில் மோசடி அல்லது தவறிலிருந்து ஏற்பட முடியுமென்பதுடன், தனிப்பட்ட ரீதியாகவோ அல்லது கூட்டாகவோ நிதிக் கூற்றுக்களின் அடிப்படையில் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தவதாயின் அவை முக்கியமானவை.

என்னால் தொழிற்துறைத் தீர்ப்பு மற்றும் தொழிற்துறை கட்டமைப்புடன் இலங்கை கணக்காய்வு தர நியமங்களுக்கு ஏற்ப கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது.மேலும்,

- மோசடி அல்லது தவறின் காரணத்தினால் நிதிக் கூற்றுக்களில் ஏற்பட முடியுமான பிறழ் கூற்றின் ஆபத்துக்களை இனங்கண்டு அவற்றை மதிப்பிட்டு, அத்தகைய ஆபத்துக்களுக்கு துலங்கல் காண்பிக்கும் விதத்தில் உசிதமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதனால் மோசடி மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும், எனது கருத்துரைக்கு போதியளவிலானதும் பொருத்தமானதானதும் கணக்காய்வு சான்றினை பெற்றுக்கொள்கிறேன். போதுமானளவு பிறழ் கூற்றுக்களினால் ஏற்பாடும் ஆபத்துக்களை விட மோசடியினால் ஏற்படும் ஆபத்துக்கள் பாரியதாக அமைவதோடு, கூட்டு நடவடிக்கை,போலியான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்றே தவிர்த்தல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை தவிர்ந்திருத்தல் என்பன மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றன.
- கால அவகாசங்களுக்கு ஏற்ப உசிதமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவினைப் பெற்றிருந்தாலும் , உள்ளக கட்டுப்பாட்டின் பயனுறுதித் தன்மை தொடர்பான கருத்துரையினைத் தெரிவிப்பதற்கு நாடுவதில்லை.
- பிரயோகத்தில் உள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படும் தொடர்புடையதான வெளிப்படுத்தல்களின் தகுதிகள் பாராட்டத்தக்கது.
- நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலைகள் காரணமாக நிறுவனத்தின் இருப்பு தொடர்பில் போதியளவு நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பது பற்றி பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பு தொடர்பான அடிப்படை இங்கு தீர்மானிக்கப்படுகின்றது.போதியளவு நிச்சயமற்றதன்மை காணப்படுவதாக நான் முடிவு செய்திருப்பதாயின் நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது அவதானம்

செலுத்தப்பட வேண்டும் என்பதோடு, அவ்வெளிப்படுத்தல்கள் போதியதற்றதாக இருப்பின் எனது கருத்தை மாற்றியமைக்க வேண்டும்.எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகளின் மீது தொடர்ச்சியான இருப்பு நிறைவடைவதற்கும் முடியும்.

- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களை முன்வைத்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மதிப்பீட்டுக்கு உட்பட்டுள்ளதோடு, அதற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் உசிதமான மற்றும் நியாயமான வகையில் நிதிக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருப்பதானது பாராட்டத்தக்கது.

எனது கணக்காய்வினுள் அடையாளங் காணப்பட்ட முக்கிய கணக்காய்வுத் தேடல்கள், முக்கிய உள்ளக கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிர்வாகிக்கப்படும் தரப்பினர்களுக்கு தெளிவுபடுத்தப்படும்.

## 2. ஏனைய சட்டங்கள், விதிகளின் மற்றும் பிரமாணங்களின் அவசியப்பாடு தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தி ன் தேவைப்பாடு தொடர்பான விசேட நிதி ஒதுக்கீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்கத்து டைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (III) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு இணங்க நிதியத்தின் நிதிக் கூற்று கடந்த வருடத்துடன் ஒத்திசைவாக உள்ளது.

- இவ் அறிக்கையின் 1.2 இன் பரிந்துரை தவிர்ந்த 2018 ஆம் ஆண்டு இலக்கம் 19 இனைக் கொண்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (IV)ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ளவாறு தேவைப்பாட்டுக்கு ஏற்ப கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### செயலாற்றுகை

1974 ஆம் ஆண்டு இலக்கம் 16 இனையுடைய உள்ளூராட்சி சேவைகள் சட்டத்தின் 15 ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளூராட்சி சேவையின் ஓய்வூதியத்துடன் கூடிய உறுப்பினர்களின் விதவைகள் மற்றும் அநாதைகளுக்குரிய ஓய்வூதியம் செலுத்தும் நோக்குடன் இந் நிதியம் நிறுவப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் 1993 ஆம் ஆண்டின் மாகாண அரச சேவை நிறுவப்பட்டதுடன் மாகாண அரச அலுவலர்களுக்கு அரச அலுவலர்களுக்கு உரித்தாக வெண்டிய ஓய்வூதியம் மற்றும் விதவைகள் மற்றும்

அநாதைகள் ஓய்வூதிய நலன்கள் கிடைக்கப்பெறுவதன் காரணமாக 1993 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 03 ஆந் திகதி முதல் நிதியத்துக்கு புதிய அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளும் செயற்பாடு இடம்பெற்றிருக்கவில்லை. அவ்வாறான புதிய அங்கத்தவர்களிடமிருந்து பணம் சேகரிக்கப்படாமை மற்றும் ஏற்கனவே உள்ள அங்கத்தவர்களின் பங்களிப்பு ஓய்வூதியம் செலுத்துவதற்கு போதுமானதற்றது என்பதன் காரணமாக ஓய்வூதியத் திணைக்களத்தின் செலவுத் தலைப்பின் கீழ் வருடாந்த வரவுசெலவுத் திட்ட மதிப்பீட்டு நிதி ஒதுக்கீட்டின் மூலம் ஓய்வூதியச் செலவுகளை ஏற்கப்பட்டிருப்பதோடு நடப்பு வருடத்தில் அவ்வாறு ஏற்கப்பட்ட செலவு ரூபா. 941,275,505 ஆகக் காணப்பட்டது. இதன் காரணமாக நிதியத்தை நிறுவியதற்கான அடிப்படை நோக்கம் நிறைவேறி இருக்கவில்லை.

டப்ளியூ.பி.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

LEW/D/DOP/02/19/13

ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம்,

ஓய்வூதியத் திணைக்களம்.

**உள்ளூராட்சி சேவைகள் தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குவிதிகளின் தேவைப்பாடு தொடர்பாக 2018 ஆம் ஆண்டு இலக்கம் 19 இனையுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்க அறிக்கை.**

## 1. நிதிக் கூற்று

### 1.1 அபிப்ராயம்

உள்ளூராட்சி சேவைகள் தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியம் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு ஐந்தொகை மற்றும் அத்திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான வருமான மற்றும் செலவுக் கணக்குகள் மற்றும் அத்திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான பணப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுடன் தொடர்புடைய பதிவுகள், சாரம்சங்கள், முக்கிய கணக்கியல் கொள்கைகளையும் உள்ளடக்கியதாக 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (3) ஆம் ஏற்பாடுகளின் கீழ் இணைந்ததாக வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்கத்துடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி எனது ஆணைக்கு கட்டுப்பட்டு கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. அரசியலமைப்புச் சட்டத்தின் 154 (6) ஆம் ஏற்பாடுகளின் படி எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் முன்னளிக்கப்படும்.

எனது கருத்துப் படி, நிதியத்தின் 2018 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கான நிதி நிலைமை மற்றும் அத்திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்காக அதன் நிதியியல் செயற்பாடுகள் மற்றும் பணப் பாய்ச்சல் இலங்கை அரச துறையின் கணக்கீட்டு தர நியமங்களுக்கு அமைய உண்மையாகவும் நியாயமானதுமாக பார்வையை வழங்குகின்றது.

### 1.2 அபிப்பிராயத்துக்கான அடிப்படை

இலங்கை கணக்கீட்டு தர நியமங்களுக்கு அமைவாக (இ.க.த. நி) இக் கணக்காய்வு நடாத்தப்பட்டுள்ளது. அத்தகைய தர நியமங்களின் கீழுள்ள எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் விபரிக்கப்பட்டுள்ளன. எனது தகுதியுடைய அபிப்பிராயத்துக்கான அடிப்படையை வழங்குவதற்கு நான் பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்றுகள் போதுமானதென்றும் பொருத்தமானதென்றும் நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிநிலைக் கூற்றுகள் தொடர்பான முகாமையினதும் நிர்வாகத்துக்கு பொறுப்பானவர்களது பொறுப்புக்கள்

இந் நிதிநிலை அறிக்கைகள் இலங்கை அரச துறையின் கணக்கீட்டு தர நியமங்களுக்கு ஏற்பதயாரிக்கப்பட்டுள்ளது எனவும் உண்மையாகவும், நியாயமாகவும் முன்னளிக்கப்படுதல் மற்றும் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்பட முடியுமான போதுமானளவு பிறழ் கூற்றேதும் இல்லாத நிதிநிலை அறிக்கையை தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அவசியப்படும் உள்ளக கட்டுப்பாட்டுத் தீர்மானங்களை எடுப்பது முகாமையின் பொறுப்பாகும்.

நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிக்கும் போது, நிதியினை தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்கு முடியுமான வகையில் தீர்மானங்களை எடுப்பது முகாமையின் பொறுப்பாகும் என்பதோடு, முகாமைத்துவத்தின் நிதியத்தை செலுத்தி தீர்த்து விடக் கருதுவதாயின் அல்லது பதிலீட்டு முறைமைகள் இல்லாதிருந்தாலும் அதன் செயற்பாடுகளை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாயின் தவிர தொடர்ச்சியான இருப்புக்குரிய காரணிகளை தெளிவுபடுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களை அறிக்கையிடும் செயற்பாடு தொடர்பான பொறுப்பினை ஆளுகைக்கு பொறுப்பான தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவிற்கேற்ப, நிதியத்தின் வருடாந்த மற்றும் பருவகால நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அதன் வருமானம், செலவு , சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை பேணிவர வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்த நிதிக் கூற்றிலும்,மோசடி அல்லது தவறினாலான முக்கிய பிறழ் கூற்றேதும் இல்லையென்ற நியாயமான உறுப்படுத்தலை பெற்றுக்கொள்வதும் எனது கருத்துரையை உள்ளடக்கி கணக்காய்வாளர் அவ் அறிக்கையை சமர்ப்பிப்பதும் எனது குறிக்கோளாகும். நியாயமானஉறுதிப்படுத்தலானது உயர்மட்ட உறுதிப்படுத்தலாக இருந்தாலும் குறித்த கணக்காய்வு இலங்கை கணக்காய்வு தரநியமங்களுக்கமைவாக நடத்தப்பட்டதாக உத்தரவாதப் படுத்தப்படாது. அவ்வாறே, ஏதாவது பிறழ் கூற்றுகள் இருந்தால் அது தொடர்பாக கண்டறியப்படும். பிறழ் கூற்றுக்களில் மோசடி அல்லது தவறிலிருந்து ஏற்பட முடியுமென்பதுடன், தனிப்பட்ட ரீதியாகவோ அல்லது கூட்டாகவோ நிதிக் கூற்றுக்களின் அடிப்படையில் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தவதாயின் அவை முக்கியமானவை.

என்னால் தொழிற்துறைத் தீர்ப்பு மற்றும் தொழிற்துறை கட்டமைப்புடன் இலங்கை கணக்காய்வு தர நியமங்களுக்கு ஏற்ப கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது.மேலும்,

- மோசடி அல்லது தவறின் காரணத்தினால் நிதிக் கூற்றுக்களில் ஏற்பட முடியுமான பிறழ் கூற்றின் ஆபத்துக்களை இனங்கண்டு அவற்றை மதிப்பிட்டு, அத்தகைய ஆபத்துக்களுக்கு துலங்கல் காண்பிக்கும் விதத்தில் உசிதமான கணக்காய்வு

நடைமுறைகளை திட்டமிடுவதனால் மோசடி மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும், எனது கருத்துரைக்கு போதியளவிலானதும் பொருத்தமானதானதும் கணக்காய்வு சான்றினை பெற்றுக்கொள்கிறேன். போதுமானளவு பிறழ் கூற்றுக்களினால் ஏற்பாடும் ஆபத்துக்களை விட மோசடியினால் ஏற்படும் ஆபத்துக்கள் பாரியதாக அமைவதோடு, கூட்டு நடவடிக்கை,போலியான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்றே தவிர்த்தல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை தவிர்ந்திருத்தல் என்பன மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றன.

- கால அவகாசங்களுக்கு ஏற்ப உசிதமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவினைப் பெற்றிருந்தாலும் , உள்ளக கட்டுப்பாட்டின் பயனுறுதித் தன்மை தொடர்பான கருத்துரையினைத் தெரிவிப்பதற்கு நாடுவதில்லை.
- பிரயோகத்தில் உள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படும் தொடர்புடையதான வெளிப்படுத்தல்களின் தகுதிகள் பாராட்டத்தக்கது.
- நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலைகள் காரணமாக நிறுவனத்தின் இருப்பு தொடர்பில் போதியளவு நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பது பற்றி பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பு தொடர்பான அடிப்படை இங்கு தீர்மானிக்கப்படுகின்றது.போதியளவு நிச்சயமற்றதன்மை காணப்படுவதாக நான் முடிவு செய்திருப்பதாயின் நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது அவதானம் செலுத்தப்பட வேண்டும் என்பதோடு, அவ்வெளிப்படுத்தல்கள் போதியதற்றதாக இருப்பின் எனது கருத்தை மாற்றியமைக்க வேண்டும்.எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகளின் மீது தொடர்ச்சியான இருப்பு நிறைவடைவதற்கும் முடியும்.
- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களை முன்வைத்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மதிப்பீட்டுக்கு உட்பட்டுள்ளதோடு, அதற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் உசிதமான மற்றும் நியாயமான வகையில் நிதிக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருப்பதானது பாராட்டத்தக்கது.

எனது கணக்காய்வினுள் அடையாளங் காணப்பட்ட முக்கிய கணக்காய்வுத் தேடல்கள், முக்கிய உள்ளக கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிர்வாகிக்கப்படும் தரப்பினர்களுக்கு தெளிவுபடுத்தப்படும்.

### 2. ஏனைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் அவசியப்பாடு தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தி ன் தேவைப்பாடு தொடர்பான விசேட நிதி ஒதுக்கீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்கத்து டைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (III) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு இணங்க நிதியத்தின் நிதிக் கூற்று கடந்த வருடத்துடன் ஒத்திசைவாக உள்ளது.

- 2018 ஆம் ஆண்டு இலக்கம் 19 இனைக் கொண்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (IV)ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ளவாறு தேவைப்பாட்டுக்கு ஏற்ப கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

**செயலாற்றுகை**

1985 ஆம் ஆண்டு இலக்கம் 10 இனையுடைய உள்ளூராட்சி சேவைகள் (திருத்தப்பட்ட) சட்டத்தின் 14ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளூராட்சி சேவையின் ஓய்வூதியத்துடன் கூடிய உறுப்பினர்களின் தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத்தை செலுத்தும் நோக்குடன் இந் நிதியம் நிறுவப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் 1993 ஆம் ஆண்டின் மாகாண அரச சேவை நிறுவப்பட்டதுடன் மாகாண அரச அலுவலர்களுக்கு அரச அலுவலர்களுக்கு உரித்தாக வேண்டிய ஓய்வூதியம் மற்றும் தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நலன்கள் கிடைக்கப்பெறுவதன் காரணமாக 1993 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 03 ஆந் திகதி முதல் மீளாய்வு ஆண்டு வரை இந் நிதியத்துக்கு புதிய அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளும் செயற்பாடு இடம்பெற்றிருக்கவில்லை. அவ்வாறான புதிய அங்கத்தவர்களிடமிருந்து பணம் சேகரிக்கப்படாமையின் காரணமாக இவ் அலுவலர்களுக்கு செலுத்துவதற்கு போதுமானளவு பணம் நிதியத்தில் காணப்படாமையின் காரணமாக ஓய்வூதியத் திணைக்களத்தின் செலவுத் தலைப்பின் கீழ் வருடாந்த வரவுசெலவுத் திட்ட மதிப்பீடு நிதி ஒதுக்கீட்டின் மூலம் ஓய்வூதியச் செலவுகள் ஏற்கப்பட்டிருப்பதோடு நடப்பு வருடத்தில் அவ்வாறு ஏற்கப்பட்ட செலவு ரூபா. 67,119,987 ஆகக் காணப்பட்டது. இதன் காரணமாக நிதியத்தை நிறுவியதற்கான அடிப்படை நோக்கம் நிறைவேறி இருக்கவில்லை.

டப்ளியூ.பி.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

LEW/D/DOP/02/19/14

அந்தரங்கமானது ( வரைவு)

ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம்,

ஓய்வூதியத் திணைக்களம்.

**ஆசிரியர் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத் திட்டம்2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குவிதிகளின் தேவைப்பாடு தொடர்பாக 2018 ஆம் ஆண்டு இலக்கம் 19 இனையுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்க அறிக்கை.**

## 1. நிதிக் கூற்று

### 1.1 அபிப்ராயம்

ஆசிரியர் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியம் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு ஐந்தொகை மற்றும் அத்திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான வருமான மற்றும் செலவுக் கணக்குகள் மற்றும் அத்திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான திறைசேரியின் பிரதிச் செயலாளரின் கணக்கிணக்கக் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுடன் தொடர்புடைய பதிவுகள், சாரம்சங்கள், முக்கிய கணக்கியல் கொள்கைகளையும் உள்ளடக்கியதாக 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (3) ஆம் ஏற்பாடுகளின் கீழ் இணைந்ததாக வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்கத்துடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி எனது ஆணைக்கு கட்டுப்பட்டு கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. அரசியலமைப்புச் சட்டத்தின் 154 (6) ஆம் ஏற்பாடுகளின் படி எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் முன்னளிக்கப்படும்.

இவ் வரைவுக்குரிய அறிக்கையில் காட்டப்பட்டுள்ள அவதானங்களுக்கு நிறுவனத்தினால் கருத்துரைப்பு தெரிவிக்கப்பட்டதன் பின்னர் எனது அபிப்பிராயம் வழங்கப்படும்.

### 1.2 அபிப்பிராயத்துக்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

(i) ஆசியரியர் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத் தொகை, ஓய்வூதியத் திணைக்களத்தின் செலவுத் தலைப்பினால் செலுத்தப்பட்டுள்ளதோடு, அதன் செலவுகள் அடையாளப்படுத்தப்பட்டு நிதியத்தின் கொடுப்பனவாக கணக்கில் வைக்கப்படாததன்

காரணமாக 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு ஐந்தொகையில் திறைசேரியின் பிரதிச் செயலாளரின் நிலுவையாக ரூபா. 846,181,511 ஆன பெறுமதியுடைய தொகை சொத்தாக காட்டப்பட்டுள்ளது.

(ii) வடமேல், தெற்கு, கிழக்கு, வடமத்திய, ஊவா மற்றும் வடக்கு மாகாணங்களுக்குரிய பங்களிப்புத் தொகை நிதியத்தில் வரவு வைக்கப்படவில்லை என்பதோடு, அவை கிடைக்கப் பெற வேண்டிய பங்களிப்புத் தொகையாக அடையாளப்படுத்தப்பட்டு கணக்கு வைக்கப்படவில்லை.

**1.3 நிதிநிலைக் கூற்று தொடர்பாக முகாமையினதும் நிர்வாகத்துக்கு பொறுப்பானவர்களதும் பொறுப்புக்கள்**

இந் நிதிநிலை அறிக்கைகள் இலங்கை அரச துறையின் கணக்கீட்டு தர நியமங்களுக்கு ஏற்பதயாரிக்கப்பட்டுள்ளது எனவும் உண்மையாகவும், நியாயமாகவும் முன்னளிக்கப்படுதல் மற்றும் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்பட முடியுமான போதுமானளவு பிறழ் கூற்றேதும் இல்லாத நிதிநிலை அறிக்கையை தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அவசியப்படும் உள்ளக கட்டுப்பாட்டுத் தீர்மானங்களை எடுப்பது முகாமையின் பொறுப்பாகும்.

நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிக்கும் போது, நிதியினை தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்கு முடியுமான வகையில் தீர்மானங்களை எடுப்பது முகாமையின் பொறுப்பாகும் என்பதோடு, நிதியத்தை செலுத்தி தீர்த்து விடக் கருதுவதாயின் அல்லது பதிலீட்டு முறைமைகள் இல்லாதிருந்தாலும் அதன் செயற்பாடுகளை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாயின் தவிர தொடர்ச்சியான இருப்புக்குரிய காரணிகளை தெளிவுபடுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களை அறிக்கையிடும் செயற்பாடு தொடர்பான பொறுப்பினை ஆளுகைக்கு பொறுப்பான தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவிற்கேற்ப, நிதியத்தின் வருடாந்த மற்றும் பருவகால நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அதன் வருமானம், செலவு , சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை பேணிவருதல் வேண்டும்.

1.4 **நிதிக் கூற்றுக் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்த நிதிக் கூற்றிலும்,மோசடி அல்லது தவறினாலான முக்கிய பிறழ் கூற்றேதும் இல்லையென்ற நியாயமான உறுப்படுத்தலை பெற்றுக்கொள்வதும் எனது கருத்துரையை உள்ளடக்கி கணக்காய்வாளர் அவ் அறிக்கையை சமர்ப்பிப்பதும் எனது குறிக்கோளாகும். நியாயமானஉறுதிப்படுத்தலானது உயர்மட்ட உறுதிப்படுத்தலாக இருந்தாலும் குறித்த கணக்காய்வு இலங்கை கணக்காய்வு தரநியமங்களுக்கமைவாக நடத்தப்பட்டதாக உத்தரவாதப் படுத்தப்படாது. அவ்வாறே, ஏதாவது பிறழ் கூற்றுகள் இருந்தால் அது தொடர்பாக கண்டறியப்படும். பிறழ் கூற்றுக்களில் மோசடி அல்லது தவறிலிருந்து ஏற்பட முடியுமென்பதுடன், தனிப்பட்ட ரீதியாகவோ அல்லது கூட்டாகவோ நிதிக் கூற்றுக்களின்

அடிப்படையில் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தவதாயின் அவை முக்கியமானவை.

என்னால் தொழிற்துறைத் தீர்ப்பு மற்றும் தொழிற்துறை கட்டமைப்புடன் இலங்கை கணக்காய்வு தர நியமங்களுக்கு ஏற்ப கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது.மேலும்,

- மோசடி அல்லது தவறின் காரணத்தினால் நிதிக் கூற்றுக்களில் ஏற்பட முடியுமான பிறழ் கூற்றின் ஆபத்துக்களை இனங்கண்டு அவற்றை மதிப்பிட்டு, அத்தகைய ஆபத்துக்களுக்கு துலங்கல் காண்பிக்கும் விதத்தில் உசிதமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதனால் மோசடி மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும், எனது கருத்துரைக்கு போதியளவிலானதும் பொருத்தமானதானதும் கணக்காய்வு சான்றினை பெற்றுக்கொள்கிறேன். போதுமானளவு பிறழ் கூற்றுக்களினால் ஏற்பாடும் ஆபத்துக்களை விட மோசடியினால் ஏற்படும் ஆபத்துக்கள் பாரியதாக அமைவதோடு, கூட்டு நடவடிக்கை,போலியான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்றே தவிர்த்தல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை தவிர்ந்திருத்தல் என்பன மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றன.
- கால அவகாசங்களுக்கு ஏற்ப உசிதமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவினைப் பெற்றிருந்தாலும் , உள்ளக கட்டுப்பாட்டின் பயனுறுதித் தன்மை தொடர்பான கருத்துரையினைத் தெரிவிப்பதற்கு நாடுவதில்லை.
- பிரயோகத்தில் உள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படும் தொடர்புடையதான வெளிப்படுத்தல்களின் தகுதிகள் பாராட்டத்தக்கது.
- நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலைகள் காரணமாக நிறுவனத்தின் இருப்பு தொடர்பில் போதியளவு நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பது பற்றி பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பு தொடர்பான அடிப்படை இங்கு தீர்மானிக்கப்படுகின்றது.போதியளவு நிச்சயமற்றதன்மை காணப்படுவதாக நான் முடிவு செய்திருப்பதாயின் நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது அவதானம் செலுத்தப்பட வேண்டும் என்பதோடு, அவ்வெளிப்படுத்தல்கள் போதியதற்றதாக இருப்பின் எனது கருத்தை மாற்றியமைக்க வேண்டும்.எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகளின் மீது தொடர்ச்சியான இருப்பு நிறைவடைவதற்கும் முடியும்.
- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களை முன்வைத்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மதிப்பீட்டுக்கு உட்பட்டுள்ளதோடு, அதற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் உசிதமான மற்றும் நியாயமான வகையில் நிதிக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருப்பதானது பாராட்டத்தக்கது.

எனது கணக்காய்வினுள் அடையாளங் காணப்பட்ட முக்கிய கணக்காய்வுத் தேடல்கள், முக்கிய உள்ளக கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிர்வாகிக்கப்படும் தரப்பினர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

**2. ஏனைய சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் அவசியப்பாடு தொடர்பான அறிக்கை**

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் தேவைப்பாடு தொடர்பான விசேட நிதி ஒதுக்கீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்கத்துடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (III) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு இணங்க நிதியத்தின் நிதிக் கூற்று கடந்த வருடத்துடன் ஒத்திசைவாக உள்ளது.

- இவ் அறிக்கையின் 1.2 (அ) (ஆ) இன் பரிந்துரை தவிர்ந்த 2018 ஆம் ஆண்டு இலக்கம் 19 இனைக் கொண்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (IV) ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ளவாறு தேவைப்பாட்டுக்கு ஏற்ப கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**3.செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு இணங்காமை**

1953 ஆம் ஆண்டு மற்றும் இலக்கம் 44 இனையுடைய பாடசாலை ஆசிரியர்களின் ஓய்வூதியச் சட்டத்துக்கு ஏற்ப விதிக்கப்பட்ட கட்டளைகள் இலக்கம் 9 (அ) ஆணைக்கு ஏற்ப ஒவ்வொரு நன்கொடைத் தொகையையும் செலுத்துவது தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய ஆவணமொன்றினை பேணி இருக்காமை.

**3.2 செயலாற்றுகை**

1953 ஆம் ஆண்டு இலக்கம் 44 இனையுடைய பாடசாலை ஆசிரியர்களின் ஓய்வூதியச் சட்டத்தின் கட்டளை இலக்கம் 04 இன் பிரகாரம் ஆசிரியர் விதவைகள் மற்றும் அநாதைகள் பங்களிப்புத் தொகையின் மூலம் நிதியமொன்றினை ஆரம்பித்து அதன் மூலம் ஆசிரியர் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்தின் மூலம் ஓய்வூதியம் வழங்குதல் வேண்டும். என்றாலும் பங்களிப்புத்

தொகையை சேகரித்தல் மற்றும் செலவுகளை ஏற்பதற்காக நிதியத்துக்காக வங்கிக் கணக்கொன்றினை பேணிச் செல்லாமை என்பதோடு பங்களிப்புத் தொகை விதவைகள் மற்றும் அநாதைகள் பங்களிப்புத் தொகை வங்கிக் கணக்கிற்கு (இலக்கம் 100199026658) சேகரித்திருந்தமையும் ஓய்வூதியத் திணைக்களத்தின் செலவுத் தலைப்பின் கீழ் வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் மேற்படி செலவினை ஏற்பதற்கும் காரணமாக இந் நிதியம் உருவாக்கப்படுவதற்கான நோக்கம் நிறைவேற்றப்படவில்லை.

### 3.3 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் முகாமைத்துவக் குறைபாடுகள் அவதானத்திற்கு உற்பட்டுள்ளது.

(அ) நிதிய அங்கத்தவர்களின் எண்ணிக்கை, மீளாய்வாண்டினுள் புதிய அங்கத்துவம் பெற்றுள்ளவர்களின் எண்ணிக்கை, நிதியத்தின் அங்கத்துவத்திலிருந்து நீங்கியவர்களின் எண்ணிக்கை மற்றும் அங்கத்தவர்களின் பெயர்கள், பாடசாலையையும் உள்ளடக்கிய அட்டவணையை பேணிச் செல்லாமை காரணமாக நிதியத்துக்கு கிடைக்கப்பெற வேண்டிய தொகை, கிடைக்கப்பெற்ற தொகை மற்றும் நிலுவைத் தொகை தொடர்பான தகவல்கள் கணக்காய்வில் காண்பிப்பதற்கு முடியாமல் உள்ளது.

(ஆ) பங்களிப்புத் தொகை மீளச் செலுத்தும் போது பங்களிப்பாளரிடமிருந்து அறவிடப்பட்ட நிதித் தொகையின் அளவினை வரலாற்றுத் தாளினைப் பரீட்சித்து செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டாலும், அப் பணம் சரியாக நிதியத்துக்கு கிடைக்கப்பெற்றதா என்பது பற்றி பரீட்சிப்பதற்கான பொறிமுறையொன்று நிறுவியிருக்காமை.

### 3.4 உள்ளகக் கணக்காய்வு

நிதி ஒழுங்குவிதிகள் 133 இற்கு ஏற்ப மீளாய்வு ஆண்டின் நிதியத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக ஓய்வூதியத் திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வுப் பிரிவின் மூலம் அல்லது உள்ளக கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

LEW/D/DOP/02/19/17

ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம்,

ஓய்வூதியத் திணைக்களம்.

**அரச சேவை ஊழியர் சேமலாப நிதியத்தின் 2018 திசெம்பர் மாதம் 13 ஆந் திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குமுறை தேவைகள் தொடர்பாக 2018 இலக்கம் 19 இனைக் கொண்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் படி கணக்காய்வு தலைமை அதிபதியின் சுருக்க அறிக்கை**

## 2. நிதிக் கூற்று

### 2.1 மறுப்புக்கான அபிப்ராயம்

அரசாங்க சேவை ஊழியர் சேமலாப நிதியம் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு ஐந்தொகை மற்றும் அத்திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான வருமானக் கூற்று மற்றும் அத்திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான பணப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுடன் தொடர்புடைய பதிவுகள், சாரம்சங்கள், முக்கிய கணக்கியல் கொள்கைகளையும் உள்ளடக்கியதாக 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன்நிறைவடையும் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (3) ஆம் ஏற்பாடுகளின் கீழ் இணைந்ததாக வாசிக்கப்படவேண்டிய2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்கத்துடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி எனது ஆணைக்கு கட்டுப்பட்டு கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. அரசியலமைப்புச் சட்டத்தின் 154 (6) ஆம் ஏற்பாடுகளின் படி எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் முன்னளிக்கப்படும்.

நிதியத்தின் நிதிக் கூற்றுகள் தொடர்பாக நான் எவ்வித அபிப்ராயங்களையும் அறிவிப்பதில்லை.'அபிப்ராய மறுப்புக்கான அடிப்படை' என்ற பகுதியில் கலந்துரையாடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந் நிதிநிலைஅறிக்கைகள் தொடர்பான கணக்காய்வு அபிப்ராயத்தினை கொண்டு வழங்க முடியுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கு என்னால் முடியவில்லை.

### 2.2 அபிப்பிராய மறுப்புக்கான அடிப்படை

(அ) இலங்கை அரச துறை கணக்கீட்டு தர நியம இலக்கம் 01 இற்கு ஏற்புடையதாக காணப்படாமை.

தர நியமங்களுக்கு ஏற்ப வருமான மற்றும் செலவுகள் திரட்டப்பட்டதற்கு அடிப்படைக்கு ஏற்ப கணக்குப் பதிவு செய்தல் வேண்டும் என்பதாலும், அதற்கு முரணாக நிதிநிலை அறிக்கைகளுக்கு கணக்கீட்டு கொள்கைகளின் மூலம் நிதியத்துக்கு கிடைக்கப்பெறும் நிதி, நிதியை அடிப்படையாகக் கொண்டு கணக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**(ஆ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

முதலீட்டு வருமானம் ரூபா. 642,000,000 இற்காக 2018 ஆம் ஆண்டுப் பகுதிக்கு உரித்தான வட்டி வருமானம் ரூபா. 1,772,975 ஆன தொகையால் குறைந்து மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட வரி ரூபா. 2,079,025 ஆன தொகையால் அதிகரித்துக் காட்டுவதன் காரணமாக, மீளாய்வாண்டின் முடிவடைந்த திகதிக்கு கிடைக்கப்பெற வேண்டிய நிலையான வைப்புக்கான வட்டி வருமானம் ரூபா. 3,852,000 ஆன தொகையால் குறைவடைந்த நிதிநிலை அறிக்கையால் காட்டப்பட்டுள்ளது.

**(இ) கணக்காய்விற்கான சான்றுகள் காணப்படாமை**

நிதியத்துக்கு பங்களிப்புச் செய்துள்ள பங்களிப்பாளர்களின் தனிப்பட்ட கணக்குகள் முறையாக பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதனால், மீளாய்வாண்டின் இறுதித் திகதிக்கு கட்டாய பங்களிப்புத் தொகை கணக்கின் நிலுவை ரூபா. 24,307,762,204 உம், தன்னார்வ பங்களிப்புத் தொகை கணக்கின் நிலுவை ரூபா. 37,786,900 உம் மற்றும் அரசின் பங்களிப்புத் தொகை கணக்கு நிலுவை ரூபா. 37,726,385,705 ஆன தொகையும் கணக்காய்வின் போது திருப்திகரமானதாக மட்டத்துடைய அவதானிப்பினை மேற்கொள்ள முடியாமற் போனது.

**(ஈ) விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

2006 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரையான மாதாந்த கணக்குப் பொழிவின் மூலம் பல்வேறு அரச நிறுவனங்களினால் நிதியத்தில் மேற்கொள்ளப்படும் வரவு மற்றும் பற்றுக்களுக்கு உரித்தானதும் அடையாளப்படுத்தப்படாத்துமான நிலுவைகளை தீர்க்கப்படும் வரை சரிசெய்யும் கணக்கில் சரிசெய்யப்படும். அக் கணக்கினல் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு வரவின் நிலுவை நிதிநிலை அறிக்கைக்கு ஏற்ப ரூபா. 29,448,892 ஆக இருந்தாலும், அதற்குரிய அட்டவணைக்கு ஏற்ப நிலுவைத் தொகை ரூபா. 24,158,246 ஆக இருந்ததால் ரூபா. 5,290,646 ஆக வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டுள்ளது.

## 2.3 நிதிநிலைக் கூற்றுகள் தொடர்பான முகாமையினதும் நிர்வாகத்துக்கு பொறுப்பானவர்களது பொறுப்புக்கள்

இந் நிதிநிலை அறிக்கைகள் இலங்கை அரச துறையின் கணக்கீட்டு தர நியமங்களுக்கு ஏற்பதயாரிக்கப்பட்டுள்ளது எனவும் உண்மையாகவும், நியாயமாகவும் முன்னளிக்கப்படுதல் மற்றும் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்பட முடியுமான போதுமானளவு பிறழ் கூற்றேதும் இல்லாத நிதிநிலை அறிக்கையை தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அவசியப்படும் உள்ளக கட்டுப்பாட்டுத் தீர்மானங்களை எடுப்பது முகாமையின் பொறுப்பாகும்.

நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிக்கும் போது, நிதியினை தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்கு முடியுமான வகையில் தீர்மானங்களை எடுப்பது முகாமையின் பொறுப்பாகும் என்பதோடு, முகாமைத்துவத்தின் நிதியத்தை செலுத்தி தீர்த்து விடுவதற்கு கருதுவதாயின் அல்லது பதிலீட்டு முறைமைகள் இல்லாதிருந்தாலும் அதன் செயற்பாடுகளை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாயின் தவிர தொடர்ச்சியான இருப்புக்குரிய காரணிகளை தெ ளிவுபடுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களை அறிக்கையிடல் செயற்பாடு தொடர்பான பொறுப்பினை ஆளுகைக்கு பொறுப்பான தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவிற்கேற்ப, நிதியத்தின் வருடாந்த மற்றும் பருவகால நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அதன் வருமானம், செலவு , சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை பேணிவர வேண்டும்.

## 2.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

இலங்கை கணக்காய்வு தர நியமங்களுக்கு ஏற்ப நடாத்தப்படும் கணக்காய்வினை மையமாகக் கொண்டு நிதியத்தின் நிதிநிலைக் அறிக்கைகளை தயார்படுத்துவது தொடர்பாக கணக்காய்வாளரின் அறிக்கையை வெ ளியிடுதல் எனது பொறுப்பாகும்.எவ்வாறாயினும், மறுப்புக்கான அபிப்ராயம் எனும் பகுதியில் தெ ளிவுபடுத்தப்பட்டுள்ள விடயங்கள் காரணமாக இந் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு

அபிப்ராயங்களை அடிப்படையாகக் கொண்டு வழங்குவதற்கு போதுமானளவு மற்றும் தகுந்த கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கு என்னால் முடியாமல் போனது.

**3. ஏனைய சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின அவசியப்பாடு தொடர்பான அறிக்கை**

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தி ன் தேவைப்பாடு தொடர்பான விசேட நிதி ஒதுக்கீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்கத்து டைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (III) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு இணங்க நிதியத்தின் நிதிக் கூற்று கடந்த வருடத்துடன் ஒத்திசைவாக உள்ளது.
- 2018 ஆம் ஆண்டு இலக்கம் 19 இனைக் கொண்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (IV)ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ளவாறு தேவைப்பாட்டுக்கு ஏற்ப இவ் அறிக்கையின் 1.2 (அ), (இ), (ஈ) போன்ற பந்திகளில் காட்டப்பட்டுள்ள அவதானங்கள் தவிர்ந்த கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**4. செயற்பாடுகள் குறித்த மதிப்பாய்வு**

**4.1 கிடைக்கப்பெற வேண்டிய கணக்குகள்**

2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிய அட்டவணைக்கு ஏற்ப சீராக்கற் கணக்கின் நிலுவையாக ரூபா. 19,854,328 ஆன தொகை ஒரு வருடம் முதல் மூன்று வருடங்கள் வரை ரூபா. 3,187,045 ஆன தொகையும் நான்கு வருடங்கள் முதல் ஆறு வருடங்கள் வரை ரூபா. 874,093 ஆன தொகையும் ஏழு வருடங்கள் முதல் பத்து வருடங்கள் வரை மற்றும் ரூபா. 125,362 ஆன தொகையும் பதினொரு வருடங்களை விட பழமையான நிலுவையாக காணப்படும்.

**சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு ஏற்புடையதற்றதாக இருத்தல்.**

பின்வரும் சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு ஏற்புடையதற்றதாக இருக்கின்றது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டுள்ளது.

| சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிக் குறிப்பு | ஏற்புடையதற்றது |
|---|---|
| (அ) 1942 அரசாங்க சேவை ஊழியர் சேமலாப நிதியக் கட்டளைச் சட்டத்தின் (621 அதிகாரம்)<br><br>(I) 16 (1 ஆ) மற்றும் 20 (ஆ) பிரிவு | திறமையின்மை, தவறான நடத்தை காரணமாக பங்களிப்பாளர் சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்படுமிடத்து அல்லது நிதியத்தின் பங்களிப்பாளர் அரச சேவையில் ஓய்வூதியம் உரித்துடைய பதவியொன்றுக்கு நியமிக்கப்படுமிடத்து அவ் அலுவலருக்காக அரசின் பங்களிப்பு மற்றும் வட்டி திரட்டு நிதியத்துக்கு மீளச்செலுத்தப்படுதல் வேண்டும் என்பதோடு 2018 ஆம் ஆண்டுக்குரிய ரூபா. 313,813,696 இனை செலுத்தாது பங்களிப்புத் தொகை மற்றும் வட்டியை மீளச்செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (III) 25 ஆம் பிரிவு | ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தினால் திசெம்பர் 31 ஆம் தேதி வரை உறுப்பினர்களின் கணக்குகளின் நிலுவைகளை பங்காளர்களுக்கு தெரிவிக்க வேண்டும் என்றாலும், அத்தகைய நடைமுறை பின்பற்றப்படவில்லை. |
| (ஆ) 2015 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 23 ஆந் திகதிய மற்றும் 07/2015 இலக்கத்துடைய ஓய்வூதியச் சுற்றறிக்கையின் 08 ஆம் பிரிவு | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு ஏற்ப மாதாந்த கணக்குப் பொழிப்பின் மூலம் பங்களிப்புத் தொகையை வரவு வைக்கக்கூடாது என்றாலும், 2018 ஆம் ஆண்டினுள் 13 நிறுவனங்களில் இருந்து பங்களிப்புத் தொகையாக ரூபா.50,353,743 மாதாந்த கணக்கு பொழிப்பின் மூலம் வரவு வைக்கப்பட்டுள்ளது. |

### 3.3. முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(i) அரசாங்க சேவை ஊழியர் சேமலாப நிதியத்தின் பங்களிப்பாக நிறுவனங்களிலிருந்து அனுப்பப்படும் காசோலைகள் ஓய்வூதியத் திணைக்களத்தின் அஞ்சல் பிரிவினால் அரசாங்க சேவை ஊழியர் சேமலாப நிதியப் பிரிவுக்கு வழங்குவதற்கு 01 மாதத்திலிருந்து 14 மாதங்கள் வரை கால தாமதங்கள் அவ்வதானிக்கப்பட்டுள்ளது.

(ii) அரசுக்கு கிடைக்கப்பெறும் வருமானத்தை முடியுமான அளவு விரைவாக காசாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் என்றாலும் அரசின் ஊழியர் சேமலாப நிதியத்துக்கு கிடைக்கப்பெறும் காசோலைகள் 8 நாட்கள் முதல் 1 ½ மாதங்கள் வரை தாமதமாக வங்கிக் கணக்கில் இடப்பட்டுள்ளது.

(iii) 2018 செப்டம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்ட மாதிரிச் சோதனையின் படி 2018 சனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதுடன், ஆனால் பங்களிப்புத் தொகையை வரவழைத்திருக்காத பெறுமதி ரூபா. 1,989,639 ஆன 43 காசோலைகள் இருப்பதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

### 3.2. செயலாற்றுகை

ஓய்வூதியம் பெறாத அரசின் ஒருசில ஊழியர்களுக்குரிய நலன்களை வழங்குகின்ற அடிப்படை நோக்கத்துடன் அரச சேவை ஊழியர்களுக்கு சேமலாப நிதியம் உருவாக்கப்பட்டுள்ளது. 2018 சனவரி மாதம் 01 ஆந் திகதிக்கு செலுத்தப்படாத 954 விண்ணப்பங்கள் காணப்பட்டதோடு, வருடத்தினுள் நிதியத்தின் உறுப்பினர்களால் நலன்களைப்பெற்றுக்கொள்வாற்காக சமர்ப்பித்துள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை 3555 ஆகும். அவற்றுக்கிடையில் மீளாய்வாண்டில் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியாகும் போது 3917 விண்ணப்பங்களுக்காக ரூபா. 354,979,757 ஆன தொகை செலுத்தப்பட்டுள்ளதுடன் 592 விண்ணப்பங்களுக்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

டப்ளியூ.பி.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

LED/D/DOP/02/19/25

கணக்களிக்கும் அலுவலர்

ஓய்வூதியத் திணைக்களம்

**ஓய்வூதியத் திணைக்களத்தின் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான நிதிக் கூற்று தொடர்பான 2018 ஆம் ஆண்டு இலக்கம் 19 இனைக் கொண்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்க அறிக்கை**

## 1. நிதிக் கூற்று

### 1.1 தகுதியுடைய அபிப்பிராயம்

ஓய்வூதியத் திணைக்களத்தின் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலைக் கூற்று, அத்திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகை அறிக்கை மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றுக்களைக் கொண்டமைந்ததாக 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான நிதிக் கூற்று 2018 ஆம் ஆண்டு மற்றும் 19 ஆம் இலக்கத்துடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) ஆம் பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் படி எனது ஆணைக்குக் கட்டுப்பட்டு கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டு இலக்கம் 19 இனையுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் ஓய்வூதியத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் முன்வைக்கப்பட்ட இந் நிதிக் கூற்று தொடர்பாக எனது கருத்துரையை வழங்குதல் மற்றும் அவதானிப்புக்களை வழங்கியமை தொடர்பாக இவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் படி கணக்களிக்கும் அலுவலருக்கு வருடாந்த விளக்க முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூன் மாதம் 20 ஆந் திகதியன்று வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு 154 (6) ஆம் ஏற்பாட்டுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவிற்கு ஏற்ப முன்னளிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் முன்னளிக்கப்படும்.

இவ் அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் ஆபத்து தவிர, நிதிக் கூற்றுக்களினால் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு ஏற்ப உண்மையானதெனவும் நியாயமானதெனவும் எடுத்துக் காட்டுவதாக நான் கொண்டுள்ள அபிப்பிராயமாகும்.

**1.2 தகுதியுடைய அபிப்பிராயத்துக்கான அடிப்படை**

இலங்கை கணக்கீட்டு தர நியமங்களுக்கு அமைவாக (இ.க.த. நி) இக் கணக்காய்வு நடாத்தப்பட்டுள்ளது. அத்தகைய தர நியமங்களின் கீழுள்ள எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் விபரிக்கப்பட்டுள்ளன. எனது தகுதியுடைய அபிப்பிராயத்துக்கான அடிப்படையை வழங்குவதற்கு நான் பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்றுகள் போதுமானதென்றும் பொருத்தமானதென்றும் நான் நம்புகிறேன்.

**1.3 நிதிநிலை அறிக்கைகள் தொடர்பாக கணக்களிக்கும் அலுவலரின் பொறுப்புக்கள்**

பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளுக்கு ஏற்ப மற்றும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்கத்துடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையொன்றினை எடுத்துக் காட்டும் வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடி மற்றும் தவறுகள் காரணமாக நிகழ முடியுமான பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அவசியப்படும் உள்ளக கட்டுப்பாட்டுத் தீர்மானங்களை எடுப்பது கணக்களிக்கும் அலுவலரின் பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டு மற்றும் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் படி திணைக்களத்தினால் வருடாந்தம் மற்றும் காலத்துக்கேற்ப நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு முடியுமான வகையில் வருமானம், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 (1) (இ) உப பிரவின் படி திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக பயனுறுதி வாய்ந்த உள்ளகக் கட்டுப்பாட்டு தொகுதியொன்றினை உருவாக்கி பேணிச் செல்லப்படுவதாக கணக்களிக்கும் அலுவலர் உறுதிப்படுத்துதல் வேண்டும் என்பதோடு அவ் தொகுதியின் பயனுறுதித்தன்மை தொடர்பாக காலத்துக்குக் காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கிணங்க தொகுதியை பயனுறுதி மிக்கதாக நடாத்திச் செல்வதற்கு அவசியப்படும் மாற்றங்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.

**1.4 நிதிக் கூற்றுக் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்த நிதிக் கூற்றிலும்,மோசடி அல்லது தவறினாலான முக்கிய பிறழ் கூற்றேதும் இல்லையென்ற நியாயமான உறுப்படுத்தலை பெற்றுக்கொள்வதும் எனது கருத்துரையை உள்ளடக்கி கணக்காய்வாளர் அவ் அறிக்கையை சமர்ப்பிப்பதும் எனது குறிக்கோளாகும். நியாயமானஉறுதிப்படுத்தலானது உயர்மட்ட உறுதிப்படுத்தலாக இருந்தாலும் குறித்த கணக்காய்வு இலங்கை கணக்காய்வு தரநியமங்களுக்கமைவாக நடத்தப்பட்டதாக உத்தரவாதப் படுத்தப்படாது. அவ்வாறே, ஏதாவது பிறழ் கூற்றுகள் இருந்தால் அது தொடர்பாக கண்டறியப்படும். பிறழ் கூற்றுக்களில் மோசடி அல்லது தவறிலிருந்து ஏற்பட முடியுமென்பதுடன், தனிப்பட்ட ரீதியாகவோ அல்லது கூட்டாகவோ நிதிக் கூற்றுக்களின்

அடிப்படையில் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தவதாயின் அவை முக்கியமானவை.

என்னால் தொழிற்துறைத் தீர்ப்பு மற்றும் தொழிற்துறை கட்டமைப்புடன் இலங்கை கணக்காய்வு தர நியமங்களுக்கு ஏற்ப கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது.மேலும்,

- மோசடி அல்லது தவறின் காரணத்தினால் நிதிக் கூற்றுக்களில் ஏற்பட முடியுமான பிறழ் கூற்றின் ஆபத்துக்களை இனங்கண்டு அவற்றை மதிப்பிட்டு, அத்தகைய ஆபத்துக்களுக்கு துலங்கல் காண்பிக்கும் விதத்தில் உசிதமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதனால் மோசடி மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும், எனது கருத்துரைக்கு போதியளவிலானதும் பொருத்தமானதானதும் கணக்காய்வு சான்றினை பெற்றுக்கொள்கிறேன். போதுமானளவு பிறழ் கூற்றுக்களினால் ஏற்பாடும் ஆபத்துக்களை விட மோசடியினால் ஏற்படும் ஆபத்துக்கள் பாரியதாக அமைவதோடு, கூட்டு நடவடிக்கை,போலியான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்றே தவிர்த்தல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை தவிர்ந்திருத்தல் என்பன மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றன.
- கால அவகாசங்களுக்கு ஏற்ப உசிதமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவினைப் பெற்றிருந்தாலும் , உள்ளக கட்டுப்பாட்டின் பயனுறுதித் தன்மை தொடர்பான கருத்துரையினைத் தெரிவிப்பதற்கு நாடுவதில்லை.
- பிரயோகத்தில் உள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படும் தொடர்புடையதான வெளிப்படுத்தல்களின் தகுதிகள் பாராட்டத்தக்கது.
- நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலைகள் காரணமாக நிறுவனத்தின் இருப்பு தொடர்பில் போதியளவு நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பது பற்றி பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பு தொடர்பான அடிப்படை இங்கு தீர்மானிக்கப்படுகின்றது.போதியளவு நிச்சயமற்றதன்மை காணப்படுவதாக நான் முடிவு செய்திருப்பதாயின் நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது அவதானம் செலுத்தப்பட வேண்டும் என்பதோடு, அவ்வெளிப்படுத்தல்கள் போதியதற்றதாக இருப்பின் எனது கருத்தை மாற்றியமைக்க வேண்டும்.எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகளின் மீது தொடர்ச்சியான இருப்பு நிறைவடைவதற்கும் முடியும்.
- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களை முன்வைத்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மதிப்பீட்டுக்கு உட்பட்டுள்ளதோடு, அதற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் உசிதமான மற்றும் நியாயமான வகையில் நிதிக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருப்பதானது பாராட்டத்தக்கது.

எனது கணக்காய்வினுள் அடையாளங் காணப்பட்ட முக்கிய கணக்காய்வுத் தேடல்கள், முக்கிய உள்ளக கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிர்வாகிக்கப்படும் தரப்பினர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 ( ஈ) பிரிவின் படி பின்வரும் விடயங்களை நான் கருத்துரைக்கின்றேன்.

(அ) ஓய்வூதியத் திணைக்களத்தினால் கடந்த வருடத்துக்கு உரித்தான நிதிக் கூற்றினை தயாரிக்கும் தேவைப்பாடு காணப்படவில்லை என்பதோடு மீளாய்வு ஆண்டின் நிதிக் கூற்று கடந்த வருடத்துடன் ஒத்திசைவாக உள்ளது என கருத்துரைக்க முடியாதுள்ளது.

(ஆ) ஓய்வூதியத் திணைக்களத்தினால் கடந்த வருடத்துக்கு உரித்தான நிதிக் கூற்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை என்பதோடு, நிதிக் கூற்று தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டும் இருக்க வில்லை.

**1.6 நிதிக் கூற்று தொடர்பான கருத்துத் தெரிவித்தல்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

கீழே குறிப்பிட்டுள்ள போதுமானளவு கணக்கீட்டுக் குறைபாடுகள் அறியப்பட்டுள்ளன.

(அ) 2018 ஆம் ஆண்டிற்கான வருமானத் தலைப்பு 20.004.01.00 இன் கீழ் திணைக்களத்தினால் திரட்டப்பட்ட வருமானத்தில் திறைசேரியின் அச்சிடப்பட்ட மற்றும் நிதிக் கூற்றுக்கு ஏற்ப ரூபா. 870,380 ஆன தொகையால் வேறுபாடுள்ளது என அவதானிக்கப்பட்டுள்ளது.

**(ஆ) மீண்டுவரும் செலவீனம்**

நிதி ஒழுங்குவிதி 208 இன் பிரகாரம் வேறு திணைக்களங்களினால் ஏற்கப்பட்டுள்ள செலவுகள்ஈ மாதாந்த கணக்குப் பொழிப்பு மற்றும் திறைசேரியின் கணனி அச்சிடலுக்கிடையில் வேறுபாடுகள் காணப்படுவதோடு அதற்கிணங்க அவ்வேறுபாடு ரூபா. 34,533,542 ஆன் தொகையாகும், ஆனால் நிதிக் கூற்றுக்களில் முற்பணம் சரி செய்யப்பட்ட கணக்கில் அத் தொகை ரூபா. 33,407,328,729 ஆகக் காட்டப்பட்டமையால் ரூபா. 1,126,585,813 ஆன தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

**1.6.2 சொத்து, பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

சொத்து, பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் நிதியியல் சாராத சொத்து தொடர்பான கூற்றுக்கு ஏற்ப ஆரம்ப நிலுவை ரூபா. 1,985,439,603 ஆன

தொகையும் கொள்வனவு செய்தல் ரூபா. 33,762,583 ஆன தொகையாகவும் இறுதி நிலுவை ரூபா. 2,009,824,699 ஆன தொகையாகவும் நிலையான சொத்துப் பதிவேட்டுக்கு இணங்க அவற்றை ஒழுங்குமுறையாக ரூபா. 1,986,066,147 ஆகவும், ரூபா. 33,630,783 ஆகவும் மற்றும் ரூபா. 2,010,319,443 ஆன தொகையாக மாறியதால் நிதிக் கூற்றுக்களின் இறுதி நிலுவையாக ரூபா. 494,744 ஆன தொகையால் குறைத்து கணக்கு பதியப்பட்டுள்ளது.

## 2 – நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

**(அ) வருமானக் குறியீட்டு எண் 20:04:01:00 ( மத்திய அரசு)**

மீளாய்வு வருடத்தினுள் வருமானத்திலிருந்து மீள செலுத்தப்பட்ட ரூபா. 588,412 ஆன தொகையாக உறுதிப்படுத்திக் கொள்வதற்காக 2001 ஆம் ஆண்டு சனவரி மாதம் 15 ஆந் திகதிய இலக்கம் 1/2001 இனையுடைய ஓய்வூதியச் சுற்றறிக்கையின் பிரகாரம் குறித்த நிறுவனங்களில் இருந்து பற்றுக்குரிய அறிவித்தல் பெற்றுக்கொண்டிருக்கவில்லை.

**(ஆ) வருமானக் குறியீட்டு எண் 20:04:01:00 – சமூகப் பாதுகாப்பு பங்களிப்புத் தொகை – (மாகாண சபை)**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

i. தலைப்பிற்கேற்ப வருமான குறியீட்டில் வரவு வைக்கப்பட்டுள்ள பங்களிப்புத் தொகை மற்றும் நிலுவைத் தொகை பங்களிப்புக்களுக்கு ஏற்ப உண்மையாக அடையாளங் கண்டுகொள்ள முடியுமான வகையில் தகுந்த தரவுத் தளத்துடன் கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டு முறையொன்று நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கவில்லை. அதற்கமைய மீளாய்வு ஆண்டினுள் இத் தலைப்பில் சேர்க்கப்பட்ட ரூபா. 8,683 மில்லியன் தொகையான வருமான ஆண்டிற்காக வருமானம் பெறுதல், நிலுவை வருமானம் பெறுதல் என்றவாறு ஒதுக்கி இனங்காண்பதற்கும் பங்களிப்பாளருக்கு ஏற்ப ஒதுக்கிக் கொள்வதற்கும் முடியாமல் காணப்பட்டது.

ii. 2001 ஆம் ஆண்டு சனவரி மாதம் 15 ஆந் திகதிய மற்றும் இலக்கம் 1/2001 இனைக் கொண்ட ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கை 2.1 ஆம் பிரிவின் படி விதவைகள் மற்றும் அநாதைகள் பங்களிப்புத் தொகையாக அறவிடப்படும் காசோலை நிறுவன ரீதியாக அனுப்பப்படுமாயின் அடுத்துவரும் மாத்தின் 05 ஆந் திகதிக்கு முன்னர் வரவழைத்துக் கொள்ளப்பட வேண்டும் என்றாலும் 70 நாட்கள் தொடக்கம் 184 நாட்கள் வரையான தாமதங்கள் காணப்படுவதோடு சுற்றறிக்கையின் 2.2 ஆம் பிரிவின் படி மாகாண சபையின் மூலம் சகல அலுவலகங்களிலும் பங்களிப்புத் தொகைக்குப் பதிலாக

காசோலையொன்றினை வழங்கப்படுமாயின் ஒவ்வொரு மாதத்திற்கான அறவீடும் அடுத்த மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் 10 நாட்கள் முதல் 54 நாட்கள் வரையிலான தாமதம் காணப்பட்டது.

iii. நேரடியாக காசோலையின் மூலம் பங்களிப்புத் தொகையை அனுப்பும் 03 நிறுவனங்கள் ரூபா. 573,809 ஆன தொகையுடைய 06 காசோலைகள் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் 2018 பெப்ரவரி மாதம் 20 ஆந் திகதி முதல் 2018 ஏப்ரல் மாதம் 26 ஆந் திகதி வரை மீள திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. என்றாலும் 2019 மே மாதம் 06 ஆந் திகதியாகும் போது ஒரு வருடத்துக்கு அதிகமான காலம் கடந்துள்ளதால் அப் பங்களிப்புத் தொகை மீள அறவிடப் பட்டிருக்கவில்லை.

## 2.2 செலவு முகாமைத்துவம்

அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

(அ) மீண்டுவரும் செலவுத் தலைப்புக்கள் 04 இற்கு மற்றும் மூலதன செலவுத் தலைப்புக்கள் 02 இற்கும் உரித்தான ஒழுங்குமுறையில் மொத்த தேறிய நிதி ஒதுக்கீடு ரூபா. 1,202,130,000 ஆன தொகை மற்றும் ரூபா. 1,215,000 ஆன தொகையாக காணப்படுவதுடன், அச் செலவுத் தலைப்புக்களுக்கு உரித்தான மொத்தச் செலவு ஒழுங்குமுறையில் ரூபா. 156,994,573 ஆன தொகை மற்றும் ரூபா. 885,996 ஆன தொகையாகவும் காணப்பட்டது. அதற்கிணங்க செலவுத் தலைப்புக்களுக்கு உரித்தான சேமிப்புக்கள் ஒழுங்குமுறைப்படி ரூபா. 1,045,135,427 ஆன தொகை மற்றுமு ரூபா.329,004 ஆன தொகையாகும். இதில் செலவுத் தலைப்பு ஒன்றின் மீதி நூற்றுக்கு 100 ஆக காணப்படுவதோடு, எஞ்சிய செலவுத் தலைப்பு 05 இன் மீதி தேறிய நிதி ஒதுக்கீட்டில் நூற்றுக்கு 17.5 இலிருந்து நூற்றுக்கு 28.5 வீதம் வரையான இடைவெளியைக் கொண்டுள்ளது.

(ஆ) மீளாய்வு வருடத்தில் செலவுத் தலைப்பு 06 இற்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூபா. 138,117,277,300 ஆன நிதி ஒதுக்கீடுகளுக்கு மேலதிகமாக நிதி ஒழுங்குவிதி 66 மற்றும் 69 இன் கீழ் தேறிய மாறுதல்கள் ரூபா. 374,738,000 ஆன தொகையால் குறைவடைந்து பின்னர் ரூபா. 1,299,195,160 ஆன தொகை எஞ்சிக் காணப்பட்டது.

## 2.3 கணக்களிக்கும் அலுவலரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுப்படுத்தல்கள்

2018 ஆம் ஆண்டு இலக்கம் 19 இணைக் கொண்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் படி கணக்களிக்கும் அலுவலரினால் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் சான்றுப்படுத்தல்களை மேற்கொள்ளல் வேண்டுமாக இருந்தாலும், அதற்கமைய நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கவில்லை.

(அ) திணைக்களம் நிதிக் கட்டுப்பாட்டிற்காக பயனுறுதி மிக்க உள்ளகக் கட்டுப்பாட்டு தொகுதியொன்றினை உருவாக்கி பேணிச் செல்லப்படுவதாக கணக்களிக்கும் அலுவலரினால் சான்றுப்படுத்துதல் வேண்டும் என்பதோடு அத் தொகுதியின் பயனுறுதித் தன்மை தொடர்பாக காலத்துக்குக் காலம் மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய தொகுதியை பயனுறுதி மிக்கதாக பேணிச் செல்வதற்கு அவசியப்படும் மாற்றங்களை மேற்கொள்ளப்படுதல் வேண்டும் எனவும், அம் மீளாய்வுகள் எழுத்துருவில் அமையப்பெற்று அதன் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பித்தல் வேண்டும். என்றாலும், அவ்வாறான மீளாய்வுகள் இடம்பெற்றதான கூற்றுக்கள் கணக்காய்வில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருடாந்த மற்றும் ஏனைய நிதிக் கூற்றுக்கள் அவசியப்படும் காலத்தினுள் தயாரிக்கப்படுவதாக கணக்களிக்கும் அலுவலரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும் என்பதோடு, அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படும் சொத்துக்களுக்கு உரித்தான வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்தில் முன்னளிப்பதற்காக பிரதான காணக்களிக்கும் அலுவலர் பொறுப்புக் கூற வேண்டும் என்றாலும், அறிக்கையின் 3.1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு அவதானங்கள் காரணமாக அத் தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) கணக்காய்வு தலைமை அதிபதிக்கு அவசியப்படும் வகையில் குறித்த காலப்பகுதியினுள் சகல கணக்காய்வு வினவல்களுக்கும் பதிலளிக்க வேண்டும் என பிரதான கணக்களிக்கும் அலுவலர் மற்றும் கணக்களிக்கும் அலுவலரினால் சான்றுப்படுத்துதல் வேண்டும் என்பதோடு, 2018 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு வினவல்கள் 12 இற்கான பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்காமை**

**அவதானங்கள்**

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் குறிப்பு** | **பெறுமதி ரூபா.** | **இணங்காமை** |
|---|---|---|
| (i) நிதி ஒழுங்கு விதிகள் 170 (2) (அ) (ஆ) (இ) (ஈ) (உ) | 5,991,000 | 2018 ஓய்வூதியத் தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட விழாவிற்காக 15 நிறுவனங்களிலிருந்து திணைக்களத்துக்கு கிடைக்கப்பெற்ற தனிப்பட்ட நிதித் தொகை ரூபா. 5,991,000 யை 2019 யூலை மாதம் 08 ஆந் திகதி வரை யிலும் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்படாமை |
| (ii) ஓய்வூதியச் சுற்றறிக்கை 2014 ஏப்ரல் மாதம் 07 | | ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் மாதாந்தம் ஓய்வூதியம் வழங்கும் செயற்பாட்டினை முறைமைப் |

| | | |
|---|---|---|
| ஆந் திகதிய மற்றும் இலக்கம் 01/2011 ( திருத்தப்பட்ட) இனையுடைய ஓய்வூதியச் சுற்றறிக்கை | | படுத்துவதற்காக முறைசார் கட்டுப்பாட்டு கணக்கொன்றினை பேணுவது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. அது தொடர்பான பரீட்சிப்பின் போது நீர்கொழும்பு, மீரிகம, கம்பஹ, வரகாபொலை மற்றும் வத்தளை போன்ற பிரதேச செயலகங்களினால் அத் தேவைப்பாட்டினை நிறைவு செய்திருக்காமை. |
| (iii) 2013 திசெம்பர் மாதம் 03 ஆந் திகதிய இலக்கம் 06/2013 இனைக் கொண்ட ஓய்வூதியச் சுற்றறிக்கை மற்றும் 2011 யூன் மாதம் 14 ஆந் திகதிய ஓய்வூதியச் சுற்றறிக்கை கடித இலக்கம் 02. | | செலுத்தப்படாத ஓய்வூதியம் உரிய மாதத்தின் பின்னரான மாதத்தில் ஓய்வூதியத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும் ஆனால் அவ்வாறு செய்யாமல் அலவ்வ, மீரிகம, கம்பஹ மற்றும் வரகாபொலை போன்ற பிரதேச செயலகங்கள் 04 இனதும் கூட்டுத் தொகையின் பெறுமதி ரூபா. 4,567,674 ஆகும். அது பொது வைப்புக் கணக்கில் 02 மாதங்கள் தொடக்கம் 12 மாதங்கள் வரையான காலம் நிறுத்தி வைக்கப்பட்டு பின்னர் அனுப்பி வைக்கப்பட்டதாக தொடர்புடைய பரீட்சிப்பின் போது வெளிப்பட்டது. |
| (iv) 2009 யூன் மாதம் 08 ஆந் திகதிய மற்றும் இலக்கம் 11/2009 இனையுடைய ஓய்வூதியச் சுற்றறிக்கை | | முன்னளிக்கும் போது வாழ்வாதாரச் சான்றிதழை கிராம உத்தியோகத்தரினால் கையொப்பமிட்டு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்றாலும் மீளாய்வாண்டினுள் வத்தளை பிரதேச செயலகத்தின் ஓய்வூதியர்களின் கையொப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட வாழ்வாதாரச் சான்றிதழின் அடிப்படையில் செலுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் 11 காணப்படுகின்றன. |
| (v) 2009 சனவரி மாதம் 07 ஆந் திகதிய மற்றும் ஓய்வூதிய இலக்கம் 01/2009 இன் | | அங்கவீனமுற்ற பிள்ளைகளுக்கு ஓய்வூதியம் வழங்கும் நடவடிக்கையின் மேற்பார்வை முழுமையாக கிராம உத்தியோகத்தர்களுக்கு |

| | | |
|---|---|---|
| சுற்றறிக்கையின் 08 ஆம் பந்தி | | வழங்கப்பட்டுள்ளது. உரிய பாதுகாப்பு வழங்கப்படுவதாக கிராம உத்தியோகத்தர் பொறுப்பாக இருத்தல் வேண்டும் என்பதோடு, மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அறிக்கையொன்று கோப்பினுள் சேர்க்கப்படுதல் வேண்டும் என்றாலும் தொடரான பரீட்சிப்பின் போது கம்பஹ, நீர்கொழும்பு பிரதேச செயலகங்களுக்கு உரித்தான அத் தேவைப்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. |
| (vi) 2016 ஏப்ரல் மாதம் 27 ஆந் திகதிய ஓய்வூதியச் சுற்றறிக்கை இலக்கம் 03/2016 மற்றும் 2015 பெப்ரவரி மாதம் 11 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 05/2015 | | ரூபா. 3,500 இனை மாதாந்த இடைக்கால கொடுப்பனவு 2016 சனவரி மாதம் 01 திகதியின் பின்னர் ஓய்வு பெற்ற ஓய்வூதியர்களுக்கு உரித்துடையதற்ற என்றாலும் அதற்கு முரணாக வரகாபொலை பிரதேச செயலகத்தின் ஓய்வூதிய அலுவலர்கள் 03 பேருக்கு மேற்படி இடைக்கால கொடுப்பனவாக ரூபா. 261,991 என்றவகையில் செலுத்தப்பட்டுள்ளது, |

**2.5 முற்பணம் செலுத்துதல் மற்றும் கணக்குத் தீர்த்தல்.**

பின்வரும் அவதானங்கள் இடம்பெற்றுள்ளது.

(அ) நிதி ஒழுங்குவிதிகள் 371(2) (இ) இன் பிரகாரம் முற்பணத்துக்குரிய பணிகள் முடிவுற்ற உடனே கணக்குத் தீர்க்கப்படுதல் வேண்டும் என்றாலும், ரூபா. 50,000 ஆக அமைந்த முற்பணங்கள 4 இனை தீர்ப்பதற்கு முற்பணங்கள் பெற்றுக் கொள்ளப்பட்ட திகதி முதல் 42 நாள் தொடக்கம் 114 நாட்கள் வரையான கால இடைவெளி எடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கின் கணக்கிணக்கக் கூற்றுக்கு ஏற்ப 2018 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு பணியிலிருந்து இடைநீக்கம் , சேவையிலிருந்து விலகிச் சென்றுள்ள மற்றும் இடமாற்றம் பெற்று சென்றுள்ள அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவைகளின் கூட்டுத்தொகை ரூபா. 3,290,000 ஆகும். அந்த மீதியாவுள்ள நிலுவைக்கிடையில் 01 வருடம் முதல் 05 வருடங்கள் வரையான காலத்திலிருந்து 04 அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை ரூபா. 744,602 ஆன தொகையாக காணப்பட்டது. மேலும், 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து 14 அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதியாகவுள்ள நிலுவை

ரூபா. 572,236 ஆன தொகையாகும் என்றாலும் அம் மீதியாகவுள்ள நிலுவை 2018 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**2.6 வைப்புக்கள்**

திணைக்களத்தில் சேவையாற்றும் வெளிக்கள அலுவலர்கள் 05 பேருக்கு வேறு சேவைகளுக்கு மாறிச் சென்றதன் காரணமாக அவ் அலுவலர்களுக்கு வழங்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளுக்காக அறவிட்டுக் கொள்ளப்பட்ட ரூபா. 696,500 ஆன தொகையை தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்துக்கு அனுப்பாமல் 2018 ஒக்டோபர் மாதம் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 3 – செயற்பாட்டு மீளாய்வு

**3.1 செயலாற்றுகை**

**3.1.1 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை**

2002 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12 ஆந் திகதிய மற்றும் 402 இலக்கதுடைய அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களினுள் மீளாய்வு ஆண்டுக்கு உரித்தான செயலாற்றுகை அறிக்கையை பாராளுமன்றத்தில் முன்னளிக்கப்படுதல் வேண்டும் என்றாலும் 2018 ஆம் ஆண்டுக்கு உரித்தான அறிக்கை 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 08 ஆந் திகதியாகியும் அங்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 பெறுகைகள்**

பின்வரும் அவதானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) திணைக்களத்தின் பிரிவு 06 இனை நவீனமயப்படுத்துவதற்காக தனிப்பட்ட ஒப்பந்தக்காரருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததோடு அவரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பற்றுச்சீட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் மற்றும் கணக்காய்வின் மூலம் பௌதீகப் பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டுள்ளவாறு மதிப்பீட்டுக்கு ஏற்ப பணிகளை மேற்கொள்ளாதிருந்து ரூபா. 332,151 ஆன தொகை நிறைவேற்றப்படாத பணிகளுக்காக ரூபா. 1,132,748 ஆன தொகை மேலதிகமாகவும் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) திணைக்களத்தின் தகவல்கள் தொழில்நுட்பப் பிரிவினை நவீனமயப்படுத்துவதற்காக பற்றுச்சீட்டுக்களுக்கு செலுத்தும் போது கணக்கிடப்பட்ட கோளாறின் காரணமாக ரூபா. 122,939 ஆன தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ளது.

(இ) அரச கணக்காய்வுப் பிரிவு, உள்ளக கணக்காய்வுப் பிரிவு மற்றும் முறைகேடு மற்றும் பங்களிப்புத் தொகைப் பிரிவிற்காக காற்றுப் பதனாக்க இயந்திரத்தை கொள்வனவு செய்தல் மற்றும் பொருத்தும் போது மேற்கொள்ளப்படாத செயற்பாடுகளுக்காக ரூபா. 114,954 ஆன தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ளது.

**3.3 நிதியியல் முறைகேடுகள் என்ற விதத்திலான கொடுக்கல் வாங்கல்**

(அ) கம்பஹ பிரதேச செயலகத்தின் மூலம் சிவில் மற்றும் விதவைகளாக ஓய்வூதியம் 02 இனைப் பெற்றுக் கொண்டிருந்து 2012 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆந் திகதியில் இறந்த ஓய்வூதிய அலுவலரின் ஓய்வூதியம் 2012 யூன் மாதம் தொடக்கம் 2016 திசெம்பர் மாதம் வரைய 55 மாதங்கள் ஓய்வூதியரின் வங்கிக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு வரவு வைக்கப்பட்ட ரூபா. 2,696,303 ஆன தொகை ATM அட்டையினைப் பயன்படுத்தி ஓய்வூதியரின் மகனினால் எடுக்கப்பட்டுள்ளது. அதில் ரூபா. 308,052 ஆன தொகை அவரினால் திணைக்களத்துக்கு செலுத்தப்பட்டிருந்தும் எஞ்சிய ரூபா. 2,388,251 ஆன தொகை 2019 யூன் மாதம் 30 ஆந் திகதியிலும் அதனை அறவிட்டுக் கொள்வதற்கு திணைக்களம் அவசியப்படும் நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(ஆ) ஓய்வூதிய இலக்கம் 01-600772 இன் கீழ் ஓய்வூதியம் பெற்றுக்கொண்டிருந்து 2013 நவம்பர் மாதம் 07 ஆந் திகதியன்று இறந்து போன அலுவலரின் 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் முதல் 2016 ஏப்ரல் மாதம் வரையான 29 மாதங்களுக்கான ஓய்வூதியத் தொகையான ரூபா.582,423 இனை ஓய்வூதியரின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. அவ்வப்போது ATM அட்டையினைப் பயன்படுத்தி இக் கணக்கிலிருந்து பணம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதோடு 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி வரையும் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூபா. 581,916 ஆன தொகையை அறவிட்டுக் கொள்வதற்காக திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) ஓய்வூதிய இலக்கம் 01-600575 இன் கீழ் கம்பஹ பிரதேச செயலகத்திலிருந்து தற்காலிக ஓய்வூதியமும், ஓய்வூதிய இலக்கம் 01-620195 இன் கீழ் மஹர பிரதேச செயலகத்திலி நிரந்தர அடிப்படையில் ஓய்வூதியத்தினை பெறுகின்ற 1991 சனவரி மாதம் முதல் 2016 பெப்ரவரி மாதம் 29 ஆந் திகதி வரையான 20 வருட காலங்கள் ஓய்வூதியங்கள் 02 இரண்டினை அலுவலரினால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு கம்பஹ பிரதேச செயலகத்திலிருந்து மேலதிகமாக பெற்றுள்ள பணத் தொகை ரூபா. 1,872,387 ஆகக் காணப்பட்டதோடு 2016 பெப்ரவரி மாதம் 10 ஆந் திகதி முதல் ஓய்வூதியம் செலுத்தப்படாமல் இடைநிறுத்தப்பட்டாலும், ஆனால் மேலதிமாக செலுத்தப்பட்டுள்ள பணத்தை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஓய்வூதிய இலக்கம் 21-0-105353 இனையுடைய ஓய்வூதிய அலுவலர் 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆந் திகதியன்று இறந்துள்ளார் என்பதுடன், ஓய்வூதித் தரவுத் தளத்தில் ஓய்வூதியரின் பிறந்த வருடமாக 1930 எனவும் தேசிய அடையாள அட்டை இலக்கம் 608212523V என்றவாறும் குறிப்பிடப்பட்டிருந்தது. தேசிய அடையாள அட்டை இலக்கம் அலுவலரின் மகளினதாக காணப்பட்டதோடு, இறந்த திகதி முதல் 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் ஓய்வூதியம் செலுத்துவதை நிறுத்தும் வரை அம்மாவின் ஓய்வூதியம் ரூபா. 1,562,470 ஆகக் காணப்பட்டது. இதனை மகள் போலியாக பெற்றுள்ளார்.

2011 ஆம் ஆண்டின் பின்னர் வாழ்வதற்கான சான்றிதழொன்று காணப்படாமை என்றதன் அடிப்படையில் ஓய்வூதியம் செலுத்துவது தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கு பிரதேச செயலகங்களின் ஓய்வூதியம் வழங்கும் அலுவலர்களினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை என்பதுடன் ஓய்வூதியத்துடன் தொடர்புடைய வங்கிக் கணக்குகளுக்கு வைப்புச் செய்தும் இருந்தார்கள்.

### 3.4 நட்டம் மற்றும் சேதங்கள்

இவ்விடயம் தொடர்பாக பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள அவதானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) நிதிக் கூற்றுக் பதிவேட்டு இலக்கம் 1 இல் மீளாய்வு ஆண்டின் போது தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டிய ஓய்வூதியத்தை மேலதிக செலுத்தற் பெறுமதி ரூபா. 591 மில்லியனாகும். இந்த நிதியாண்டு 10 இனை விட அதிக காலத்திலிருந்து நடைபெற்று வருவதோடு ரூபா. 8 மில்லியனாலும் 5 வருடங்களிலிருந்து 10 வரையான கால அளவுக்கிடையில் நடைபெறுவதால் ரூபா. 37 மில்லியனும் மற்றும் 5 வருடங்களுக்கு குறைந்த காலத்துக்குரிய ரூபா. 546 மில்லியனும் உள்ளடங்குகின்றது. என்றாலும் இம் மேலதிகமாக செலுத்தியதை அறவிட்டுக் கொள்வதற்காக அவசியப்படும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நட்டம் மற்றும் சேத ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி மற்றும் 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியுடன் முடிவடையும் மற்றும் ஆரம்ப நிலுவையுடன் ஒப்பிடும் போது பிரதேச செயலகங்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ள அறவிடல்களுக்கு ஏற்ப பிரதேச செயலகங்கள் 213 உம் மற்றும் திணைக்களங்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ள அறவிடல்களுக்கு ஏற்ப 231 பிரதேச செயலகங்கள் எனவும் குறிப்பிடப்பட்டிருப்பதானது இணக்கமின்மை அவதானிக்கபட்டுள்ளது.

(இ) 2015 யூலை மாதம் 05 ஆந் திகதி மற்றும் இலக்கம் 5/2015 இனைக் கொண்ட ஓய்வூதியச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஓய்வூதியம் பெறுநருக்கு / பங்களிப்பாளருக்கு வயது 55 வரை இறுதியாக சேவையாற்றிய நிறுவனத்தினால் சம்பளம் வழங்கப்படுமாயின் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 6/2006 இற்கு ஏற்ப ஓய்வூதியம் திருத்தியமைக்கப்படத் தேவையில்லை என்றாலும் அதற்கு முரணாக வரகாபொலை பிரதேச செயலகத்தினால் ஒரு விதவைக்கு ஓய்வூதியத்தை திருத்தியமைத்து 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வரை ரூபா. 156,081 ஆன தொகையை மேலதிமாக செலுத்தப்பட்டுள்ளது.

(ஈ) ஓய்வூதியத் தரவுத் தளத்தை பரீட்சித்துப் பார்க்கும் போது ஓய்வூதியம் பெறுநர் ஒருவரின் ஓய்வூதிய இலக்கம் 521426 இன் கீழ் சிவில் ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதிய இலக்கம் 02-1101946 இன் கீழ் ஆசிரியர் ஓய்வூதியமாக ஓய்வூதியங்கள் 2 இனை வரலாற்றுத் தாள்கள் 2 இனை சமர்ப்பித்து பெற்றுக் கொண்டுள்ளார். இந் நபருக்கு ஓய்வூதிய இலக்கம் 01-521426 இன் கீழ் 2010 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் வரை ரூபா. 1,535,224 ஆன தொகையும், ஓய்வூதிய இலக்கம் 02-1101946 இன் கீழ் 2011 ஆம் வருடத்திலிருந்து 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் வரை ரூபா. 3,562,555 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பரீட்சித்துப் பார்த்து மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகையை மிள அறவிட்டுக் கொள்வதற்காக திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 பொருளாதார நோக்கமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

துணைச் சேவை சாளர இயக்குநர் பதவிகள் 02 இற்கான ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்காக 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 05 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்டுள்ள பத்திரிகை அறிவித்தலுக்காக ரூபா. 156,984 ஆன தொகை செலவிடப்பட்டிருந்தும் 2019 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆந் திகதியாகும் வரையிலும் ஆட்சேர்ப்பு இடம் பெற்றிருக்கவில்லை.

### 3.6 முகாமைத்துவ பாலவீனங்கள்

(அ) அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 6/2006 இற்கு ஏற்ப ஓய்வூதிய திருத்தங்களை மேற் கொள்ளாத நீர்கொழும்பு, மீரிகம, கம்பஹ, அலவ்வ, வரகாபொல, வத்தளை போன்ற பிரதேச செயலகங்கள் 06 இனதும் ஆவணக் கோப்புக்களின் எண்ணிக் கை 669 ஆக காணப்பட்டது.

(ஆ) இலக்கம் 1719/3 மற்றும் 2011 ஆகஸ்ட் மாதம் 15 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் பிறப்பிலே பூரண அங்கவீனரல்லாத நபர்களுக்கு 05 வருடங்களுக்கு ஒரு முறை வைத்தியக் குழுவிடம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும் என்றாலும், நீர்கொழும்பு, மீரிகம, கம்பஹ, அலவ்வ, ரம்புக்கன

போன்ற பிரதேச செயலகங்களில் பிறப்பிலே பூரண அங்கவீனமுறாத நபர்கள் எவருக்கும் ஒருபோதும் வைத்திய குழுவிடம் அனுப்பப்பட்டிருக்கவில்லை.

(இ) ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தின் 2014 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 16 ஆந் திகதிய சுற்றறிக்கை கடித இலக்கம் 04 இன் படி முதற் மாதாந்த ஓய்வூதியம் செலுத்துதலை ஆரம்பித்து அதிகபட்சமாக 03 மாதங்கள் செலுத்தப்படும் போது ஓய்வூதிய கடித ஆவணங்கள் குறித்த பிரதேச செயலகத்துக்கு கிடைக்கப்பெற வேண்டும் என்றாலும், நீர்கொழும்பு, கம்பஹ மற்றும் வரகாபொல ஆகிய பிரதேச செயலகங்கள் 03 இலும் 03 மாதங்கள் கடந்ததன் பின்னரும் ஓய்வூதிய ஆவணக் கோப்புகள் 65 கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. கோப்பு கிடைக்கப்பெற வேண்டிய தினத்திலிருந்து தாமதமடைந்த காலம் 01 மாதம் முதல் 16 மாதங்கள் வரையாக காணப்பட்டது,

(ஈ) ஓய்வூதியப் பெறுநர்கள் இறப்பதனை அப்போதே அறிவிக்கப்படாமை

i. கிராம உத்தியோகத்தரினால் ஓய்வூதியப் பெறுநர்களின் இறப்பினை குறித்த திகதியில் அறிவிக்காமை காரணமாக கம்பஹ பிரதேச செயலகத்தின் ஊடாக ஓய்வூதியத்தைப் பெற்று இறந்து போன ஓய்வூதியர்களின் வங்கிக் கணக்குகளில் இருந்து ஓயவூதியமாக செலுத்தப்பட்ட ரூபா. 2,518,420 ஆன தொகையை மீள பெற்றுக்கொள்வதற்காக ஓய்வூதியப் பெறுநர் இறந்த நாள் முதல் ஒரு வருடத்துக்கு மேற்பட்ட காலம் கடந்திருக்கின்றது. இவ்வாறு செலுத்தப்படாத ஓய்வூதியம் வேறு வங்கிக் கணக்குகள் செயலிழந்துள்ள சந்தர்ப்பங்கள் இங்கு அவதானிக்கப்பட்டுள்ளது.

ii. ஓய்வூதியம் பெறுநர் இறந்து விட்டதாக பிரதேச செயலகத்திற்கு அறிவிக்கப்படாமை காரணமாக இறந்து போன ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதியம் செலுத்தப்பட்டிருந்ததுடன், கம்பஹ பிரதேச செயலகத்தில் 2016 ஆம் ஆண்டு இறந்த ஓய்வூதியர்கள் 10 பேருக்கு மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா. 336,378 ஆன தொகை மற்றும் 2017 ஆம் ஆண்டில் இறந்த ஓய்வூதியம் பெறுநர்கள் 7 பேருக்கு மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகை ரூபா. 750,390 ஆக மொத்த தொகையையும் 2018 திசெம்பர் மாதமாகும் போது அறவிடப்பட்டிருக்கவில்லை.

(உ) ஆவணக் காப்பகத்தின் உரிய வகையில் பேணிச் செல்லாமை

கம்பஹ பிரதேச செயலகத்தில் 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆந் திகதிய தரவுத் தளத்திற்கு ஏற்ப ஓய்வூதியம் பெறுநர்களின் எண்ணிக்கை 11,274 ஆகக் காணப்பட்டதோடு, அவர்களில் 10,963 பேர்களின் கோப்புகள் ஆவணக் காப்பகத்தில் வைக்கப்பட்டுள்ளது. ஆவணக் காப்பகத்தின் கோப்புக்கள் மிக விரைவாக தேடிக் கொள்ள முடியுமான வகையில் வகைப்படுத்தி அடுக்கி வைக்கப்பட்டிருக்கவில்லை. கோப்புக்கள் ஒழுங்கின்றி அடுக்கப்பட்டிருந்ததோடு, கோப்புக்கள் தூசு படிந்தும் ஒட்டறை கட்டியும் நாசமடைந்து செல்லும் நிலைக்கு உட்பட்டிருந்ததோடு, அவை வைக்கப்பட்டிருந்த இடத்துக்கேற்ப கோப்புக்களுக்கு போதுமானளவு பாதுகாப்பு

காணப்பட்டதாகவும் அவதானிக்கப்பட்டது. மேலும் புதிதாக தயாரிக்கப்பட்டிருந்து ஆவணக் காப்பகம் கணக்காய்வு செய்யப்பட்ட திகதியன்றும் செயற்பாடின்றி காணப்பட்டது.

(ஊ) இலக்கம் 9/2008 ( திருத்தியமைக்கப்பட்ட II) இனைக் கொண்ட 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 17 ஆந் திகதிய ஓய்வூதியச் சுற்றறிக்கையின் பிரகாரம் சேவைக் காலம் பூர்த்தியடையாத ஓய்வூதியர்களுக்காக செலுத்தப்பட்ட ஊன ஓய்வூதியத்தினை செலுத்துவது நிறுத்தப்பட்டு 59 ஆம் வகுதியின் கீழ் செலுத்தப்பட்ட அடிப்படை சம்பளத்துடன் ஊன ஓய்வூதிய தரவுத் தளத்தினுள் DSA இனை நீக்கிக் காட்டுதல் வேண்டும் என்பதாலும் வரகாபொல மற்றும் அலவ்வ பிரதேச செயலகங்களில் ஓய்வூதியத்தை இணைந்த அடிப்படையில் காணப்படவில்லை எனவும் அவதானிக்கப்பட்டுள்ளது.

(எ) கம்பஹ பிரதேச செயலகத்தின் தடுக்கப்பட்ட அறிக்கைகளுக்கு ஏற்ப ஓய்வூதியர்கள் 03 பேர் 2018 சனவரி மாதம் முதல் 01ஆந் திகதிக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா. 695,631 ஆன தொகை மேலதிக செலுத்துகை 2018 ஆம் ஆண்டு யூ லை மாதம் 07 ஆந் திகதியின் போதும் அவ்வாறே நிலவியதுடன், இதில் ரூபா. 582,423 ஆன தொகை மேலதிக செலுத்துகையை அறவிட்டுக் கொள்ளுமாறும் வழக்கு பதியப்பட்டுள்ளது.

(ஏ) 02 பிரதேச செயலகங்களில் மேலதிகமாக செலுத்தப்பட்ட ஓயவூதியத்தை மீள அறவிடுவது தொடர்பாக காலாண்டு அறிக்கைக்கு ஏற்ப 09 சந்தர்ப்பங்களில் ரூபா. 745,299 ஆன தொகையை மேலதிகமாக செலுத்துதல், அறிக்கையிடப்பட்ட திகதி முதல் மீள அறவிட்டுக் கொள்ள ஆரம்பிப்பதற்கு 08 மாதங்கள் தொடக்கம் 16 மாதங்கள் வரை யான கால இடைவெளியொன்று கடந்துள்ளது.

(ஐ) ஓய்வூதியம் செலுத்தப்படும் அனைத்து ஓய்வூதியர்களுக்குமாக ஓய்வூதியக் கோப்பொன்று நடாத்திச் செல்லப்படல் வேண்டும் என்பதோடு நீர் கொழும்பு, மீரிகம, கம்பஹ, அலவ்வ, வரகாபொல, வத்தளை ஆகிய பிரதேச செயலகங்கள் 6 இலும் ஆவணக் கோப்புக்கள் இன்றி ஓய்வூதியர்கள் 512 பேருக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

(ஒ) நீர்கொழும்பு பிரதே செயலகம் ஓய்வூதியர்கள் 54 பேருக்காக தயாரிக்கப்பட்டுள்ள தற்காலிக கோப்புக்களில் உள்ள ஆவணங்களை திணைக்களத்துக்கு அனுப்பி வைப்பதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதோடு, ஓய்வூதிய தரவுத் தளத்திற்கு ஏற்ப பிரதேச செயலகங்களின் எல்லைக்கு அப்பால் வெளியே வதியும் ஓய்வூதியர்கள் 23 பேர் நீர்கொழும்பு பிரதேச செயலகத்தினால் ஓய்வூதியத்தினை பெற்றுக் கொள்கின்றார்கள்.

(ஓ) ஓய்வூதியம் செலுத்தும் தரவுத் தளத்தில் தேசிய அடையாள அட்டை இலக்கமின்றி நீர்கொழும்பு, மீரிகம,கம்பஹ, அலவ்வ, வரகாபொல மற்றும் வத்தளை போன்ற பிரதேச செயலகங்கள் ஆறிலும் ஓய்வூதியம் செலுத்துகை நடைபெறும் 99 சந்தர்ப்பங்கள் நிலவுவதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

## 4- மனித வள முகாமைத்துவம்

**இணைக்கப்பட்டுள்ள பதவியனியில் உண்மையான பதவியனி மற்றும் தனிப்பட்ட ஊதியத்துக்கான செலவுகள்**

2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு அங்கீகரிக்கப்பட்ட, உண்மையான, வெற்றிடமான மற்றும் மேலதிக பணியாட்தொகுதியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு காணப்படுகின்றது.

| தொடரிலக்கம் | சேவை வகுதி | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை | உண்மையான ஊழியர்களின் எண்ணிக்கை | வெற்றிடமாக உள்ள எண்ணிக்கை | மேலதிக ஊழியர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | சிரேஷ்ட மட்டம் | 34 | 24 | 10 | - |
| 2 | மூன்றாம் நிலை மட்டம் | 11 | 06 | 05 | - |
| 3 | இரண்டாம் நிலை மட்டம் | 1078 | 942 | 136 | - |
| 4 | ஆரம்ப மட்டம் | 75 | 57 | 18 | - |
| 5 | ஏனைய (அமய) | 06 | 08 | - | 02 |
| | **மொத்தம்** | **1204** | **1037** | **169** | **02** |

அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் 2009 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20 ஆந் திகதிய மற்றும் இலக்கம் 1589/30 இனையுடைய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நடைமுறை ஒழுங்குவிதி 1 ஆம் வகுதியின் 18 ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப ஓய்வூதிய அலுவலர்கள் மற்றும் ஆவண உதவியாளர் அலுவலர்களுக்கான வருடாந்த இடமாற்றக் கொள்கையின் பிரகாரம் ஒரே சேவை நிலையத்தில் 05 வருடங்களுக்கு மேலதிக காலத்தை பூரணப்படுத்தியுள்ள அலுவலர்கள் கட்டாயமாக இடமாற்றம் செய்யப்படுவார்கள் என குறிப்பிட்டுக் காட்டப்பட்டாலும் 8 அலுவலர்கள் 10 வருடங்களுக்கு மேலதிகமான காலத்தையும், 11 அலுவலர்கள் 6 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலத்திலும் ஓய்வூதியத் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தில் சேவையில் ஈடுபட்டுள்ளார்கள்.

டி..ஜீ.ஐ. பத்மிணி
உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குப் பதிலாக.